உம்

பிரசண்ட விகடன்

" இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல் "

மலர் 4. சென்னை, 1936௵ ஆகஸ்டு௴ 1௳ இதழ் 9.

MAHAMAHO... DR. U. V. S... LIBRARY, ... MADRAS-90.

உள்ளுறை.

	விஷயம்.	பக்கம்.
1.	சீர்திருத்தத்தைக் கண்டு சீற்றமா?	2
2.	முஸோலினிக்கு முடிசூட்டு வைபவம் (படம்)	5
3.	காலச் சக்கரம்	6
4.	சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை)	10
5.	ஆக்ஞை	17
6.	கலெக்டர் ராமநாதய்யர்	22
7.	என் நாய்க்கடி வைத்தியர்	25
8.	விளம்பர விநோதங்கள்	28
9.	குமாரதேவி	30
10.	பத்மாவின் போக்கு	35
11.	கோணங்கி வேலை	39
12.	" இன்னமும் ஒரே ஒரு நிமிஷம் "	43
13.	மருமகள் துயரம்	45
14.	ஆடல் பாடல்	49

" விகடனி "ல் வரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே; தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.



சீர்திருத்தத்தைக் கண்டு சீற்றமா?

இதென்ன இது! இருந்தாற்போலிருந்து வைதீகசநாதன உலகில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறதே! இதுவரை இருந்த விடம் தெரியாதிருந்த வைதீகப் பிராமண சபைகளும், சநாதன தர்ம சபைகளும் தீவிரமாக வேலைசெய்ய ஆரம்பித்து விட்டன. பிரபல அட்வொகேட்டுகளாகவும், பேரறிஞர்களாகவுமுள்ள சநாதனத் தலைவர்களும் வைதீகப் பெரியார்களும் கூட்டங்கூடிப் பிரமாதமாகப் பேசத் தொடங்கி விட்டனர். இவ்வித ஆர்ப்பாட்டங்களுக்கெல்லாம் காரணமென்ன? சமீபத்தில் கூடப்போகும் இந்தியா சட்டசபைக் கூட்டத்தில் நான்கு சீர்திருத்த மசோதாக்கள் சபையின் அங்கீகாரத்துக்கு வரவிருக்கின்றன. அவையாவன:—

(1) பாலிய விவாக சட்ட திருத்த மசோதா.

(2) இந்து மாதர் சொத்துரிமை மசோதா.

(3) இந்து கலப்புமண சட்டக் கட்டுப்பாட்டு மசோதா.

(4) தீண்டாதார் உரிமைத் தடை நீக்க மசோதா.

இந்நான்கு மசோதாக்களும் முறையே ஸ்ரீ. எம். பி. தாஸ், டாக்டர் ஜீ. வி. தேசமுகர், டாக்டர் பகவான் தாஸ், ஸ்ரீ. எம். ஸி. ராஜா ஆகியோரால் கொண்டுவரப்படும்.

இம் மசோதாக்கள் இந்தியா சட்ட சபைகளில் வரவிருப்பதையறிந்து வைதீகர்களும் சநாதனிகளும் ஆர்ப்பாட்டஞ் செய்வதைக் கண்டு விகடன் ஆச்சரியப்படவில்லை. சட்டசபைகளில் மத சம்பந்தமாகவோ சமூக சம்பந்தமாகவோ சீர்திருத்த மசோதாக்கள் வரும்போதெல்லாம் சநாதனிகள் கிளர்ச்சிசெய்வது வழக்கம். மேற்படி மசோதாக்கள் ஜனசமூகத்துக்கு நன்மை தருவனவா? தீமை விளைப்பனவா? என்பதை அவர்கள் ஆராய்ந்துகூட பார்ப்பதேயில்லை. எடுத்ததற்கெல்லாம் அவர்கள் 'மதம் போச்சு! கடவுள் போச்சு! குடி முழுகி விட்டது! என்று கூக்குரலிடாமலிருப்பதில்லை. சமீபத்தில், ஸ்ரீ ஹரிவிலாச சாரதா கொண்டுவந்த பாலிய விவாகத்தடை மசோதாவும், ஸ்ரீ ஸி. எஸ். ரங்கையர் கொண்டு வந்த தீண்டாதார் ஆலயப் பிரவேச மசோதாவும் இந்தியா சட்டசபைக்கு வந்த காலத்து இந்த வைதீகர்களும், சநாதனிகளும் செய்த ஆர்ப்பாட்டங்களை வாசக நேயர்கள் இதற்குள் மறந்திருக்க முடியாது. ஆகவே, இவர்களது எதிர்ப்பைப் பொருட்படுத்தாது, இந்தியா சட்டசபையங்கத்தினர்கள் இந்நான்கு மசோதாக்களையும் ஏக மனதாக நிறைவேற்றி வைத்து கூடியசீக்கிரம் அவை சட்டமாக்கப்பட்டு அமுலுக்கு வரும்படி செய்ய வேண்டுமென்று "விகடன்" கேட்டுக் கொள்ளுகிறான்.

* * *

பாலிய விவாக சட்ட திருத்த மசோதா முதலிய மசோதாக்கள் ஜன சமூகத்துக்கு எவ்வளவு தூரம் நன்மையைச் செய்யக் கூடியவை என்பதை "விகடன்"

எடுத்துக் கூறவேண்டியதில்லை. இம் மசோதாக்களை இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள பொது மக்கள் நல் வரவேற்கின்றனர். பம்பாய் மாதர் சங்கத்தாரும், அலகாபாத் மாதர் மகாநாட்டினரும் இவைகளை முழுமனதுடன் ஆதரிக்கின்றனர். ஆனால் கூர்ஜரத்திலுள்ள யாரோ சில மங்கையர் பாபு பகவான் தாஸின் கலப்புமண மசோதாவை எதிர்க்கின்றனராம். அவர்கள் இம் மசோதா தங்கள் உரிமையைத் தடை செய்வதாக இருக்கிறது எனக் காரணங் காட்டுகின்றனராம். எவ்விதத்தில் இம் மசோதா இம் மங்கையர் உரிமையைப் பறிக்கிறதென "விகட"னுக்கு விளங்கவில்லை. மேற்படி மசோதாவின் முழு விவரமும், வாசக அமைப்பும் வெளியாவதற்கு முன்பே, இந் நங்கையர் அதில் தப்பு கண்டு பிடிக்கத் துணிந்துவிட்டது அவர்களது அறியாமையையும், அவசர புத்தியையுமே காட்டுகிறது. கும்பிருட்டிலேயே பல நாள் அடைபட்டுக் கிடந்தவனுக்குத் திடீரென ஜோதி தோன்றினால் அவனுக்குக் கண் கூசுவது இயற்கைதானே! அதுபோல, அடிமைத் தளையிலேயே பல்லாயிர வருஷங்களாகக் கட்டுண்டு கிடந்த பெண்மணிகளுக்குத் திடீரென விடுதலை யேற்படுவதாயின் என்னமோபோல இருக்கத்தான் செய்யும். இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஆகவே, அவர்களிடத்து அனுதாபஞ் செலுத்த வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. வைதீக சநாதனிகளில் சிலர் இந்த கூர்ஜர மாதர்களது பிற்போக்கான மனப்பான்மையை ஆதாரமாகக் கொண்டு கூத்தாடுகிறார்களாம். என்னே! இவர்களது திருவிளையாடல்! கோயாளி டாக்டர் கொடுக்கும் மருந்தை எக் காரணத்தாலோ வேண்டாமென்று கூறுவதாலேயே, அம் மருந்து நல்லதல்ல என்று யாராகிலுங் கூறத் துணிவார்களா? அவ்வாறு கூறினால் தான் அறிவுடையாகுமா? இதைக் கூர்ஜர மாதர்கள் பின்னே தாளம் போடும் வைதீகர்கள் கவனித்தல் வேண்டும்.

நமது இந்து சமூகத்திலேயே மிகவும் பரிதபிக்கத் தக்க நிலையிலிருப்பவர்கள் பெண்மணிகளும், தாழ்த்தப்பட்டவர்களுமேயாவர். அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருப்பதில் இவ் விருதிறத்தாரும் சமமானவர்களே யாவர். வெளித் தோற்றத்தில் வேண்டுமானால் வேறுபாடிருப்பதாகத் தோன்றலாம். இப்போது வந்திருக்கும் நான்கு மசோதாக்களில், மூன்று பெண்கள் சம்பந்தப் பட்டனவாகவும், ஒன்று தாழ்த்தப்பட்டார் சமூக சமத்துவ உரிமை சம்பந்தமாகவும் இருப்பதிலிருந்தே அவர்கள் அனுபவித்துவரும் கஷ்ட நஷ்டங்களின் தன்மை நன்கு புலப்படும்.

இந்தப் பெண்களுக்குச் சொத்துரிமை வார்சுரிமை இல்லாதிருப்பதனால் அவர்கள் சமூகத்தில் எத்தனையோ விதமான விவரித்துச் சொல்ல முடியாத கஷ்டங்களை யனுபவிக்கின்றனர். ஒரு பெண் பிறந்திலிருந்து இறக்கும்வரை சுதந்தரமின்றியே துயரத்தில் கிடந்து உழல்கிறாள். பெண்ணென்றவுடனேயே பெற்ற தாய்க்கும் முகஞ் சுளிக்கிறது; வெறுப்பு ஏற்படுகிறது. பெற்றோர்கள் பெண்களைப் பெரும் பாரமாகக் கருதுகின்றனர். தற்காலத்தில் ஒரு மங்கைக்குத் தாய் தந்தையர் வீட்டிலோ, புருஷன் இல்லத்திலோ, மகனது மனையிலோ எந்தவிதமான உரிமையும், அந்தஸ்தும் கிடையாது. அவள் ஆடவருடைய அனுமதியின்றித் தான் சொந்தமாக ஒன்றை நினைக்கவோ செய்யவோ முடியாது அவதிப்படுகிறாள். எதற்கும் பிறரையே எதிர்பார்த்து வாழ வேண்டியவளாயிருக்கிறாள். சகல சுகபோகங்களையும் அனுபவிக்கும் பணக்காரர்கள், ஜமீன்தார்கள், ராஜாக்களின் மனைவிமார்கள்கூட தங்கள் கணவன்மாருக்குப் பின், சொல்ல முடியாத கஷ்டத்தை யனுபவிக்கின்றனர். கன்னிப் பெண்ணாகவோ புருஷனுடன் வாழும் மங்கையாகவோ இருக்கும் வரையிலாவது பெண்மணிகளுக்கு அடிமைத் தனத்திலும் ஒருவித ஆதரவும், ஆறுதலுமிருக்கிறது. விதவையான பின்போ, மங்கையர் அடை-

யும் கேவலநிலைமை-நிராதரவான நிலைமை-வருணனைக் கடங்காது. விதவை மகளிர் காயினும் கேவலமாக நடத்தப்படுகின்றனர். பெற்றோர் சொத்திலோ இப் பெண்களுக்குச் சிறிதும் பங்கு கிடையாது. புருஷன்மார் பொருளிலோ—அவர்களாக இவர்களது பிற்கால வாழ்வுக் கென்று ஏதோ எழுதி வைத்திருந்தாலன்றி—ஒரு செப்புக்காசும் இவர்களுக்குக் கிடைக்காது. இந் நிலையில் இவர்களை ஆதரிக்கும் புதல்வர்களும் இல்லை யென்றால், அப்புறம் இவர்களது நிலைமை யென்ன? விதவை மகளிர் தாங்கள் உயிர் வாழ்தற்கு ஒன்று பிச்சை யெடுக்கவேண்டும்; இல்லையேல், மானத்தை விற்கவேண்டும். இவ் விரு வழிகளிலும் அவர்கள் மனஞ்செல்லவில்லையானால், அவர்களுக்குப் பாழுங் குளம் குட்டைகள்தான் கதி. இவ்வித சம்பவங்களை நாம் தினசரி கண்டுங் கேட்டும் வருகிறோம். பெண்களின் இப் பரிதாப நிலைமையை வைதீக சநாதனப் பெரியோர்கள் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஆதிகாலத்தில் நமது பெண்மணிகளது நிலைமை இவ்விதமா இருந்தது? இல்லை; ஒருகாலும் இல்லை. ஜனசமூகத்தில் ஆண்கள் எவ்விதம் சகல உரிமைகளையும் அநுபவித்து வந்தார்களோ அது போலவே பெண்களுஞ் சரிசமமாக உரிமைகளை அநுபவித்து வந்தனர். இது புனைந்துரையன்று; உண்மையே. சதிக் கொடுமையை யொழித்த முதல் இந்திய சீர்திருத்தப் பெரியாராகிய ராஜா ராம் மோஹன்ராய், இதற்கு வேண்டிய சான்றுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

பரோடா, மைசூர், திருவாங்கூர் முதலிக் சுதேசி சமஸ்தானங்களில் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ சமூகத்திலும், முஸ்லிம் சமூகத்திலும் பெண்களுக்குச் சொத்துரிமை அளிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, நமது இந்துப் பெண்களுக்கு மட்டுஞ் சொத்துரிமை யளித்தால் என்ன குடி முழுகியா போய் விடும்?

இப்போதுள்ள இந்து சட்டம் இந்து பெண்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்க வில்லையாதலால், அதை மாற்றி யமைக்க வேண்டு மென்று பல காலமாகவே, பரந்த நோக்கமுள்ள பெரியார்களும், இந்திய மாதர் சங்கங்களும் கிளர்ச்சி செய்து வருகின்றனர். அக் கிளர்ச்சி இதுவரை பலித மடையாமலே இருந்து வருகிறது. இப்போது மீண்டும், டாக்டர் தேசமுகர் இது சம்பந்தமாக மசோதா ஒன்று கொண்டு வந்திருக்கிறார். இம் மசோதாவை இந்தியா சட்டசபை உடனே எடுத்துக்கொண்டு மசோதாவின் பல்வேறு அம்சங்களையும் பரிசீலனை செய்து கூடிய சீக்கிரம் நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று இந்தியா சட்டசபையிலுள்ள அங்கத்தினர்களை 'விகடன்' மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்ளுகிறான்.

மாதர் சொத்துரிமை மசோதா முதலிய நான்கு மசோதாக்களையும் நிறைவேற்றி வைக்கும் விஷயத்தில் நமது மாகாண பிரதிநிதிகளான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி முதலியோர் ஒன்றுசேர்ந்து ஒத்துழைப்பார்களென்று "விகடன்" நம்புகிறான்.



முஸோலினிக்கு முடி சூட்டு வைபவம்.

வல்லரசுகளெல்லாம் ஒன்று கூடி முஸோலினிக்கு முடி சூட்டின. ஆனல், எதியோபியாவில் இன்னமும் நடந்துவரும் யுத்தத்தைப் பார்த்தால் முஸோலினி பாட்சி அங்கு நிலைக்குமா? என்பது சந்தேகமாயிருக்கிறது.

காலச்சக்கரம்

கைதிகளைக் காக்கும் கருணாமூர்த்தி

கைதிகளைக் கரையேற்ற இவ்வுலகில் அருமையாக அவதாரஞ் செய்திருக்கும் கருணாமூர்த்தி யாரென்று வாசகர்களே! உங்களுக்குத் தெரியுமா? ஏன் விழிக்கிறீர்கள்? அப் புண்ணிய புருஷர்தான் திவான் பகதூர் கோபதி நாராயணசாமி செட்டியார் அவர்களாவர். அவரைத் தவிர அத்தரும கைங்கரியத்துக்கு வேறு யார் தகுதிவாய்ந்தவர்கள்? ஸ்ரீமான் செட்டியார் செய்துவரும் பொதுநலச் சேவையில் முக்கால்பாகம் சிறைச்சாலைகளைப் பார்வையிடுவதும், அவைகளில் இருக்குங் கைதிகளுக்கு இதோபதேசம் புரிவதும், அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து தருவதுமே யென்பதை யறியாதார் யார்?

சில வருடங்களாகவே திவான்பகதூர் நாராயணசாமி செட்டியார் தமது குடும்ப சகிதமாய் பல சிறைச்சாலைகளுக்குஞ் சென்று கைதிகளைப் பார்வையிட்டு அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து வருகிறார். இத்தகைய காருண்ய மூர்த்திக்கு நன்றி செலுத்தக் கைதிகள் ஏழு பிறவிகளிலும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

* * *

விபரீத வாழ்த்து

சமீபத்தில் திவான்பகதூர் செட்டியார் மைசூருக்குச் சென்றார். அங்கும் அவர் கைதிகளை மறக்கவில்லை. பங்களூர் மத்திய சிறைக்கும், மைசூர் சப் ஜெயிலுக்கும் அவர் விஜயஞ் செய்து சிறைச்சாலைகளையும், கைதிகளையும் பார்வையிட்டிருக்கிறார். எங்கு சென்றாலும் கனம் செட்டியாருக்குச் சிறைச்சாலைகள் சுவர்க்க லோகங்களாகவும், கைதிகள் சுக புருஷர்களாகவுந் தோன்றுவது இயற்கையாயிற்றே! அப்பேர்ப்பட்ட அந்தமான் தீவே அவருக்குத் தேவேந்திர லோகமாகக் காட்சி யளித்தபோது, மற்ற சிறைச்சாலைகள் ராஜ மாளிகைகளாகக் காணப்பட்டதில் ஆச்சரியமென்ன விருக்கிறது? ஆகவே அவர் மேற்படி சிறைச்சாலைகளை எவ்விதம் பாராட்டிப் பேசியிருப்பார் என்பதை யெடுத்துக் கூற வேண்டியதில்லை. ஆனால், ஸ்ரீமான் செட்டியார் மைசூர் விடுதலைக் கைதிகள் சங்கத்தைப்பற்றிக் கூறியிருப்பதைப் படிக்கும்போதுதான் "விகட"னுக்குத் தூக்கி வாரிப்போட்டது. அடுத்த நிமிஷம் "விகடன்" விழுந்து விழுந்து சிரிக்கலானான். திவான்பகதூர் செட்டியார் தம்மை அறிந்தோ அறியாமலோ தம் வார்த்தை வாயிலாக நமக்கு ஹாஸ்ய விருந்து அளித்திருக்கிறார். அவ்வாறு ஹாஸ்ய ரசத்தை யுண்டுபண்ணிய அவ்வார்த்தை யென்ன என்றறிய வாசக நேயர்களே! அவசரப்படுகிறீர்கள். இதோ கூறி விடுகிறேன். ஸ்ரீமான் செட்டியார் மைசூர் விடுதலைக் கைதிகள் சங்கம் சிறப்பாக நடப்பதைப் பாராட்டி வாழ்த்தும்போது, "இச்சங்கமானது இன்னும் பல கிளை ஸ்தாபனங்களுடன் முன்னேற்றமடையவேண்டும்" என்று கூறினாராம். நிறைமொழி மாந்தரான ஸ்ரீமான் செட்டியாரது மேற்படி வாழ்த்து பலித்துவிடுமானால் என்ன விபரீதம் விளையுமென்று

கருதுகிறீர்கள். குற்றவாளிகள் லட்சக் கணக்கில் பெருகிக் கொண்டன்றோ போக வேண்டும்? அப்படி சென்றால்தானே விடுதலைக் கைதிகள் உதவிச்சங்கம் பல கிளைகளாக (ஸ்ரீமான் செட்டியார் விருப்பப்படி) பல்கிப் பெருகமுடியும்? அவ்வாறு பெருக வேண்டு மென்பதா திவான் பகதூர் செட்டியாரது உண்மையான விருப்பம்? அவ்விதமல்ல. ஸ்ரீமான் செட்டியார் சம்பிரதாயமாகச் சங்கங்களை வாழ்த்துவது போல், இவ்விடுதலைக் கைதிகள் சங்கத்தையும் தம்மை மறந்து வாழ்த்திவிட்டார்.

* * *

நியமன ஸ்தானங்கள் யாருக்கு?

ஸ்தல ஸ்தாபனங்கள், மாகாண சபைகள், இந்திய சட்டசபைகளில் அங்கம் வகித்துக் காரியங்களை நடத்துவதற்கு, பொது ஜனங்கள் தங்களில் தகுதி வாய்ந்தவர்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து அனுப்புவது வழக்கம். சர்க்காரகப் பார்த்து சிலரை நியமனஞ் செய்வார்கள். இவ்வித நியமன ஸ்தானங்கள் தேர்தலில் வர முடியாத சிறு பான்மை வகுப்பாருக் கென்றே ஏற்பட்டவையாகும். அம் முறையில் தான் காலஞ்சென்ற ஸ்ரீ பிஞ்சல சுப்பிரமணியஞ் செட்டியார் சிறுபான்மை வகுப்புகளில் ஒன்றான தேவாங்க வகுப்புப் பிரதிநிதியாய்ச் சென்னை சட்டசபையில் பதவி வகித்து வந்தார்.

* * *

இது நியாயமா?

ஸ்ரீமான் செட்டியார் சமீபத்தில் மரண மடைந்து விட்டதால், அவர் வகித்து வந்த சட்டசபை யங்கத்தினர் ஸ்தானம் காலியாய் விட்டது. அந்த ஸ்தானத்துக்கு வேறொருவரை நியமனஞ் செய்ய வேண்டியது அவசியம். எனவே அந்த ஸ்தானத்துக்குத் தேவாங்க வகுப்பைச் சேர்ந்த ஒருவரையோ, அல்லது சிறுபான்மை வகுப்பினரில் ஏதோ ஒரு வகுப்பைச் சேர்ந்த ஒருவரையோ நியமனஞ் செய்வதுதான் நியாயமும் முறையுமாகும். அவ்விதமிருக்க மேற்படி ஸ்தாபனத்துக்கு டிபுடி ரிஜிஸ்டிரா யிருந்து ரிடையரான ஸ்ரீ சி. டி. நாயகத்தை நியமனஞ் செய்திருக்கின்றனர். ஸ்ரீ சி. டி. நாயகம் திருநெல்வேலி சைவ வேளாள வகுப்பைச் சேர்ந்தவர். இவருக்கு சட்டசபையில் நியமனம் அளித்தது நியாயமா?

* * *

மந்திரிமார் ஆவேசம்

மௌன குரு மூர்த்தியான கனம் பி. டி. ராஜன் பெரியகுளத்திலிருந்து திடீரென திருவாய்மலர்ந்து காங்கிரஸை வெளுவெளுவென வெளுத்து வாங்கி வருகிறார். அவர் மட்டுந்தான் என நினைக்கிறீர்கள்! மாங்காயிலும் படாது தேங்காயிலும் படாது தந்திரமாகக் காலங் கழித்து வரும் ஆனைப்பட்ட கல்வி மந்திரி திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார்கூட சண்டமாருதம்போல் பிரசங்க மாரி பொழிய கிளம்பிவிட்டார். சமீபத்தில் கீழத் தஞ்சைக்கு அவர் சென்றிருந்தார். அங்கு அதே ஜில்லா போர்டு தலைவரது விருந்தினராயிருந்து அவர் சில பள்ளிக்கூட கட்டிடங்களுக்கு அஸ்திவாரக்கல் நாட்டினர். அப்போது, ஸ்தலஸ்தாபனங்களில் ஜஸ்டிஸ் கட்சியார் சாதித்துள்ள காரியங்களைப் பிரமாதமாக எடுத்துக்கூறிப் புகழ்மாலைபாட ஆரம்பித்துவிட்டார். அவரது கட்சியை அவர் புகழ்ந்து பாராட்டாது வேறு யார் பாராட்டுவது? ஆனால் கனம் ரெட்டியார் அத்துடன் நின்றிருந்தால் கௌரவமாய் இருந்திருக்கும். ஆனால், அவர் ஸ்தல ஸ்தாபனங்களில் பரிசுத்தம் காக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ்காரர்களுக்கு இதோபதேசஞ் செய்யலானார். எப்படியிருக்கிறது அவரது பேச்சு. தட்டிப் பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்ட னல்லவா! கனம் ரெட்டியார் தாம் இவ்வாறு உபதேசம் புரியத் தொடங்கினால் தமது கட்சி பரிசுத்தத்தைப் பாதுகாக்கவே அவதரித்த கட்சியென்று பொது மக்கள் நினைத்துக்கொள்வார்களென்று கருதுகிறார் போலும்! இப்போது ஸ்தலஸ்தாபனங்களில் உள்ள

ஊழல்களுக் கெல்லாம் மூலகாரணம் ஜஸ்டிஸ் கட்சியாரின் நிர்வாகமே என்பது நாடறிந்த தொன்று. அப்படி யிருக்க, கனம் ரெட்டியாரது பரிசுத்த உபதேசம் அவரது கட்சியார்க் கல்லவா அவசியம் வேண்டும்?

* * *

புதுக் கட்சிகள்

கார்காலத் தொடக்கத்தில் புற்றீசல்கள் பொல பொலவெனக் கிளம்புவதை யாவரும் அறிவர். அதுபோல புதிய இந்திய அரசியல் சீர் திருத்தத்தின்படி, வரப்போகும் பொதுத்தேர்தல் காலம் சமீபிக்க சமீபிக்க நம் தென்னிந்தியாவில்—ஏன்? இந்தியாவின் பல பாகங்களிலுங் கூட—தினந்தோறும் ஒவ்வொரு கட்சியாகப் புதுக் கட்சிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அதிலும், நமது தமிழ் நாட்டில் 'பீப்பிள்ஸ் பார்ட்டி' அல்லது 'பொது ஜனக்கட்சி' யென்ற ஒரு கட்சி திடீரெனக் கிளம்பிப் பிரமாதமாகத் தேர்தல் பிரசாரஞ் செய்ய ஆரம்பித்துவிட்டது. அக்கட்சி வகுத்திருக்கும் சட்ட திட்டங்களையும், செய்யப் போவதாகக் கூறும் வேலைத் திட்டங்களையும் பார்த்தால் பிரமாதமாக இருக்கிறது. சென்றமாதம் 26-ந் தேதியன்று சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் இக்கட்சி, பித்தாபுரம் மஹாராஜா தலைமையில் பிரம்மாண்டமான கூட்டமொன்றைக் கூட்டியது. அதில் இக்கட்சிப் பிரமுகர்கள் என்னென்னமோ சாதிக்கப் போவதாக விளம்பரப் படுத்தினார்கள். ஆனால் தேர்தல் முடிந்தவுடன், இப்போது கொடுக்கும் வாக்குறுதிகள் எல்லாம் ஞாபக மிருக்குமா? அல்லது காற்றுவாக்கில் பறந்துவிடுமா? என்பது தான் "விகட"னுக்குச் சந்தேகம்.

* * *

ஸ்ரீமதி லட்சுமீபதியின் மசோதா!

சமீபத்தில், மாகாண சட்டசபைகளுக்கு எழுதப் படிக்கத் தெரிந்தவர்களெல்லாம் வாக்களிக்க உரிமையுண்டு என்ற விதியேற்படுத்தப்பட்டதும், அதன் பயனாக, படித்த பொது ஜனங்கள் தங்கள் ஓட்டுரிமையைப் பதிவு செய்து கொண்டிருப்பதும் நண்பர்கள் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள். மாகாண சட்டசபைகளுக்கே, எழுதப்படிக்கத் தெரிந்த யாரும் ஓட்டாகலாம் என்றிருக்கும்போது, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதாவது ஜில்லாபோர்டு, முனிசிபாலிடிகளுக்கு ஓட்டாகத் தகுதியில்லாதிருப்பது விந்தையிலும் விந்தையல்லவா! இது என்ன நியாயம் என்பது விகடனுக்குச் சிறிதும் புலப்படவில்லை. விஷய ஞானமுள்ள யாரும் இதைப்பற்றிச் சிந்திக்காதிருக்க முடியாது. ஆகவே, ஸ்ரீமதி ருக்மணி லட்சுமீபதி இதுபற்றிப் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறார். கடைசியாக, அவர் ஜில்லா போர்டு, முனிசிபாலிடி களிலும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களை ஓட்டாக்கவேண்டியது அவசியமென்ற தீர்மானத்துக்கு வந்திருக்கிறார். அவர் வருகிற சட்டசபைக் கூட்டத்தில் இதுசம்பந்தமாக ஒரு மசோதா கொண்டுவரப் போவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இதைக் கேட்டு "விகடன்" சந்தோஷிப்பதோடு, ஸ்ரீமதி. லட்சுமீபதியினுடைய முயற்சியை வரவேற்கிறான்.

தயாராகிவிட்டது! கிழ்க்கண்ட ஊர்களில் வரும் நன்னுளை எதிர்பாருங்கள்!!

மதராஸ், மதுரை, திருச்சி, கோவை, கும்பகோணம், திருவாரூர், ஊர்கம்,	புதுக்கோட்டை, வேலூர், திருப்பூர், காரைக்குடி, காரைக்கால்,	பொள்ளாச்சி, சேலம், திருநெல்வேலி, புதுச்சேரி.

ஓரியண்டல்ஸ்

நளாயினி

(மகத்தான புராண புண்ணிய சரிதை)

வித்வான்-சி. எஸ். செல்வரத்னம், மிஸ்டர் பி. எஸ். கோவிந்தராஜ், மிஸ்டர் ஏ. கே. வரதராஜன், விதூஷகன் - ஓ. கருப்பையா, நடிகரத்னம்-மிஸ் சி. என். நீலாவதி, மிஸ். பி. எஸ். கிருஷ்ணமணி, மிஸ். டி. பி. லக்ஷிமிகாந்தம் முதலியோர் நடித்தது.

வசந்தராவ், ஏ. பெயின்டர் டைரக்ட் செய்தது.

கோலாப்பூர் தயாரிப்பு.

விவரங்களுக்கு :—

ஓரியண்டல் சௌன்ட் பிக்சர்ஸ், லிமிடெட், திருப்பூர்.

சீல் விடைகள் சினிமாநேசன் ஆபீஸில் டிபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.

ரூ. 5-க்கு 100 விடைகள் வீதம் அனுப்பலாம்.

முதற் பரிசு ரூ. 2000.

2-வது பரிசு ரூ. 1000.

முதலில் வரும் இரண்டு சரியான விடைகளுக்கு ரூ.25,15. அதிகவிடைப்பரிசு ரூ.40,20.

முடிவு தேதி 22—8—36.

2 எழுத்து விடுபட்ட போட்டி 2.

1	கலா — —	சந்திரன்
2	அ — —	நீர்
3	— — கம்	பாம்பு
4	— க் —	விழி
5	— — லம்	அசுவம்
6	இ — — ன்	கணவன்

கட்டத்தில் கண்ட 6-வரிகளும் சேர்ந்ததே ஒரு கூப்பன். கூப்பன் 1-க்கு பிரவேசக் கட்டணம் அணு 4 M.O. ரசிதுடன் அல்லது போஸ்டல் ஆர்டரிலும் அனுப்பலாம். விடைகள் மணி அகராதிகளில் உள்ளவைகளே.

ரொக்கப் பரிசு ரூ. 800.

சரியான விடைக்கு ரூ. 650.

முதலில் வரும் இரண்டு சரியான விடைகளுக்கு பரிசு ரூபா 30, 20. அதிக விடைப் பரிசு ரூபா 60, 40.

கூட்டல் போட்டி 2. முடிவு தேதி 22-8-36.

X	X	X
X	9	X
X	X	X

X இந்த அடையாளமுள்ள கட்டங்களில் 18 எண்கள் வரை (ஒரு தடவை உபயோகித்த எண்ணை மறுதடவை உபயோகிக்காமல்) போட்டு பூர்த்திசெய்து எந்த வரிகளிலும், மூலைக்கு மூலையும் கிரமமாக கூட்டினால் 27 வரவேண்டும். ஒரு விடைக்கு கட்டணம் அணு 8. 1 ரூபாய்க்கு 3 விடைகள் வீதம் விடைகளை தனிக் காகிதத்தில் எழுதி M. O. ரசிதுடன் அல்லது போஸ்டல் ஆர்டரிலும் அனுப்பலாம்.

இந்த போட்டிப் பரிசுகளுக்காக அனுப்பும் பணம் எக்காரணத்தைக் கொண்டும் வாபஸ் செய்யப்படமாட்டாது. மானேஜர் தீர்ப்பே முடிவானது. இரண்டிலும் முதற்பரிசு பெறும் ஒவ்வொருவருக்கும் தனிப்பரிசு ரு. 25. பரிசும், முடிவும் 26—8—36 அன்று அனுப்பப்படும்.

S. R. சாமி, மானேஜர்: R. S. பாணி & கோ, கீழக்கண்டித்தெரு, பீமநகர், திருச்சி S.I.

சீமாட்டி கார்த்தியாயினி

("ஜீவா")

காந்திமதி நாதம்பிள்ளை கைகளை முஷ்டி செய்து கொண்டு உறுமினார். இரும்புக் கூண்டிலடைக்கப் பட்ட ஆண் சிங்கத்தைப் போல தாழ்வாரத்தின் நாலா பக்கமும் பரபரப்பாக உலாவலானார்; தாமாகவே ஏதேதோ உக்கிரமாகப் பேசிக் கொண்டார். திடீரென நின்றார். ஏதோ சிந்தனையிலிருப்பதைப்போல் முகவாய்க் கட்டையின் மீது வலது கையை வைத்துக் கொண்டு சிறிது நேரமிருந்தார். இருந்தாற் போலிருந்து பற்களை நற நற வெனக் கடித்தார். உதட்டைப் பிதுக்கினார். வாயில் விரலை வைத்துக் கடித்து விட்டுப் பிறகு கையை உதறினார். உடனே, தாம் நின்றிருந்த இடத்தை விட்டுத் துடிதுடிப்பாக நடந்து அவரது படுக்கையறைக்குள் சென்று, ஒரு மூலையில் கிடந்த மேஜை யறையைச் சாவியால் திறந்து அதனுள்ளிருந்த கைத் துப்பாக்கியை ஆத்திரமாக எடுத்தார். அடுத்த கணம் அவர் அறையை விட்டு வெளிவந்து கையில் துப்பாக்கியைப் பிடித்த வண்ணம் திடு திடு வென மெத்தைப் படிக்கட்டு வழியாகக் கீழிறங்கலானார். பாதி படிக்கட்டுகளே அவர் இறங்கியிருப்பார். இதற்குள் அவர் என்ன நினைத்துக் கொண்டாரோ! சிறிது நேரம் படிக்கட்டின் மீதே தயங்கி நின்று இருந்து பிறகு மேன் மாடிக்கே திரும்பினார். இவ்வாறு இரண்டு மூன்று முறை துப்பாக்கியோடு கீழிறங்குவதும், மேலே போவதுமாயிருந்தார். கடைசியாக என்ன முடிவுக்கு வந்தாரோ தெரியாது. வெறுப்போடு துப்பாக்கியை ஒரு மூலையில் வீசி யெறிந்தார். நின்றபடியே வேரற்ற மரம்போல் அங்கிருந்த சோபா வொன்றன் மீது விழுந்தார். சிறிது நேரம் அதே நிலையில் கிடந்தவர் மீண்டும் எழுந்து அச் சோபாவிலேயே அமர்ந்து முழந்தாள்களின் மீது கைகளை ஊன்றிக் கொண்டு அவற்றின் மேல் தலையைத் தொங்கப் போட்ட வண்ணம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார். இந்த நிலையில் அவரைக் காண்பவர்கள் யாவரேனும் ஆச்சரியப் படாமல் இருக்க முடியாது. 'சாந்த சொரூபியான காந்திமதிநாதம் பிள்ளையா பிரளய கால ருத்திரர் போல் விளங்குகிறார்! இரத்தங் குடித்த புலி போலல்லவா இவர் விழிகள் சிவக்க பயங்கர கோர ரூபத்தோடு காணப்படுகி

ளுர்? இவர் உடம்பெல்லாம் துடிதுடிப்பானேன்? இப் பெரு மாறுதலுக்குக் காரண மென்ன?—ஒரு வேளை இவருக்கு இருந்தாற்போல் விருந்து பைத்தியம் பிடித்து விட்டதா?' என்று அவர்கள் பலவாறு கருதி அங்கலாய்த்துக் கொள்ளுவார்கள் என்பது நிச்சயம். அச் சமயம் காந்திமதி நாதம் பிள்ளை அவ்வளவு பயங்கர தோற்றத்தோடு காட்சி யளித்தார். தன் மனைவி வேற்றொருடவனோடு தனித்துறையாடிக் கொண்டிருப்பதைக் கண்டால் எவனுக்குத் தான் ஆத்திரம் பொங்கி யெழாது? அதிலும் நடுநிசியில் பூந்தோட்டத்தில் பளிங்கு மேடையொன்றின் மீது அழகும் இளமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஆண் பெண்ணிருவர் ஒருவர் பக்கத் தொருவர் நெருக்கமாக அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்களென்றால், அவர்களிடையே எந்த விதமான தொடர்பும், அந்நியோந்நிய பாவமும் இருக்க வேண்டும்? அவர்கள் வேறெவ்விதமான சரஸ லீலைகளிலும் ஈடுபடாமல் இருந்தால்தா னென்ன? இக் காட்சியைப் பார்க்கும் ஆண் மகனென்று கூறிக் கொள்ளும் எவன் உள்ளத்தில் தான் இரத்தங் கொதிக்காது இருக்கும்? தன் மனைவியின் கள்ளக் காதலனெனக் கருதிய அப் பாதகனது இருதயத்தைப் பிளந்து உயிரைக் கொள்ளை கொண்டு பழிக்குப் பழி வாங்க வேண்டு மென்ற எண்ணம் பேடிக்கும் (நினைத்தபடி செய்ய முடியாவிடினும்) உண்டாகவே செய்யும்? தனக்குத் துரோகஞ் செய்து பிறபுருஷனோடு களவாகச் சேர்ந்து அவளது கற்பையும், தனது கௌரவத்தையும் ஒருங்கே தொலைக்க முற்பட்ட காதக மனைவியைக் கட்டாயம் இவ் வுலகை விட்டே தொலைத்து விட வேண்டு மென்ற வஞ்சினம் உண்டாகப் பெறாத ஆடவனிடமும், ஆண்மை யிருக்கிற தென்று கூற முடியுமோ!

ஆகவே, அதே விதமான மூர்க்க நிலையைத் தான், ஜன்னலின் வழியாகக் கீழே கார்த்தியாயினியையும், சிவசைலத்தையும் ஒன்றாகக் கண்டதும் காந்திமதி நாதம் பிள்ளை அடைந்தார். அதே ஆத்திரத்தோடு கைத் துப்பாக்கியுடன் அவர் கீழே சென்றிருப்பாரானால் அடுத்த நிமிஷம், கார்த்தியாயினியும், சிவசைலமும் பிணமாய்த் தான் விழுந்து கிடப்பார்கள். ஆனால் அவர்களது நல்லகாலமோ என்னவோ! முதலில் அவர் ஆத்திரத்தால் மனம் பதறினாலும், சிறிது நேரத்திற் கெல்லாம் அவரது இயற்கையான சகிப்புத் தன்மை வந்து சூழ்ந்து அவரைத் தன்னிலை யடையச் செய்தது. அவர் தம்முள்ளிருந்து எழுந்த வெங்கோபத் தீயைச் செம்மை யென்னும் தண்ணீரால் கழுவிக் குளிர்வித்தார். காந்திமதி நாதம் பிள்ளை தமது அறிவுத் திறமையால் சென்னை சர்க்கார் மந்திரி பதவி போன்ற பெரிய பதவியை வகித்து வந்தாலும்—அவற்றிற்குரிய ஆடம்பரச் செயல்களிலும், களியாட்டங்களிலும் மூழ்கி யிருந்தாலும்—அவர் சமயப் பற்றும் கடவுள் பக்தியுமுடையவராய்-பாரமார்த்திக நினைவுடையவராய் — இருந்தார். ஆதலால் அவர் லௌகிக காரியங்களில் நடைபெறும் கோளாறுகளை அவ்வளவாகப் பொருட்படுத்துவ தில்லை. இவ்வித மனப் போக்கினால் அவர் ஒரு விதமாகச் சாந்தி பெற்றாராயினும், அவரது மனம் மட்டும் சங்கடமான நிலையிலேயே இருந்தது.

நீண்ட நேரம் சோபாவி லமர்ந்த வண்ணம் சிந்தனையி லிருந்த காந்திமதி நாதம் பிள்ளை திடீரென எழுந்தார். உன்மத்தம் பிடித்தவர் போல் விழிக்க விழிக்க சுற்று முற்றும் பார்த்தார். பின் புறத் தோட்டத்தின் பக்கமாகவுள்ள ஜன்னலை நோக்கினார். கார்த்தியாயினியும் சிவசைலமும் இன்னமும் அங்கேயே தான் இருந்து கொண்டிருக்கிறார்களா? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என மீண்டும் போய்ப் பார்க்கலாமா? என்ற எண்ணம் அவ ருள்ளத்தில் உதித்தது. அடுத்த நிமிஷத்தில, "சே! அந்த ஆபாசக் காட்சியை மறுபடியுமா பார்ப்பது?—அவர்கள் எக் கேடாயினுங் கெட்டுத் தொலையட்டும்" என்று முகத்தைச் சுளித்தவண்ணம் வெறுப்போடு கூறிக்

கொண்டே படுக்கையறையை நோக்கி நடந்து உள்ளே போய்க் கதவைச் சாத்திக் கொண்டு பஞ்சணையின் மீது குப்புற விழுந்தார்.

தங்களது எதிர்கால காதல் வாழ்க்கையைப் பற்றி மனங் கலந்து பேசிய வண்ணம் இன்ப உலகில் மிதந்து தங்களைச் சுற்றியுள்ள வைகளை யெல்லாம் மறந்திருந்த கார்த்தியாயினியும், சிவசைலமும் அமைதி குடி கொண்டிருந்த மாளிகையில் திடீரென்று சந்தடியும் பரபரப்பும் ஏற்பட்டிருப்பதை யறிந்து விதிர்ப்புற்று எழுந்தனர். அசைவற்று நின்று கவனித்ததில் மாளிகையினுள் வேலைக்காரர்கள் குசு குசுவெனப் பேசுவதும், தட்டு முட்டு சாமான்களைப் புரட்டிக் கொண்டிருப்பதும் இவர்கள் காதுகளில் விழுந்தது. எனவே, காந்திமதி நாதம் பிள்ளை தவர் னர் மாளிகையி லிருந்து வந்து விட்டார் என அறிந்து கொண்டனர். கார்த்தியாயினி தன் கணவர் தான் இந் நேரத்தில் தன் அறையில் இல்லா திருப்பதைக் கண்டு விடுவாரோ என அஞ்சி, சிவசைலத்திடங் கூட சொல்லிக் கொள்ளாது ஓடினாள். சிவசைலம் பூனை போலப் பதுங்கிப் பதுங்கி நடந்து சென்று யாரும் தன்னைக் கவனிக்காததற்கு முன்பாக மெல்ல தன் அறையை யடைந்து தாளிட்டுக் கொண்டான். காந்திமதி நாதம் பிள்ளை தன் னறையை யடைந்த அதே சமயம் கார்த்தியாயினி மாளிகையைத் தென்புறமாகச் சுற்றிக்கொண்டு வந்து வெளிவாயில் வழியாகத் தாழ்வாரத்தை யடைந்து மேன்மாடிக்கு மெல்ல நடந்து, கூடத்தையும், பிள்ளையவர்கள் படுக்கை யறையையும் அச்சத்தோடு பார்த்துக் கொண்டேபோய்த் தன் படுக்கை யறையில் நுழைந்து விட்டாள்.

* * *

மறுநாள் காலை 8-மணி யிருக்கும். மாளிகையின் மேன்மாடியில்உள்ள கூடத்தில் காந்திமதிநாதம் பிள்ளை பின்புறமாகக் கையைக் கட்டிக்கொண்டு இப்படியும் அப்படியுமாக உலாவிக் கொண்டிருந்தார். கார்த்தியாயினி சுவற்றோரத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியின் தலைப்பைப் பற்றிக்கொண்டு தன் கணவனின் மன நிலையை ஆராயும் நோக்கத்தோடு அவரது முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தாள். சிறிதுநேரம் இருவரிடையேயும் அமைதி நிலவி யிருந்தது. பிறகு, காந்திமதிநாதம் பிள்ளை கார்த்தியாயினியை ஏறிட்டுக்கூடப் பார்க்காது தலை குனிந்த வண்ணமே, "நான் முக்கியமாக எதைக் குறிப்பிட்டு நீ செய்யக்கூடாதென்று கேட்டுக் கொண்டேனே அதையே நீ செய்திருக்கிறாய்.—உனது நடத்தையைப்பற்றி நான் கொண்டிருக்கும் அபிப்பிராயம் ஒருவேளை தவறாக இருந்தாலும் இருக்கலாம்........" என்று சாவதானமாகப் பேசினார். அவருக்குத் தன் மனைவியின் பெயரை விளித்துக் கூறக்கூட விருப்பமில்லை.

கார்த்தியாயினி பிள்ளையவர்கள் பேசி முடியு முன்பே பதட்டமாக, "தங்கள் அபிப்பிராயந் தவறானதன்று. அவனை நான் காதலிக்கிறேன். நான் அவனுக்கே சொந்தமானவள். நான் இனி தங்களோடு வாழ முடியாது. நான் தங்களுக்காகப் பயப்படுகிறேன். நான் தங்களை வெறுக்கிறேன்—இதைப்பற்றித் தாங்கள் என்ன வேண்டுமானாலுஞ் செய்து கொள்ளுங்கள்" என்று படபட வெனக் கூறி முடித்தாள்.

பிள்ளை யவர்கள் அப்போதும் பொறுமையாகவே பேசத் தொடங்கி, "இதுவரை இருந்ததுபோல் இனியும் நமது வாழ்க்கை நடைபெற வேண்டியது தான்" என்று கூறினார்.

கார்த்தியாயினி ஆத்திரமாக, "இனியும் நமது தாம்பத்ய வாழ்க்கை அமைதியாக நடைபெறுமென்று நினைக்கிறீர்கள்"? என்றாள்.

பிள்ளை யவர்கள் "நடக்கத்தான் வேண்டும்" என்று சற்று அழுத்தமாகவே சொன்னார்.

கார்த்தியாயினி தேகம் பதற, "அப்படியானால், தாங்கள் எனது கெட்ட

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

பாரத புத்திரி

அல்லது

அனாதைகள் சேவை.

(அதியுன்னத சமூக சீர்திருத்த தமிழ்பேசும் படம்)

கோலாப்பூர் பிரதிபா ஸ்டூடியோவில்

* * தயாராகின்றது. * *

தயாரிப்பவர்கள் :—**Super Pictures Syndicate, Devakottah.**

"வஸந்தகாலம்" மீ பத்திரிகை. விலை அணா 1. டிபாசிட் ஏஜண்டுகள் தேவை. மானேஜர்: "வஸந்தகாலம்" மதுரை.

ரொக்கப் பரிசுகள் ரூ. 2000.

3 - போட்டிகளுக்கும் முடிவு ஆகஸ்டுமீ 14உ

(செ. 12) சதுரக் கூட்டல்.

ரொக்கம் ரூ. **400.**

சரியான விடைக்கு ரூ. 350
அதிக விடைக்கு ரூ. 50.

●	●	●
●	6	●
●	●	●

எந்தப் பக்கம் கூட்டினாலும் 18 வரவேண்டும். வந்த எண் வரக்கூடாது.

(செ. 13) விடுபட்ட எழுத்து.

ரொக்கம் ரூ. **600.**

I பரிசு ரூ. 400. II ரூ. 200

1.	— ரதி	கங்கை
2.	மா —	பொன்
3.	— டி	புடவை
4.	சி —	குடுமி

வார்த்தைகளைப் பூர்த்தி செய்க

(செ. 14) சாதாரணக் கூட்டல்

ரொக்கம் ரூ. **1000.**

சரியான விடைக்கு ரூ. 900
அதிக விடைக்கு ரூ 100

4
●
●
●
18

● இந்த இடத்தில் 0 தவிர, ஒரே ஒரு எண் வீதம் (வந்த எண் வரலாம்) பூர்த்தி செய்து கூட்டினால் விடை 18 வரவேண்டும்.

ஒவ்வொரு போட்டியிலும் பிரவேசக் கட்டணம் விடை 1-க்கு அணா 2-தான். ஓரணா, காலணா ஸ்டாம்புகளாகவும், அணா 10-க்கு மேல் M. O. அல்லது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டரிலும் அனுப்பலாம். வெளிநாட்டு ஸ்டாம்புகள் கூடா. மானேஜர் தீர்ப்பே முடிவானது. தனிக் காகிதத்தில் எழுதி 3 போட்டி விடைகளையும் ஒன்றாய் அனுப்பலாம். முடிவு விவரம் வெளியாகிற ஆகஸ்டு 19ந் தேதி வஸந்தகாலம் வேண்டுவோர் 1 அணா அதிகம் அனுப்பவேண்டும்.

மானேஜர், சுப்பிரமணிய நிலையம், கிழக்கு இலக்ஷ்மிபுரம், மதுரை (S. I.)

நடத்தையைக் கண்ட பிறகும், என்னைப் புறக்கணித்துத் தள்ளி விட விரும்ப வில்லையா? நம்மைக் கட்டுப்படுத்தி நிற்கும் விவாக பந்தத்தை யறுத்துவிட மாட்டீர்களா?" எனக் கேட்டாள்.

காந்திமதிநாதம் பிள்ளை, "இல்லை; நான் ஏன் உன்னைப் புறக்கணித்துத் தள்ளிவிட வேண்டும்? நிரந்தரமான பாவத்தைத் தொடர்ந்து செய்ய-பழியை ஏற்படுத்திக்கொள்ள-நான் ஏன் உன்னை அநுமதிக்க வேண்டும்? உன்னுடைய நடத்தையையும், அவனுடைய நடத்தையையும் அளந்து அறிவதற்கா? அதற்குச் சிறிதும் இடங் கொடுக்கமாட்டேன்" என அழுத்தந் திருத்தமாகக் கூறினர்.

கார்த்தியாயினி, "என்ன நடந்தாலும், என்னவிதமான சம்பவம் நிகழ்ந்தாலும் தாங்கள் எக்காலத்தும் நியாய வரம்பிலேயே நிற்கிறீர்கள்?—ஆனல் ...." என மனங்கசிந்து கூறிக் கொண்டே வந்தாள்.

இதற்குள் காந்திமதிநாதம் பிள்ளை இடை மறித்து, "நீ எனது மனைவியாகவே இங்கு இருந்து வரவேண்டும், நீ அவனை—அவன் உருவத்தை—மறுபடியும் பார்க்கக் கூடாது........"என்று கார்த்தியாயினியை நிமிர்ந்து பார்த்துக் கூறினர்.

கார்த்தியாயினி, "அப்படியானல், அதற்குப் பதிலாக நான் என்ன.......?" என ஏதோ கேட்க ஆரம்பித்தாள்.

காந்திமதிநாதம் பிள்ளை சிறிது அதிகார தோரணையிலேயே பேசத் தொடங்கி, "நீ இனி உனது தமையனர் இல்லத்துக்கு அதாவது திருவனந்தபுரத்துக்கு இந்த ஜென்மத்தில் போக முடியாது—போகவுங் கூடாது.—நீ நெறி கடந்து நடக்க ஆரம்பித்ததற்கு அவ்விடந்தானே மூல காரணம்? (முகம் சிவப்பேற) மனைவியின் நடத்தை பிடிக்கவில்லை யென்றல், மற்றவர்கள் தாய் வீட்டுக்கு அவளை அனுப்பி விடுவதை வழக்கமாகக் கொண்டிருப்பது போல், நானும் செய்வேனென்று மாத்திரம் நீ நினைக்காதே! தெரியுமா!—அதற்குப் பதிலாக தற்போதைய மனநிலை சாந்திபெற நீ அநாதைப் பெண்கள் ஆஸ்ரமம், பாலிய விதவைகள் விடுதி போன்ற பொதுநலக் கழகங்களில் சேர்ந்து பெண்ணுலகுக்குச் சேவைசெய்து கொண்டிருக்கலாம்; அல்லது கடல் பிரயாணஞ் செய்து இங்கிலாந்து முதலிய நாடுகளில் சிலகாலந் தங்கி இருந்து பிறகு தாய் நாட்டுக்குத் திரும்பி வரலாம். இதற்கு விருப்பமானல் உடனே சொல். அவ் வெளிநாட்டுப் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன். நமது பொக்கிஷ மந்திரி மனைவி மிஸஸ் ஜோன்ஸ் கூட ஐரோப்பாவுக்குச் செல்ல விருக்கிருர். அவர் உனக்குத் துணையாக இருக்கக் கூடும்—என்ன சொல்லுகிருய்?—இந்த யோசனைகளை யெல்லாம் ஏற்காது, நீ இன்னமும் மேலும் அவனது காதலுக்குக் கழிவிரக்கங் கொண்டிருப்பாயானல், உன் நிலை பரிதபிக்கத் தக்கதாகத்தான் முடியும்.—இனி நீ மணமான மங்கை நிலையிலோ, மணமாகாத கன்னிப்பெண் நிலையிலோ இல்லாது திரிசங்கு சுவர்க்கம் போல் இரண்டுங்கெட்ட தன்மையிலேயே நீ அல்லலுற்றுக் கொண்டிருக்க வேண்டும். இனி உனக்கு எதிர்காலமும் இல்லை; நிகழ்காலமும் இல்லை. இறந்த காலத்தில் நீ அனுபவித்த சுகபோகங்களை எண்ணி யெண்ணித்தான் ஏங்கிக் கொண்டிருக்கவேண்டும். நீ தற்போது கொண்டிருக்கும் 'ஒப்பற்ற' காதல்தான் நிரந்தரம் சாதலை யுண்டு பண்ணிக்கொண் டிருக்கும். அக் காதல்தான் உனது வாழ்க்கையின் இறுதியாகவும் முடியக்கூடும்-மற்றொன்று உனக்கு கூற வேண்டியது அவசியம். அம்பிகாபதியிடம் உனக்குள்ள பாந்தவ்யத்தை—பாசத்தை—பற்றை—நீ நீக்கிக் கொள்ளவேண்டும்..........." என்று ஒரே மூச்சாகப் பேசி நிறுத்தினர்.

கார்த்தியாயினி துயரக்குரலில், "நான் எதைச் செய்ய முடியாதோ அவ்வொரு விஷயத்தை யறிந்து தாங்கள் கூறி யிருக்கிறீர்கள். என் அருமருந்தன்ன மகனை—என் ஆருயிர் மருந்தை—என் கண்ணிற் கருமணியை—என் தவக்கொழுந்தை—

என் குலவிளக்கை-ப் பிரிந்து நான் எவ்வாறு உயிர் வாழ்வேன்?—அந்தோ! அது முடியாத காரியம்.—என் அருமைக் குழந்தை அம்பிகாபதி என்னுடனில்லாவிட்டால், எனக்கு இவ்வுலக வாழ்க்கையேது? இன்பமேது?' என்று கூறிக்கொண்டே வந்தவள் அதற்குமேல் பேசமாட்டாது முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி யழுதாள். இவளது இப் பரிதாப நிலையை அச்சமயம் நேரில் காண்போர் யாரும் கண்ணீர் உகுப்பர் என்பது நிச்சயம். ஆனால் காந்திமதிநாதம் பிள்ளை இந் நிலையைக் கண்டு மனமிரங்கியதாகத் தெரியவில்லை.

அவர் தம் முகத்தை வேறு பக்கந் திருப்பிய வண்ணம் "அப்படியானால் நல்லது; இனி நீ மறுபடியும் எனது கௌரவத்துக்கும் தகுதிக்கும் இழுக்கேற்படும் படியான காரியத்தைச் செய்யத் துணிய மாட்டாய் என நான் உறுதியாக நம்பலாம் அல்லவா!" என்று அமர்த்தலாகவே கேட்டார்.

இதைக் கேட்டதும் கார்த்தியாயினிக்கு எங்கிருந்தோ கோபம் பொங்கி யெழுந்தது. அவள் பெண்புலிபோல் சிறி பிள்ளையவர்கள் நிற்கு மிடத்தை நோக்கிப் பாய்ந்து அவர் முகத்துக்கு எதிராக நின்று, "என்ன சொன்னீர்? உமது கௌரவமா? உமது தகுதியா? அவற்றிற்குப் பங்கம் ஏற்படக் கூடாதா? என்ன உமது சுயநலம்! என்ன உமது அயோக்கியத்தனம்! என்ன உமது ஆணவம்!—நான் ஒரு ஜீவன் என்பதை நீர் நினைக்கவேயில்லை—உமது பொதுநலக் கௌரவம்! உமது அரசியல் அந்தஸ்து! ஜன சமூகத்தில் உமக்குள்ள கௌரவம்!—அனைத்துந் தொலைய வேண்டியதுதான். உம்மைச் சுற்றியுள்ள மேற் குறித்த பெருமைப் பாடுகளெல்லாம் எவ்வளவு உயர்ந்ததாயினும், கிடைத்தற் கரியதாயினும் இன்றே தொலைந்து போகட்டும். இனி என்ன மதிப்பு! என்ன உயர்வு!" என்று ஆவேசத்தோடு கூறிவிட்டு அவ்விடத்தினின்றும் நடந்து வெளியேறினாள்.

(தொடரும்.)

காதலனா? காதகனா?

(நவரசந் ததும்பும் நவீனம்.)

'கண்டதுங் காதல்!' 'கேட்டதுங் காதல்!' என்றெல்லாம் மதிமயங்கிக் கெட்டலையும் வாலிபர்களுக்கு இவ்வற்புத மிகுந்த கற்பிதக் கதை தகுந்தவாறு புத்தி புகட்டி, உண்மைக்காதல் இதுவென உணர்த்துகிறது. கலாசாலை மாணவ மாணவிகளின் ஆடம்பர வாழ்க்கையையும் விபரீதப் போக்கையும் அதனால் அவர்கள் அடையும் சீர்கேட்டையும் இந்நூல் ஆசிரியர் அப்படியே தம் இனிய எளிய நடையால் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். இவ்வருமையான நாவல் ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் இருக்கவேண்டிய தவசியம். சொற்ப பிரதிகளே கைவச மிருக்கின்றன. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

இதன் விலை அணா 10 தான்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

தாது வருஷத்தில் தமிழ்நாட்டு சினிமாக் கலைக்கோர் புதிய ஜோதி.

சங்கீத

ஸ்ரீமதி பரிணயம்

அல்லது

ஸ்ரீராம ஜன்ம காரணம்

1-8-36-ல் சென்னை

கெயிட்டி தியேட்டரில்

வெளியாகிறது.

மற்றும் கீழ்க்கண்ட இடங்களிலும் வரும் நன்னாளை எதிர்பாருங்கள்.

பிரசித்திபெற்ற அமெச்சூர் சங்கீத ரத்னங்களது இனிமையான கீதம்.

சங்கீத வித்வான்கள்:—

மாதிரி மங்கலம் நடேசையர் (*of Hutchins Gramophone fame*)
நல்லூர் விஸ்வநாதையர், மிஸ். பத்மா, மிஸ். கமலா,
குஞ்சு பாகவதர், மிஸ். ஸ்ரீமதி, மிஸ். துளசி.

ஆர்கெஸ்ட்ரா :—

திருவிடைமருதூர் Mr. ஸ்ரீநிவாச ராவ்-கோட் வாத்தியம்
மிஸ்டர் ஹரி ராவ்—பிடில்

கும்பகோணம்	சேலம்	நாகப்பட்டினம்
திருவாரூர்	கோயமுத்தூர்	ஊர்காம்
காரைக்கால்	புதுக்கோட்டை	திருச்சி, திருப்பூர்

For Bookings Apply to:—

Messrs. Sri Ram Talkies, Kumbakonam.

Tel. Address: **'GIRI.'**

ஆக்ஞை

(சோமசுந்தரம்.)

1

குணசேகரனுக்கு சரஸ்வதியின் மேலிருந்த காதல் கொஞ்ச நஞ்சமல்ல. குணசேகரன் 22 வயது நிரம்பப்பெற்ற வாலிபன். சரஸ்வதிக்கு 15 அல்லது 16 ஆண்டுகளிருக்கும். அழகே உருவெடுத்தாற் போன்ற சரஸ்வதியை அடையாத வாழ்வும் ஓர் வாழ்வா? என்று குணசேகரனுக்குத் தோன்றியது.

சரஸ்வதி தன்னைக் காதலிக்கின்றாளா, இல்லையா வென்று குணசேகரனுக்குத் தெரியாது. ஆனால் தன்னை விவாகம் செய்துகொள்ளச் சொன்னால், அவள் தடை சொல்லமாட்டாள் என்று குணசேகரன் பூரணமாய் நம்பி யிருந்தான். ஆனால் எல்லாக் காதலர்களுக்கும் பொதுவாயுள்ள இடையூறுகள் குணசேகரனையும் விட்டபாடில்லை. குணசேகரனோ ஒரு தனவந்தரின் செல்வப்புதல்வன். சரஸ்வதியின் தந்தையோ பரமஏழை. ஆகவே அவளைத் தான் கலியாணம் செய்துகொள்ளத் தனது பெற்றோர் அநுமதிக்க மாட்டார்கள் என்று அவனுக்குத் தெரியும்.

பெற்றோரின் அநுமதி கிடைக்காதது ஒருபுற மிருக்க, அவனது நெஞ்சே அவளைத் துன்புறத்தத் தொடங்கிற்று. ஓர் ஏழைப்பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டால், ஊரார் தன்னைப்பற்றி என்ன சொல்லுவார்கள்? ஆழ்ந்த யோசனை செய்யத் தொடங்கினான் குணசேகரன். "ஊராரின் நிபந்தனைக்குப் பயப்பட்டால் என் வாழ்நாளே வீணாகி விடும். அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்ளாவிட்டால் என் ஆசையே கைகூடாமற் போகுமன்றோ? ஏழையா யிருந்தால் என்ன? காதல் என்பது ஏழ்மையை அறியுமா? யார் என்ன சொன்னாலும் சரி, அவளைக் கலியாணம் பண்ணிக்கொண்டுதான் தீருவேன். ஆனால் பெற்றோர் அநுமதிப்பார்களோ?" இக்கடைசி எண்ணம் தோன்றியவுடன் குணசேகரன் முகத்தில் விசனம் அதிகரித்தது. "அவர்கள் அநுமதிக்காவிட்டால், அவர்களை அநுமதிக்கும்படி கட்டாயப்படுத்துவேன். அவர்கள் என் காதலுக்குத் தடை செய்வதால் எப்படி என் வாழ்நாளை வீணாக்கியவ ராவர் என்பதை எடுத்துக் காட்டுவேன்."

குணசேகரனின் முகத்தில் ஆழ்ந்த யோசனையின் குறிகள் காணப்பட்டன; அறையில் குறுக்கும் நெடுக்குமாக உலாவ ஆரம்பித்தான். திடீரென்று மற்றொரு தடை தென்பட்டது. "சுவரை வைத்துக் கொண்டல்லவா சித்திரம் எழுத வேண்டும்? முதலில் சரஸ்வதி என்னைக் காதலிக்கின்றாளா இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டல்லவா இதை யெல்லாம் யோசிக்கவேண்டும்?"

சரஸ்வதியைத் தனியே சந்தித்துப் பேச வெகுநாளாக அவன் சந்தர்ப்பத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான்.

ஆவலுடன் எதிர் பார்த்திருந்த அவ்வரிய சந்தர்ப்பமும் விரைவில் அவனுக்குக் கிட்டியது. ஓர்நாள் சாயுங்காலம் சுமார் 7-மணி யிருக்கலாம். சரஸ்வதி தனியே பாதை வழியாக வந்து கொண்டிருந்தாள். குணசேகரன் சுற்று முற்றும் பார்த்தான் ஒருவரும் தென்படவில்லை. அவளைத் தனியே கண்டு பேசுவதற்கு இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைப்ப தரிது. ஆகவே அவன் அவளைப் பின் தொடர்ந்தான். பக்கத்திலும் நெருங்கி விட்டான்;

ஆனுல் அவளைக் கூப்பிடத் தயங்கினுன். கூப்பிட்டால் ஓர் வேளை கோபித்துக் கொள்வாளோ ?

இச் சமயத்தை நழுவவிட்டால் மறு சமயம் வாய்ப்ப தரிது என்று குணசேகரனுக்கு நன்ருய்த் தெரியும். "சாஸ்வதி" என்று தன்னையு மறியாமல் கூப்பிட்டான். சாஸ்வதி திடுக்கிட்டாள்; கொஞ்சநேரம் குணசேகரனைத் திறு திறுவென்று பார்த்தாள். குணசேகரனுடைய இருதயம் பட பட வென்று அடித்துக்கொண்டது.

மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு "சாஸ்வதி, உன்னுடன் ஓர் முக்கிய விஷயமாய்ப் பேசவேண்டும்" என்றுன் குணசேகரன்.

"நீங்கள் யார் ? நிரம்பவும் முக்கிய விஷயமானுல் பேசலாம்" என்ருள் அம் மங்கை.

"இல்லை.................இல்லை........நான் கருணைநிதிப் பிள்ளையின் புதல்வன். என் பெயர் குணசேகரன். இப்பொழுது நான் சொல்லப் போவதைவிட முக்கிய விஷயம் எனக்கு வேறொன்றும் இல்லை."

"ஆனுல் சொல்லுங்கள்."

"சொன்னுல் கோபிப்பாயா ?"

"இல்லை; சொல்லுங்கள்."

"நீ........நீ........என்னைக்........கலியாணம்........" இதற்குமேல் குணசேகரனுல் பேச முடியவில்லை.

சாஸ்வதி ஸ்தம்பித்து விட்டாள். குணசேகரன் ஆவலுடன் விடையை எதிர்பார்த்தான். ஆனுல் அது சீக்கிரம் வருவதாகக் காணேம்.

ஆகையால் குணசேகரன் பின்னும் சொல்லத் தொடங்கினுன். "நான் உண்மையாகச் சொல்கிறேன். நான் உன்னை என் மனதாரக் காதலிக்கிறேன். நீ என்னை அங்கீகரிக்காவிட்டா..........."

சாஸ்வதி இடை மறுத்தாள்.

"நான் உங்களைக் கலியாணம் பண்ணிக்கொள்ள முடியாததைப்பற்றி உண்மையில் வருந்துகிறேன். நான் வேருெருவரைக் காதலிக்கிறேன்."

குணசேகரனின் தலை சுழன்றது.

2

சாஸ்வதி தன்னை மறுத்து விட்டதால் மிகவும் மனமுடைந்தவனுன் குணசேகரன். இன்னது செய்வதென்றே அவனுக்குத் தோன்றவில்லை. இது வரையிலும் தனது கோரிக்கை பூரணமாய் நிறைவேறும் என்று நம்பி யிருந்த குணசேகரனுக்கு இப்போது சொல்லற்கரிய விசனம் உண்டாயிற்று. காதலில் வெற்றி பெருத அநேகர் கொலைசெய்து கொள்வதைப் பற்றி யெல்லாம் அவன் மனம் சித்திரித்துக் காட்டியது.

வாடிய வதனத்துடனும் சிந்தித்த மனத்துடனும் குணசேகரன் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தான். எதிரில் யாரோ ஒருவன் போவது இவன் கவனத்தை இழுத்தது. அவனை உற்றுப் பார்த்தான் குணசேகரன். ஆம், அவன் 5 அல்லது 6 வருஷங்களுக்கு முன் தன்னுடன் பள்ளியில் வாசித்த சுபசேகரன் என்பவனே. அவனுடன் பேச வேண்டுமென்று மிகவும் விரும்பினுன். அதுவுமன்றி அவனுடன் பேசிக்கொண்டிருந்தா

வாவது தனது மனவருத்தத்தை ஒருவாறு மறந்திருக்கலாம் என்று எண்ணினான்.

"கமலநாதா! கமலநாதா!" என்று கூப்பிட்டான் குணசேகரன்.

கமலநாதன் நின்று குணசேகரனையே கொஞ்சநேரம் உற்றுப்பார்த்தான். பின்பு அவன் முகத்தில் தோன்றிய மாறுதல், அவன் குணசேகரனை அடையாளம் கண்டு கொண்டான் என்பதைக் காட்டியது.

"குணசேகரா! சௌக்யம்தானே?" என்று சொல்லிக் கமலநாதன் புன்னகை செய்ய முயற்சி செய்தான். ஆனால் அவன் ஏதோ மனவருத்த முடையவனாக இருப்பதை அவன் முகம் காட்டிற்று. குண சேகரன் அதைக் கவனித்தான். அவ னது மனக்குறையை அறிய குணசேக ரன் ஆவல் கொண்டான். அவனது குறையை எப்படியாவது நிவர்த்திக்கவும் உறுதி கொண்டான். மனமுடைந்த நெஞ்சத்திடம் அநுதாபம் காட்டுவது இயல்பன்றோ?

"அது சரி; ஏன் விசாரத்துடன் காணப்படுகிறாய்?" என்று கேட்டான் குணசேகரன்.

கமலநாதன் தயங்கினான்.

"என்னிடம் ஒன்றும் ஒளிக்காமல் சொல்; என்னாலான உதவியைச் செய் கிறேன்."

கமலநாதன் இன்னும் சற்றுத் தயங்கி, "ஆனால் எல்லாவற்றையும் சொல்லி விடுகிறேன்" எனச் சொல்லித் தன் மனக்குறையை வெளியிடத் தொடங் கினான்.

"நான் இந்த ஒரு வருஷமாக ஓர் மாலைக் காதலித்து வருகிறேன். அவ ளும் என்னைத்தான் மனமாரக் காதலிக் கிறாள். நான் 2 மாதத்திற்கு முன் மன தைத் தைரியப்படுத்திக்கொண்டு அவளது தந்தையை அணுகி என் உள்ளத்தைச் சொல்லி அவரது மங்கையைக் கலியாணம் பண்ணிக்கொள்ள எனக்கு அனுமதி தர வேண்டும் எனக் கேட்டேன். அதற்கு அவர் கொஞ்சநேரம் யோசித்து, "அப்பா, கமலநாதா, நீ என் மகளைக் கலியாணம் செய்து கொள்வதில் எனக்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லை. ஆனால் எனக்கு 500 ரூபாய்க் கடன் இருக்கிறது. அதைத் தீர்ப்பவர்களுக்குத்தான் நான் என் மகளைக் கொடுப்பேன். உனக்கு கலியாணம் செய்துகொள்ள இஷ்டமிருந்தால் அக் கடனைக் கட்டிவிடு" என்று சொல்லி விட்டார். நானோ பரமஏழை. 500 ரூபாய்க்கு எங்கே போவேன்? நான் அம் மங்கையிடம் கொண்டுள்ள காதல் இவ்வளவு வளவல்ல. இதுதான் என் மனக்குறை" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான் கமலநாதன். அவனது இரு கண்களிலும் நீர் ததும்பியது.

சிந்தித்தான் குணசேகரன்; தன் மனநிலையை யோசித்துப் பார்த்தான். காதலில் ஏமாற்ற மடைந்தால் எவ்வளவு மனவருத்த மடைவார்கள் என்று இப் பொழுதுதான் அவன் உணர்ந்திருந்தான்; தானே அநுபவித்தும் இருந்தான். ஆகவே கமலநாதனின் மனச்சஞ்சலத்தை ஒருவாறு யூகிக்கச் சக்தியுடையவனா யிருந்தான். 500 ரூபாய் அவனுக்குப் பெரிதல்ல.

கொஞ்சநேரம் யோசித்து விட்டுக் கமலநாதனைப் பார்த்து, "நண்பா, நான் வேண்டுமானால் உனக்கு 500 ரூபாய் தருகிறேன். நீ அதை வைத்துக் கொண்டு கலியாணத்தை முடித்துக் கொள். இப் பணத்தை உனக்கிஷ்டமான போது கொடுத்தால் போதும். ஆனால் கலியாணத்திற்குமட்டும் என்னைக் கூப்பிட மறந்து விடாதே' என்று புன்னகை யுடன் சொன்னான்.

"குணசேகரா, உண்மையாகச் சொல் லுகிறாயா, அல்லது கேலி பண்ணு கிறாயா?" என்று ஆவலுடன் கேட்டான் கமலநாதன்.

"உண்மையாகச் சொல்லுகிறேன்."

சந்தோஷத்தால் கமலநாதனுக்குத் தலைகால் தெரியவில்லை.

“என்னருமைக் குணசேகரா, இவ்வுதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். உன் உதவியால் நீ என்னை மனமுடைந்த வாழ்வினின்றும் நீக்கினாய். நான் மனப் பூர்வ

மாய்ச் சொல்லுகிறேன்; கூடிய மட்டும் இவ்வுதவிக்கு நான் உனக்கு பிரதியுபகாரம் செய்வேனென்று மட்டும் உறுதி கூறுகிறேன். நன்றி மறப்பதை விட வேறொரு பாவமும் உண்டோ?”

3

மேற்சொன்ன சம்பவங்கள் நடந்த மறுதினம் விடியற்காலம். இன்னும் பூராவாக உதிக்காத சூரியனால் வானம் செக்கிற மடைந்திருந்தது. சாஸ்வதியின் வீட்டுக்குப் பின்புறம் இன்னும் இருள் சரியாக நீங்காத அவ்வதிகாலையில் ஓர் உருவம் மெதுவான குரலில் பாடிக் கொண்டிருந்தது. அது கமலநாதனின் உருவமே. அவன் கொஞ்சநேரம் பாடிக் கொண்டிருந்தவுடன் சாஸ்வதியின் வீட்டின் ஓர் ஜன்னலினண்டை ஓர் உருவம் தென்பட்டது. அது சாஸ்வதியினுடையது. கமலநாதனைப் பார்த்ததும் அவள் முகம் மலர்ந்தது. கமல நாதனின் காதலி சாஸ்வதியே.

கமலநாதன் சாஸ்வதியைத் தன்னிடம் வரச்சொல்லி சைகை காட்டினான். சாஸ்வதியின் உருவம் ஜன்னலினிடமிருந்து மறைந்தது. ஆனால் கமலநாதன் முன்னால் தோன்றிற்று.

“சாஸ்—, சாஸ்—, நான் ஒரு சந்தோஷ சமாச்சாரம் கொண்டுவந்திருக்கிறேன். அது என்ன சொல்; பார்க்கலாம்.”

“உன் தந்தைக்கு உடம்பு சரியில்லை என்று சொன்னாயே, சௌக்யமாய் விட்டாரா?”

“அந்த சமாச்சாரமல்ல.”

“பின் என்ன? எனக்கொன்றும் விளங்கவில்லை.”

“நான் உன்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேன்.”

“ஆனால் 500 ரூபாய்.”

“இதோ, இருக்கிறது” என்று சொல்லிக் கமலநாதன் தன் மடியிலிருந்து நன்றாய்க் கட்டின ஒரு பையை எடுத்து விரித்தான். அதில் ஐந்து நூறுரூபாய் நோட்டுகள் இருந்தன.

“உங்களுக்கு இது ஏது!” என்று சந்தோஷமும் ஆச்சரியமும் கலந்த குரலில் கேட்டாள் சாஸ்வதி.

ஆனால் கமலநாதன் அதைக் கவனிக்கவில்லை; அவன் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருந்தான்.

“இதை உன் தந்தையிடம் கொண்டு போய்க்கொடுத்து உன்னைக் கலியாணம் பண்ணிக்கொள்ள உத்தரவு வாங்கி வருவேன். பின்பு நாம்........”

இப்படிச் சொல்லிக்கொண்டு போகும்போதே சாஸ்வதி இடைமறுத்து, “அது சரி, உங்களுக்கு இந்த ரூபாய்கள் ஏது!” என்று மறுபடியும் கேட்டாள் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருந்த சாஸ்வதி.

“ஓ, அதுவா, எனது சிநேகிதன் குணசேகரப் பிரபு, என்னுடைய நிலைமை

யைக் கேட்டு இரக்கப்பட்டு இந்த 500 ரூபாய்களைக் கொடுத்தார்.

"எந்தக் குணசேகரம் பிரபு?" என்று பரபரப்புடன் கேட்டாள் சரஸ்வதி.

"எந்தக் குணசேகரப் பிரபுவா? கருணாநிதிப் பிரபுவின் மகன்."

"அவரா? அவர் மிகவும் தயாள குணமுள்ளவர் போலிருக்கிறது. ஆனால்."

"ஆனால் என்ன?"

"நான் அவருடைய மனதைப் புண்படுத்தி விட்டேன்."

"நீயா? அவர் மனதையா புண்படுத்தி விட்டாய்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே."

"அவர் நேற்று என்னைத் தனியே சந்தித்து, அவரைக் கலியாணம் செய்து கொள்ளச் சொன்னார். நான் வேறொருவரை விரும்புவதாகச் சொல்லி மறுத்து விட்டேன். ஆனால் அவர் முகத்தை அப்போது பார்த்தேன். அவர் முகத்திலிருந்த விசனம் என்னைக் கலக்குகிறது. அவர் என்னை முழுமனதுடனும் நேசிக்கிறார் போலும்."

இதுவரை மௌனமாய் இருந்த கமலநாதன் அங்கு மிங்கும் உலாவ ஆரம்பித்தான். அவன் முகத்தில் துக்கமும், கலவரமும், திக்பிரமிப்பும் கலந்திருந்தன.

"ஏன் இப்படி அலைகிறீர்கள்? உங்கள் முகம் ஏன் இப்படி யிருக்கிறது?" என்று திகிலடைந்த குரலில் கேட்டாள் சரஸ்வதி.

கமலநாதன் அவளெதிரில் நின்றானேயொழிய ஒன்றும் பேசவில்லை. அவனுடைய கண்கள் சரஸ்வதியைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் அவனது மனம் வேறு வேலையில் ஈடுபட்டிருந்தது.

"............கூடிய மட்டும் இவ்வுதவிக்கு நான் உனக்கு பிரதியுபகாரம் செய்வேனென்று மட்டும் உறுதி கூறுகிறேன். நன்றி மறப்பதைவிட வேறொரு பாவமும் உண்டோ?" என்று இவன் குணசேகரனுக்குச் சொன்ன வார்த்தைகள் அவன் காதில் அப்போது ஒலித்துக் கொண்டிருந்தன.

சிறிதுநேரம் இன்னது செய்வதென்று தோன்றாமல் மௌனமாய் இருந்தான் கமலநாதன். அவன் கண்களில் நீர் ததும்பிற்று.

"சரஸூ, நான் உன்னை வரம் கேட்கிறேன். அவ் வரத்தைக் கொடுப்பாயா?"

"என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? நீங்கள் எதை உத்தர விட்டாலும், அதை நான் செய்யத் தயாரா யிருக்கிறேன்."

அவள் மிகவும் கலவர மடைந்திருந்தாள்; கமலநாதனின் தோற்றமும், அவனது கண்ணீரும் அவளைக் கலக்கி விட்டன.

"உண்மையாகவா?" என்றான் கமலநாதன்.

"உண்மையாக."

"ஆனால்....நீ....ஒரு தடையும் சொல்லாமல்...குணசேகரனைக் கலியாணம்.... செய்து கொள்."

"ஆக்ஞை" என்று சொல்லிக் கீழே சாய்ந்தாள் சரஸ்வதி. கமலநாதன் அவளது உயிரற்ற உடலைத் தாங்கிக் கொண்டான்.

கலெக்டர் ராமநாதய்யர்

(க. வெ. அனந்தகிருஷ்ண ஐயர்.)

"நான் சென்னை வந்து மூன்று மாதங்களாகின்றன. ஊரிலிருந்து நேற்றுதான் கடிதம் வந்தது. என் மனைவி டிங்கி (Deangua) ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு மிக்க பலவீனமாக விருக்கிறாளாம். குழந்தை மோகனம் கீழே விழுந்து கையை முறித்துக்கொண்டாளாம். தகப்பனாரோ பாயும் படுக்கையுமாக விருக்கிறார். நானோ ஒரே புதல்வன். அப்பீல் கேஸும் அனுகூலமாயிற்று. இனி ஊர் திரும்பவேண்டியதுதான்" என்று எண்ணமிட்டவனாய் ராமநாதன் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஏறி துவரை மாநகர் நண்ணினான்.

அன்று மாலையே ராமநாதனின் ஆப்த நண்பர் சிலர் அப்பீல் அநுகூலமானதற்காக சந்தோஷம் தெரிவிக்க வந்தனர். அவர்களுக்குச் சிற்றுண்டி யளிப்பதற்காக எல்லோரையும் அழைத்துக் கொண்டு ராமநாதன் வைத்தியநாதய்யர் கிளப்புக்குச் சென்றான்.

வைத்தியநாதய்யர் சுமார் 10 வருஷங்களாக கிளப் வைத்து நடத்துகிறார். கடன் வாங்கிக் கிளப் ஆரம்பித்தவர் இப்பொழுது இருபதினாயிரம் ரூபாய்க்கு அதிபதி. ஆரம்பத்தில்போலவே இப்பொழுதும் காப்பி, இட்டலி, தோசை, உப்புமா, மசால்வடை, புளியோதரை, தயிர்சாதம், சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், காராபூந்தி, ஓமப்பொடி இவைகளைத் தவிர வேறொன்றும் தயார் செய்யாததாலும், நாகரீக உபகரணங்கள் இல்லாததாலும், "நியூ பாஸ்கர லஞ்சு ஹோம்" என ஓர் நாகரீக சிற்றுண்டிச்சாலை புதிதாக அதே தெருவில் ஆரம்பிக்கப்பட்டதாலும் வைத்தியநாதய்யருக்கு சுமார் 2 மாத காலமாக வியாபாரம் சரியில்லை.

போதுமான பணம் சம்பாதித்து விட்டார் என்றாலும், கடையை மூடிவிட்டுச் சுகமாகக் காலங் கழிக்க அவர் விரும்பவில்லை. புதிதாக ஆரம்பித்த கடையை எப்படியாவது மூடும்படி செய்யவேண்டும் என்னும் ஒரே எண்ணம் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருந்தது. வழியோ தெரியவில்லை.

2

வைத்தியநாதய்யர் :—வாருங்கோ! ராமநாதய்யர்வாள், எப்போ வந்தாப்பிலே? ஏது, ஊருக்குப் போய் மூணு மாஸமிருக்கும் போலிருக்கே? அப்பீல் ஜயந்தானே? (கடையில் வேலை செய்யும் பையனைப் பார்த்து) அடேய்! ஆளுக்கு ஒரு கப் சக்கரைப் பொங்கலும் ரெண்டு மசால் வடையும் கொண்டுவா. (ராமநாதனிடம்) என்ன, அப்பாவின் உடம்பு என்னமாயிருக்கு? ஆத்திலே எல்லாரும் சௌக்கியந்தானே?

ராமநாதன்:—அய்யர்வாள், ஆளுக்கு ஒரு ரஸ போளி, ஒரு ஷுகர்போண்டா, ஒரு கப் ஐஸ்ட் பட்டர் மில்க். காபி வேறெ ஒன்னும் வேண்டாம்.

நண்பர்:—இந்த டேர்ட்டி சக்கரைப் பொங்கல்தானா எப்போ பார்த்தாலும்.

நண்பர் 2:—என்ன ஸார் மசால் வடை! I am damned tired of it (எனக்கு அது ரொம்ப வெறுத்துப் போச்சு)

நண்பர் 3:—நாம்ப 'லஞ்சு ஹோம்' போவம், மிஸ்டர் ராமநாதய்யர். திஸ் இஸ் நியூஸென்ஸ்.

வைத்தியநாதய்யர் :—என்ன, ஸ்வாமிகளே, ஏது இப்படி எல்லாருமாகக் கோபிக்கறேளே. சேத்து வந்த பயல் என்

னமோ வெளிச்சம் போடருன்னுட்டு மயங்கறேளே. இன்னும் 10 நாள்லே அவன்பாடு எப்படியாறதுன்னுட்டுப் பாருங்கோ. ஏதோ பகவான் கிருபையும் ஒங்க தயவும் இருந்தா, நானும் அந்தமாதிரி ஆரம்பிச்சுடறேன்.

நண்பர் 4:—ஏன், பிரதர், என்ன இருந்தாலும் பழே வைத்தியநாதய்யரை மறக்கலாமா? ஐயாவாள், ஒங்க பிரிப்பரேஷனைக் கொண்டாருங்கோ, பாப்பம். (ஐயர் உள்ளே செல்கிறார்.)

நண்பர் 3:—அவாளோடே பிரிப்பரேஷன் சாப்பிட்டா, டாக்டர்ட்டே பிரிஸ்கிரிப்ஷனுக்குப் போவேண்டியதுதான்.

நண்பர் 2:—அந்த டாக்டர் பீஸு இவாள்ட்டயே ஏதாவது ஸப்ஸ்கிரிப்ஷன் கேப்பமே........ (ஐயர் சாமான்களுடன் வருகிறார்.)

நண்பர் 1:—ஐயாவாள், ஒங்களுக்கு இந்த ஊரிலே உண்டான Influence (செல்வாக்கு)க்கு நீங்களும் கிராண்ட் ஸ்கேல்லே ஒரு ஹோட்டல் ஆரம்பிச்சேள்னா ஒங்க கூட ஒத்தராலயும் கம்பீட் (போட்டி) பண்ணமுடியாது. என்ன பிரதர், ஒங்க அபிப்பிராயம் என்ன?

நண்பர் 2:—If we dont get influenza now, we are lucky. (நம்ப யோகத்துக்குத்தான் இப்போ நமக்கு இன்புளுவென்ஸா வாராமலிருக்கணம்.)

ராமநாதன்:—அதோட "Bar" உம் வைச்சா ஜோர்தான்.

நண்பர் 3:—Ball?

நண்பர் 1:—மிஸ்டர் ஐயர், நீங்க, இந்த சினிமா ஸ்டார் ஸம்பத்துபாய் இருக்காள்லயா? அவ மாமா சோணகிரியாப் பிள்ளையைக் கன்ஸல்ட் பண்ணி அவருக்கும் லாபத்திலே ஷேர் (Share) கொடுக்கறதாக ஒப்பந்தம் பண்ணிண்டேள்னா, அப்புறம் கேபிடலை இன்வெஸ்ட் பண்ணி, பிஸினஸை ஆரம்பிக்க வேண்டியதுதான், எல்லாம் சரியாப் போயிடும்.

வைத்தியநாதய்யர் :—ஒங்களுக்குத் தான்குசு (Thanks); அப்படியே செய்துடறேன்.

ஏழு வருஷங்கள் சென்றன. ஸர். கே. எஸ். வைத்தியநாதய்யர், கே. டி., எம். எல். சி., எம். எல். ஏ., அவர்கள் உல்லூர் முனிசிபல் சேர்மனுகத் தெரிந்தெடுக்கபேட்டார். அன்று அவருடைய "பாரிஸ் ரெஸ்டாரெண்ட்" கல்யாண வீடு போல் காணப்பட்டது. வந்தவர் போனவருக்கு எல்லாம் இலவசக் காபி. டாப் (Tap) நாள் முழுதும் திறந்தேயிருந்தது.

இரவு மணி 8-30 வைத்தியநாதய்யர் பங்களாவினுள் பேச்சுக் குரல். கோர்ட்டு கேசரி, ஷோக் சிகாமணி, குஷி ராமநாதய்யர் R. K. D., வ. ம. ச. (வம்பர் மகா சபை) அவர்கள் மனைவி கனகவல்லி அம்மாளும் வீட்டு யஜமானி பங்கஜவல்லியம்மாளும்.

கனகவல்லி :—ஏன், அம்மாமி, மாமாக்குப் புதுசா சேர்மன் பதவியும் கெடச்சிருக்குப் போலிருக்கு, ரொம்ப சந்தோஷம்.

பங்கஜவல்லி :—வாடிம்மா, எந்தப் பெரியவா செஞ்ச புண்ணியமோ, இப்ப அஞ்சாறு வருஷமா சௌரியமா யிருக்கு.

கனகம்:—அது அப்படித்தான் அம்மாமி, எல்லாம் நம்ம கைக்குள்ளயா இருக்கு! அவாவா யோகம்போலே அப்பப்போ நடக்கிறது.

பங்கஜம்:—ஏண்டி கனகம். ஒங்காத்துக்காரர் என்னடி சோரார். அப்பா காரியத்துலயும் கோடும் நாடுமாயும் பணத்தை யெல்லாம் தொலேச்சார். கொஞ்சம் மிஞ்சினதை வச்சு கோமளம் கல்யாணமும் பண்ணியாச்சே, இப்போ என்னடி வழி?

கனகம்:—(கண்ணில் நீரைப் பெருக்கவிட்டுக்கொண்டு) ரொம்பக் கஷ்டமாயிருக்கு அம்மாமி. அவா பாட்ல, எங்கெங்கயோ சுத்திட்டு வந்துடறா. நான்தான் நாயா அழுந்தவேண்டிருக்கு.

பங்கஜம்:—அழாதேடி, கனகம். நீ காலம்பர ஒங்காத்துவரைக் கூட்டிண்டுவா. ஒங்க மாமாட்டச் சொல்லி அவருக்கு ஒரு கலெக்டர் வேலையாவது குடுக்கச் சொல்றேன். இவ்வளவு பவுஷும் வச்சிண்டு அதுகூட முடியாலேன்னு என்ன தான் பிரயோஜனம்?

கனகம்:—அப்போ, நான் கார்த்தாலே, வரட்டா, அம்மாமி.

பங்கஜம்:—கொஞ்சம் இருடீ (சந்தன தாம்பூலமும் குழந்தைகளுக்கு ஸ்வீட்ஸ் 2-ம் கொடுத்தனுப்புகிருள்.)

4

"மகாராசராச ஸ்ரீ மகாகனம் உள்ள ஆனரபுல் திவான்பஹதூர் சர் வைத்தியநாதஐயர் கே. டி. எம். எல். சி. எம். எல். ஏ சேர்மன் துவரை அவிய ளுக்கு.

அம்பு மிக்க அய்யா

அய்யோன்னு மூலேலே அடைச்சுக் கடந்து சாக்கடை வச்சுக்குனியிருந்த ஒங்களே யிந்த பாளும்'ராமநாதன் பண்ணின வம்பைப் பாத்தியளா. ஆனையாம் புல்லாம் நீங்க ஆனையாட்டம் இருக்கறதுக்கா. புல்லுக்குப் பலங்கூட இல்லேன்னு எஞ்சாமி. கேடியா யிருக்கீங்களாமே. எங்கே கனவாண்டு மாட்டிக்குனு லாட்ரீ போட்டீங்க, நம்பள் இட்டே கேட்டா வழி சொல்லி யிருப்பேனுங்களே. அத்தான் போட்டும், ஒரு வண்டி எழுத்தை மாட்டிண்டிருக்கேளே, அதென்னத்துக்கு யஜமான். யின்னம், சேறு, மண்ணு, அப்பிடீன்னு. நம்பள் சொல்றதைக் கேளுங்க. மறு வாதியா, பழங் காப்பி யாத்திக்குனு கடவுங்க; இல்லாட்டிப் போனு ஒங்க பவுசெல்லாம் நம்பள் டபாச்சிண்டு போயிடறூன். கபடுதார்.

அண்டாசுராண்டி குண்டாந்தடிவீர மண்டன் சாயபூ.

அந்த வாரௌவு ராமநாத்னுக்கு புல்லுகள் கட்டர் (Bill Collector) வேலை கொடுத்திங்களாமே. நம்பளுக்கும் எங்கனாச்சிம் முடிச்சமாற்ற வேலை கொடுங்க. இல்லேனு ஒங்க ஆபீசு பறந்துருங்க.

அ. சு. கு. த. வீ. ம. சா."

* * *

இந்த அகாமதேயத்தைக் கண்டதே, ஐயருக்குக் கோபம் மூண்டெழுந்தது. போலீஸ் இன்ஸ்பெக்டர் புளுகுண்ணி நாயுடுவை அழைத்துக் கடிதத்தைக் கையில் கொடுத்தார். போலீசாரும் வெகு மும்மாமாக வேலைசெய்ய ஆரம்பித்தனர். பத்திரிகைகளிலும் கீழ்க்கண்ட விளம்பரம் வெளிவந்தது.

இனும்! இனும்!! இனும்!!!

அண்டா சுராண்டி குண்டாந்தடி வீர மண்டன் சாயபூவைப் பிடிப்பவருக்கு.

(தினந்தோறும்)

ஷா ஜஹான் தர்பார் (ஸ்வீட்)....1 கப்.
கொம்மட்டிக்காய் ஹல்வா....1 பிளேட்.
டில்லி பாதுஷா (காரம்)...........1 பலம்.
பாயிலிங் பட்டர்மில்க்........1 பிண்ட்.
(வீதம் ஒரு மாதத்திற்கு அளிக்கப்படும்)

ஸர். கே. எஸ். வைத்தியநாத ஐயர்,
கே. டி., எம். எல் ஸி., எம். எல் ஏ.
சேர்மன், முனிசிபல் கவுன்ஸில்,
புரோப்ரைட்டர், தி பாரீஸ் ரெஸ்டாரண்ட்,
துவரை.



என் நாய்க்கடி வைத்தியர்

———:(0):———

(ஸ்ரீ. நாராயணன்.)

மாலை மணி ஐந்து. திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் சென்னைக்கு இருபத்தைந்து மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்தது. இரண்டாவது வகுப்பு வண்டியின் ஜன்னலின் வழியாய் ஜிலு ஜிலு வென்று வீசும் தென்றல் காற்றும், கதிரவன் குடதிசை யடையும் காலத்தில் உலகத்தையே பொன்மயமாக்கிச் செல்லும் அவ் மஞ்சள் வெய்யிலின் இயற்கை அழகும், அன்று வெளியான 'பிரசண்ட விகடனில்' பிரசுரமா யிருந்த சுவை மிகுந்த கட்டுரைகளும் கதைகளும் நாய்க் கடியால் அவஸ்தைப்படும் என்னை சிறிதளவு ஆஸ்வாசப்படுத்திற்று.

எட்டுமணி சுமாருக்கு வண்டி சடக்கென்று ஒரு ஸ்டேஷனில் நின்றது. இருட்டில் அது என்ன ஸ்டேஷன் என்று அறிந்துகொள்ள முடியவில்லை. புகை வண்டி புறப்படும் சமயத்தில் ஒருவர் என் வண்டியில் ஏறி என் முன்னால் காலியாயிருந்த இடத்தில் உட்கார்ந்தார். வண்டியும் புறப்பட்டது.

சற்று மௌனம்.

வந்தவர் திடீரென்று "ஸார், நீங்கள் சென்னைக்கா செல்கிறீர்கள்? உங்களை இதற்கு முன்பு எங்கேயோ சந்தித்துப் பழகினமாதிரி யிருக்கிறது. எங்கு சந்தித்தோம் என்று நினைவிற்கு வரவில்லை. நானும் இவ்வளவு நேரமாக என் மண்டையை உடைத்துக் கொண்டேன்; உம். வயதாகி விட்ட தோஷமோ. தங்கள்-நாமதேயம் என்னமோ!" என்று நான் திடுக்கிடும்படி கேட்டார்.

"சென்னைக்குத்தான் போகிறேன். என் பெயர் சேதுராமன்," என்று அவர் கேள்விக்குப் பதிலளித்தேன்.

"ஓஹோ! சேதுராம முதலியாரா! சரி, காலில் என்ன கட்டு பலமா யிருக்கிறது. அதனால் தங்கள் ரொம்ப கஷ்டப்படுகிறீர் என்று தாங்கள் வதனமே வெளிப்படுத்துகிறதே. அது என்ன ஸார்," என்று என்மேல் மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டவர்போல் ஆவலுடன் கேட்டார்.

அவர் சொல் சாதுரியமும் இரக்க குணமும் என்னை வசியப்படுத்திவிட்டன.

நான்—"இந்தக் கட்டு நாய்க்கடியால் ஏற்பட்டது. எங்க ளூரில் இந்தப் புண்ணை குணப்படுத்துவதற்குத் தக்க வைத்தியர் இல்லாமையினால் நான் சென்னைக்குப் போகிறேன். புண்ணின் வேதனையைச் சொல்லத் தரமன்று. காலையே வெட்டிப் போடலாமோ என்று கூடத் தோன்றுகிறது. சென்னையில் டாக்டர் ரங்கநாதன் என்பவர் நாய்க்கடியைச் சீக்கிரத்தில் குணமாக்கி விடுகிறார் என்று கேள்விப்பட்டே அங்கு செல்கிறேன்." என்றேன்.

வந்தவர்—"என்ன! மேனாட்டு வைத்தியத்தால் நாய்க்கடியா லுண்டான புண்ணைச் சீக்கிரத்தில் குணப்படுத்தக் கூடுமா! நாட்டு வைத்தியத்தில் நாலுநாட்களில் குணம் காணலாம். எனக்கும் நாட்டு வைத்தியத்தில் கொஞ்சம் தேர்ச்சி உண்டு. நீங்கள் இஷ்டப்பட்டால் நானே சிகிச்சை செய்து நாலு நாட்களில் நாட்டு வைத்தியத்தின் மேன்மையைக் காண்பிக்கிறேன். இப்பொழுதுகூட நான் சென்னைக்கு ஒரு நாய்க்கடி கேஸை அட்டெண்டு பண்ணத்தான் போகிறேன். உங்களுக்கு இப்பொழுது வேண்டுமானாலும் மருந்து வைத்துக் கட்டுகிறேன். நாளைக் காலையில் நீங்களே நாட்டு மருந்தின் மகிமையைப் புகழ்ந்து பாடுவீர் என்பதற்குச் சந்தேகமேயில்லை," என்று ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார்.

எப்படியாவது புண்ணுறினால் போதுமென்றிருந்த நான் ஆத்திரத்தால் அவர் ஊர், பெயர் முதலியவை அறிந்து கொள்ளாமல், "எவ்வளவு செலவாகும்; எப்பொழுது சிகிச்சை ஆரம்பிக்கலாம்," என்று கேட்டேன்.

அதற்கு அவர், "இப்பொழுது வேண்டுமானாலும் சிகிச்சை ஆரம்பிக்கலாம். செலவு அதிகம் கிடையாது. குணம் அடைந்த பிறகு எனக்கு நீங்கள் கொடுத்ததை வாங்கிக்கொள்ளுகிறேன். ஆரம்பிக்கலாமா!! ஆனால், நீங்கள் சிகிச்சை செய்யும்பொழுது கை கால்களை அசைக்கக்கூடாது. மருந்து காரமானது புண்ணைத்தவிர மற்ற இடங்களில் படக் கூடாது........" என்று இழுத்தார்.

"ஏன்? கைகால்களை வேண்டுமானால் கட்டி விடுங்களேன்," என்றேன். "தனதும் தன் வாயால் கெடும்!" என்ற முதுமொழி என்னிடமே பலித்து விட்டது.

இதையே எதிர்பார்த்திருந்த வைத்தியர் "அதுவும் நல்ல யோசனை தான்," என்று தன் மீசையை இருமுறை முறுக்கி விட்டுக் கொண்டார்.

நடு நிசி. இருப்புப்பாதையின் இருபுறத்திலும் ஒரே காரிருள். அச்சங்கொண்டு மதியும் நக்ஷத்திரங்களும் ஓடி எங்கோ ஒளிந்து கொண்டன. ஆகாய வெளியே மழையற்று மின்னல் கலி காலத்தின் அட்டூழியத்தைக் கண்டு கேலியாகச் சிரிப்பதுபோல் ஒளித்தும் மங்கின.

அவ் வேளையில் என் நாய்க்கடி வைத்தியர் சிகிச்சை ஆரம்பித்தார். அவர் உத்திரவுப்படி நான் என் ஷர்ட் கோட் முதலியவற்றை கழற்றி வைத்து விட்டு பெஞ்சியில் படுத்துக் கொண்டேன். அவர் என் கால்களை ஜன்னல் கம்பத்துடனும் கைகளை பெஞ்சியின் கால்களுடனும் என் அங்க வஸ்திரத்தால் பிணைப்பித்தார். குளிர்ந்த தண்ணீரை என் முகத்திலும் புண்ணிலும் ஊற்றினார். பிறகு அவர் சட்டைப் பையிலிருந்து மருந்து எடுப்பது

போல் ஒரு துணிப்பந்தை யெடுத்து நான் எதிர்பாராத விதமாய் என் வாயில் திணித்தும் விட்டார். மனதிற்குள் வைத்தியரை வைதேன். வைது தான் என்ன பயன்? அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுக்கலாம் என்றாலோ கை கால்கள் கட்டுண்டு கிடக்கின்றன. கொள்ளிவாய்ப் பிசாசு போல் பெருங் குரலோடு போடும் புகை வண்டியுடன் போட்டி போட்டுக் கொண்டு சத்தமிட என்னால் முடியுமா? மேலும் வாயில் துணிபந்து. என்ன செய்ய முடியும்? அலை—கடல் துரும்பு போல் அவதிப் பட்டேன். நடுக் காட்டில் ஓடும் வண்டிக்கு உதவி செய்ய எவர் வருவார்? அப்பொழுது என் நிலைமை பொன் விலைக்கு ஆசைப்பட்டு புலி வாய்ப் பட்ட செட்டியாரின் கதையாய் முடிந்தது.

பின்னும் அவர் செய்கை என்னைப் பீதி யடையச் செய்தது. என் கோட்டுப் பையிலிருந்து பெட்டிச் சாவியை மெதுவாக எடுத்துப் பெட்டியைத் திறந்தார். பணப்பையை எடுத்தார். அதில் நான் ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களும் சில்லரையும் வைத்திருந்தேன். சில்லரையை வைத்து விட்டு ஐந்து நோட்டுகளை மாத்திரம் எடுத்துக் கொண்டு என் டைரியை எடுத்து பக்கம் பக்கமாகப் பார்த்தார். நூறு ரூபாய் நோட்டுகளின் நம்பர் எழுதி வைத்திருந்தேன். அதை சுக்கல் சுக்கலாய் கிழித்து ஜன்னலுக்கு வெளியில் போட்டார். பெட்டியை முன்னிருந்தது போல் பூட்டி சாவியை கோட் பாக்கட்டில் போட்டு விட்டு கதவண்டை வந்து நின்றார்.

கொஞ்ச நேரத்தில் வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்றது. சட்டென்று விளக்கை அணைத்து விட்டு மெதுவாக பிளாட்பாரத்தில் இறங்கி ஜன்னலண்டை வந்து, "ஸார், உங்கள் புண் சீக்கிரம் குணமாய் விடும். ரொம்ப தாங்க்ஸ். நேரமாகிறது. போய் விடுறேன்," என்று சொல்லி விட்டு இருளில் எங்கோ ஓடி விட்டார்.

அன்று இரவு முழுவதும் சிவராத்திரி தான். காலை 6 மணி சுமாருக்கு வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்றது. கதவு திறக்க வந்த போர்ட்டர் ஒருவன் என்னைக் கட்டுக்களினின்றும் விடுவித்தான்.

* * *

சென்னையை அடைந்ததும் போலீஸில் ரிப்போர்ட் செய்தேன். என்ன செய்து என்ன பயன்! இன்று மூன்று மாதமாகி விட்டது. போலீஸார் இன்னும் புலன் விசாரித்துக் கொண்டேயிருக்கிறார்கள். என் நாய்க்கடி வைத்தியர் என்ன நினைப்பாரோ என்னமோ? நான் அவரை எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

விளம்பர விநோதங்கள்

(எஸ். குருசாமி அய்யர்.)

நம் இந்தியர்களது விளம்பர தோரணையே ஓர் தனிப்பட்ட மாதிரியாகும். விளம்பரத்தில் செலவு எவ்வளவு ஆகுமோ அதைப் பொருத்தே வியாபாரம் பெருகும் என்பது அயல் நாட்டாரின் துணிபு. இதற்கொப்ப விளம்பரத்திற்காக அநேக முறையில் அபரிமிதமான செலவு செய்வார்கள். கேட்லாக் இனம், (Sample) சாம்பிள் இனம், விலாசம் தேவை எனவும், கண்ணைக் கவரும் கலர் படங்கள், (Wall posters) கொட்டை எழுத்துக்களால் சித்தரிக்கப்பட்ட சுவரொட்டி விளம்பரங்கள் மூலமும், (Show room) கண்காக்ஷி சாலைகள் ஏற்படுத்தி கண்ணைக் கவரச்செய்தும், ஏஜண்டுகளை யாத்திரை செய்யச் செய்து பிரசார மூலமாக (Orders) ஆர்டர்கள் பெற்று வரும்படி செய்தும், நம்பத்தகுந்த முறையில் வியாபாரத்தை நிலைக்கச் செய்து பொது ஜனங்கள் தங்கள் ஸ்தாபனத்தையும் பொருள்களின் மேன்மையையும் உணருமாறு செய்து, வர வர தங்கள் ஸ்தாபனத்தை அதிகப்படுத்தியும். போதுமான வியாபாரமில்லாதபோதே பொது மக்கள் தங்கள் ஸ்தாபனத்தைப்பற்றிப் பெரிதாக எண்ணவேண்டி ஏஜண்டுகள் தேவை என்றும் குமாஸ்தாக்கள் தகுந்த (Deposit) முன்பணத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளவும் என்று வீண் விளம்பரப்படுத்தி மலைக்கச் செய்வர். கடைசியில் வியாபாரஞ் செழித்தோங்கும் நிலைமையில், தான் (Invest) வைபார்த்தமாய்ப் போட்ட பணத்தை வட்டியும் முதலுமாக சிறுகச் சிறுக அடைந்து தகுந்த லாபம் அடைந்த பின்னர், கம்பெனியை தனக்குத்தானே மூலதனமாகக் கொண்டு நடைபெறுமாறும், சிக்கனமாகவும் நடத்துவார்கள்.

ஆனால் நம் இந்தியர்களது வியாபார தந்திரமோ நேர் விரோதமானது. முதல் இருந்தால் வியாபாரம் தொடங்கத் தெரியாது. வியாபாரம் நன்கு நடத்தக் கூடியவனுக்கு முதல் இருக்காது. ஒருவருக்கொருவர் உதவி புரிவதென்பதும் காணப்படுவதருமை. இவ்வாறே நம் இந்திய வியாபாரிகளது தலையெழுத்து நிர்ணயிக்கப்பட்டிருக்கும். அந்நியர்கள் வியாபாரத்தில் ஏமாறும் இவர்களா விளம்பரம் செய்ய லாயக்குள்ளவர்கள்? விளம்பரம் செய்வதின் முதல் வட்டியுடன் பின்னர் திரும்ப வருமோ என்ற சந்தேகப்பிராணிகள். ஏதும் தோன்றாத இவர்கள் ஆசைக்குமட்டும் அளவில்லை. இதன் காரணமாக, அவ்வப்போது பிரசித்திபெற்ற சிலரின் பெயரைக்கொண்டு முரணான பாதையில் விளம்பரம் தொடங்குகிறார்கள். உதாரணமாக சிலவற்றைக் கீழே தருகிறேன்.

"எங்கும் புகழ் பெற்ற கிட்டப்பா புகையிலையையே உபயோகியுங்கள். எங்கள் டிரேட் மார்க்கைக் கவனித்து வாங்குங்கள்." என புகைப்படம் கொண்ட விளம்பரம் செய்கிறார்கள். கிட்டப்பா என்பவர் நாடகமேடையில் நடிப்பதில் திறமை வாய்ந்தவர். சங்கீதத்தில் அபரிமிதமான

ஞானம் படைத்தவர். அவரது பெயரை அவர் வியாதியடைந்தவகையில் பிரசுரப் படுத்தினாலும் நியாயமாயிருக்கும். கேவலம் புகையிலை வியாபாரத்திற்காக அன்னாருடைய புகைப்படம் போட்டுக் கொள்ளுதல் எவ்விடத்தில் பொருந்துகிறது? ஒன்றிலு மில்லை.

(Hercules) 'ஹெர்குலிஸ்' என்ற பெயருடைய சைகிள் இருக்கிறது. அதற்கு அப்பெயர் ஏன் இடப்பட்டதென்றால் ஹெர்குலிஸ் என்ற ஒரு பலசாலி இருந்ததாக அவனைப்போல பலமும் திடமுமான சைகிள் இது என்ற அர்த்தம் கொடுக்கும்படி, இச் சைகிளுக்கு இப்பெயர் இடப்பட்டதாகும் எனப் பொருள் படும்படி விளம்பரம் செய்கிறார்கள். இப்பெயர் இதற்கு எத்துணை பொருந்துகிறது பாருங்கள்.

மூக்குப் பொடிக்கு குரங்குமார்க் போட்டிருப்பதின் தத்துவமென்ன? குரங்கு கூட இப்பொடியை விரும்புகிறது; நீங்களும் ஏன் விரும்பலாகாது என்பதா? அல்லது இப்பொடியை உபயோகிப்போர் குரங்கைப்போல் சுறு சுறுப்புடையவர் என்ற கருத்தாலா? அல்லது இக்குரங்கே தனக்கு சுறுசுறுப்பில்லை யென்று இப்பொடியை உபயோகிப்பதால் மானிடர்களாகிய நீங்கள் கட்டாயம் பொடியை உபயோகித்தே தீரவேண்டுமென்றா? அல்லது 'டார்வின்' ஆராய்ச்சிப்படி நம் முன்னோர்களாகிய குரங்கும் பொடியை விரும்புகிறது, நாம் குரங்கினமாயிருந்த போதும் நாம் பொடி போடுவதுண்டு என்ற கொள்கையாலா? என்ற சந்தேகங்களுக்கு யார் பதில் சொல்லக்கூடும்?

காந்தி சீயக்காய்த்தூள் என விளம்பரம் செய்யப்படுகிறது. காந்தி இச் சீயக்காய்த்தூளைத் தானே உபயோகப் படுத்தி தன் தலையில் எண்ணெயில்லாமல் போய் விட்டதாக (Certify) உறுதி கூறியிருக்கிறாரா? இவ்வாறே திலகர் பெருங்காயம் என்று காணப்படுகிறது. திலகர் பெருங்காய வியாபாரியா? அல்லது திலகருக்கு பெருங்காயம் ஆராயக்கூடிய சக்தியிருந்து நல்லதென்றோ அல்லது கெட்டதென்றோ ஏதேனும் (Certify) உறுதி கூறியிருக்கிறாரா? திலகர் பெருங்காயம் விற்றுதான் கியாதி அடைந்தாரா? அல்லது திலகருக்கு பெருங்காயத்தில் அபரிமிதமான ஆவல் ஏதேனும் உண்டா? இதில் ஏதாவது அர்த்த மிருக்கிறதா?

இவ்வாறு அர்த்தமற்ற முறையில் அவரவர் கியாதியடைந்த மார்க்கங்களுக்கு முரணான வழியில் விளம்பரங்கள் செய்வதைவிட அதே விஷயங்கள் கொண்ட விளம்பரங்களினால் ஜனங்கள் பொருள்களின் தன்மையை யறிய ஏதுவாகுமென்பது எனது நம்பிக்கை. 'கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் சம்பந்தம் கூறுவது போலல்லவோ யிருக்கிறது நம் இந்தியர்கள் விளம்பரம்.

எதிர்காலத்தில் "வியாபார தந்திரம்" அல்லது "How to cheat Hindus in Trading" எனும் புத்தகம் எழுத நேர்ந்தால் (John Bull) ஜான் புல்லை (Trade Mark டிரேட் மார்க்காக உபயோகிப்பாரென்று நம்புகிறேன்.

குமாரதேவி

(திருவையாறு-கே. வைத்தியநாதன்.)

பூகல் நகர முழுதும் ஒரே கூட்டம், பிரமாதமான அமளி. திறந்த வெளியில் போர்வீரர்கள் பலர் காலை இளஞ் சூரியனின் கதிரொளியில் தங்கள் தங்கள் வாளாயுதங்களைத் தீட்டிக் கொண்டிருக்கின்றனர். அரண்மனை லாயங்களிலிருந்த குதிரைகள் பல வெளியே கொண்டுவரப்பட்டு மேய்க்கப்பட்டன. நீண்டகாலமாக சோம்பியிருந்த ஒட்டகங்கள் பல கொட்டாவி விட்டுக்கொண்டு வெளியே வந்தன. இவற்றையெல்லாம் காணும்போது பூகல் நகரமே யுத்தத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றது என்று கூறலாம்.

நல்ல திறமை வாய்ந்த ஒரு சிறு சேனையுடன் சாது வெளியே புறப்பட்டான். தன் சேனையின் வீரத்திலும், வெற்றியிலும் அவனுக்கு அபார நம்பிக்கை. அதற்கேற்ப அவன் சென்ற இடங்களிலெல்லாம் அவனுக்கு வெற்றியே கிடைத்து வந்தது. இராஜ புதனத்திலுள்ள சிற்றரசர்கள் பலரும் அவனைக் கண்டு நடுங்கினர். ஆகவே அவன் ஜெயகோஷத்துடன் தன் சேனையை நடத்திக் கொண்டு வெகு தூரஞ் சென்றான். சிற்றரசர்கள் ஆங்காங்கு செலுத்திய கப்பச் சுமையைச் சுமக்கமாட்டாமல் தங்கள் முதுகு வளைய ஒட்டகங்கள் நடந்தன.

அப்பால் விஜய லட்சுமி முகத்தில் ஜொலிக்கத் தன் சேனையுடன் தன் இராஜ்யத்தை நோக்கித் திரும்பலானான். அவ்வழியில் ஒரு முகம்மதிய அரசனின் இரண்டாவது புதல்வன் ஒருவன் ஒரு பெரிய தண்டுடன் தோன்றினான். ஆனால் அரசிளங் காளையான நமது சாதுவுக்கு இது நன்றும் பிரமாதமாகத் தோன்றவில்லை. எனவே, சாது ஒரு நொடியில் எதிரியின் சேனையைச் சின்னாபின்னப் படுத்திவிட்டான். அச் சேனையின் தலைவனான முகம்மதிய அரசகுமாரன் மார்பில் சாது தன் வீர வாளைச் செலுத்தினான். எஞ்சிய முகம்மதிய வீரர்கள் அஞ்சி யோடினர். சாது இந்தப் புது வெற்றியுடன் மேலும் செல்லலானான்.

மாணிக்க ராவ் என்ற சிற்றரசர் ஒருவர் பூகல் மன்னர்களின் நெருங்கிய நண்பர். அவரது நகரத்திற்கு சாது வரவே, அவனை எதிர் கொண்டழைத்துச் சில தினங்கள் அங்கேயே தங்கிப் போகும்படி மாணிக்கராவ் கேட்டுக் கொண்டார். அதனால் சாது தன் சேனையுடன் அவனுக்காகத் தயாரிக்கப் பட்டிருந்த விடுதியில் தங்கினான்.

மாணிக்கராவ் அவனுக்குச் செய்திருந்த விருந்தெல்லாம் பலமாயிருந்தது. அவர் செய்திருந்த ஒவ்வொரு ஏற்பாடும் சாதுவுக்கு உவப்பையும் வியப்பையும் தந்தது. அதனால் அவன் நன்றியறிதலோடு "மகராஜ்! இப்போது நீர் எனக்காகச் செய்திருக்கும் ஏற்பாடுகள் யாவும் தேவர்களாலும் செய்ய வொண்ணாதவை என்று நினைக்கிறேன்" என்றான்.

"ஆனால் இளவரசே! அது குறித்து வரும் புகழ்ச்சிக்கு நான் முழுதும் பாத்திரனல்லேன்."

"அப்படியானால் மாமா! இவ்வற்புதமான ஏற்பாடுகளையெல்லாம் செய்த தேவன் தான் யார்!"

"எனது புதல்வி குமாரதேவி தான்."

"என்ன! உம்முடைய புதல்வியா! .... [illegible] அவளை அடைய எவ்வளவு புண்ணியம் பண்ணியிருக்க வேண்டுமே!" சாது தொண்டை கப்பிற்று அவன் கடைசி.

யில் கூறியதை மாணிக்கராவ் கவனிக்க வில்லை.

அந்த அறை முழுவதும் நிசப்தம் குடி கொண்டிருந்தது. சாது கொஞ்சம் நிமிர்ந்து ஒரு புறத்தே தொங்கிக் கொண்டிருந்த பட்டுத் திரையைக் கவனித்தான். அத் திரையின் மத்தியிலுள்ள இணைப்பின்

இடுக்கின் வழியே ஒரு அழகிய வதனத்தைக் கண்டான். அது அவனையே ஆர்வத்தோடு நோக்கிய வண்ண மிருந்தது. அக் கூரிய விழிகள் அவனது விழிகளைச் சந்தித்தன. மறு வினாடியே அந்த இடைவெளி மறைந்தது. அச் சுந்தர முகமும் காணப்படவில்லை.

அன்று இரவு சாது ஆகார முண்ட பின் படுக்கைக்குச் சென்றான். ஆனால் நித்திரை வரவில்லை. அந்த மோகன முகத்தின் தோற்றம் அவனுடைய மனக் கண்ணில் நன்கு பதிந்துவிட்டது. மான் போன்ற மருண்ட பார்வையையுடைய அந்த அழகிய விழிகளை அவனால் மறக்க முடியவில்லை. ஒரு சமயம்போது கூட இம் மாதிரி நித்திரையின்றித் தவித்தது கிடையாது.

மாணிக்கராவ் தன் புத்திரியின் அறைக்குச் சென்றார். தினமும் படுக்கைக்குப் போவதற்கு முன்னால் அவளை ஒரு முறை பார்த்து விட்டுச் செல்வது வழக்கம். அப்போது அவளும் தன் பிதாவை வணங்கி அவருடைய ஆசி பெற்றுக் கொள்வதுண்டு. எனவே வழக்கம் போல் அன்று குமார தேவி தன் பிதாவை முழந்தாளிட்டு வணங்கி யெழுந்த போது, தம் இரண்டு கரங்களாலும் அவளை வாரியெடுத்து "உனக்கு நல்ல கணவன் வாய்க்கட்டும்!" என்று ஆசீர்வதித்தார்.

"அப்பா! தங்களுக்கு உண்மையில் அத்தகைய விருப்பம் உண்டா?" என அவள் வினவினாள். அவளது தொனியில் ஓர் வித கனிவு நிறைந்திருந்தது.

மாணிக்க ராவ் திகைத்துப் போய் நின்றார். "என்ன? என்னிடத்திலுமா உனக்குச் சமுசயம்? நல்லது. என்னை யல்லாது வேறு யார்தான் உனது மணத்தைக் குறித்துக் கவலைப்படுகிறார்கள்?" என்றார். தன் மகளது முகத்தைக் கவலையோடு நோக்கினார்.

"அப்பா! மன்னிக்க வேண்டும். எனது எதிர்கால வாழ்வு இன்பமுடன் கழிய வேண்டுமானால் நான் இருங்கோவனை மணம் புரியேன்."

மாணிக்கராவ் கல்லாய்ச் சமைந்தார். மூர்த்தூர் அரசியாகத் தன் புத்திரி யிருப்பதைக் காண வேண்டுமென ஆவல் கொண்டிருந்த அவருடைய எண்ணம் பாழாய் விட்டது. இருங்கோவனுக்குத் தான் என்ன பதில் இறுப்பது என்று அறியாது தத்தளித்தார். ஏனெனில் அவனுக்கே தன் மகளை மணஞ்செய்து கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்திருந்தார்.

மனக் கடுமாற்றத்தோடு தன் மகளை நோக்கி "குழந்தாய்! அழகிலும் நிதியிலும் வாய்ந்த மூர்த்தூர் அரச குமாரனை ஒப்புவாயா?............"

"நமது விருந்தினரான சாது..........
.........."

"சாது ஒரு சாதாரண அரச குடும்பத்தைச் சேர்ந்தவ னல்லவா? அப்படியிருக்க அவன் பால் உன் மனம் செல்லக் காரண மென்ன?"

"அவர் இதுவரையில் அடைந்து வந்த வெற்றிகளே என் உள்ளத்தை அவர் பால் இழுத்துச் சென்று விட்டன."

"ஆனல் குமாரி! மூந்தூர் மன்னனது சீற்றத்துக்கு உன் காதலன் ஆளாக நேருமே! அப்போது உன் கதியாதாகும்?"

"அப்பா! அதை நான் அறிவேன். இருங்கோவனுடன் இருந்து வாழ்வதைவிட சாதுவுடன் உயிர் துறப்பதையே நான் மேலாகக் கருதுகிறேன்."

இதைக் கேட்டதே மாணிக்க ராவின் உள்ளம் கூம்பியது. அவளது வீரப் பேச்சால் அவனுடைய இராஜபுத்திர இருதயம் ஆனந்தித்தில் மூழ்கியது. ஆனல் மறு கணத்தில் அவள் மீதுள்ள புத்திர வாஞ்சையால் உளஞ் சோர்ந்தான்.

கண்களில் நீர்துளிப்ப அவளிடம் விடை பெற்றுக் கொண்டு தத்தளித்த உள்ளத்தோடு அவ் விடத்தை விட்டகன்ருர்.

பொழுது புலர்ந்து அரண்மனைக் கீதங்கள் பாடப் பெற்றன. சாது காலையாகாரத்திற்கு அமர்ந்தான். அவனுடைய முகம் அக்க மின்மையை நன்கு எடுத்துக் காட்டியது. மோகில் மன்னான மாணிக்க ராவும் கவலை முகத்தினராய்க் காணப்பட்டார்.

உணவருந்திய பின்பு "இளவரசே! ஒரு இராஜபுத்திர கன்னிகை தனக்காக நிச்சயிக்கப்பட்ட ஒரு வாலை உதறித் தள்ளிவிட்டு உன்னை மணக்க விரும்புகிருள். அதனல் ஏற்படக் கூடிய பகைமையை உம்மால் சுமக்க முடியுமா?" என நடுங்கிய குரலில் வினவினர்.

"ஆம். ஒரு ரஜபுத்திர வீரன் இதற்குப் பின்வாங்குவதுண்டா? ஆனல் தயவு செய்து அப்பெண்மணி யார் என்று கூறுவீரா?"

சாது ஆவலே வடிவமாக அமர்ந்திருந்தான். மாணிக்க ராவின் விடையை எதிர்பார்த்தபடி சற்று முன் புறமாகச் சாய்ந்து கொண்டான்.

"எனது புதல்வி குமாரதேவிதான்" என்ருர் மாணிக்காரவ் அரைப் புன்சிரிப்புடன். சாதுவின் உள்ளம் உவகை மிகுதியால் உயர்ந்தெழுந்தது.

"அவளுக்குத் திட்டஞ் செய்திருந்தவன் யார்?"

"மூந்தூர் அரச குமாரனை இருங்கோவல்"

"அவனு? அவன் என்மீது விரல் போட்டு விடமுடியுமா?"

நல்ல தொரு சுபதினத்தில் குமாரதேவிக்கும், சாதுக்கும் திருமணம் நிறைவேறியது. மாணிக்கராவ் ஏராளமான சீதனங்களை வழங்கினர். திருமண வைபவ மெல்லாம் ஒரு வகையாக முடிந்தது. சாது தன் இள மனைவியுடன் பூகல் நகரத்துக்குப் பிரயாணமானன். அப்போது அவனது மாமனரான மாணிக்க ராவ் தான் ஒரு சிறு சேனையை அவர்களுக்குத் துணையாக அனுப்ப விரும்பினர். ஆனல் தன்னிடத்திலுள்ள 700 வீரர்களே எத்தகைய யுத்தத்தையும் சமாளித்துக் கொள்வார்கள் என்று கூறி சாது அச் சேனையை அழைத்துப் போக மறுத்துவிட்டான்.

மீண்டும் மோகில் மன்னன் வேண்ட 50 வீரர்களை மட்டும் தன் மைத்துனன் தலைமையில் அழைத்துப் போக ஒப்புக் கொண்டான்.

அரச தம்பதிகள் ரதத்தில் ஏறிக் கொண்டார்கள். ரதமும் புறப்பட்டது. சக்கரங்கள் சுழலுவதால் உண்டான ஒலி பறவைகளின் பாட்டுக்குத் தாளம் போடுவது போலிருந்தது. மணமக்கள் இருவ

MAHAMA DHYAYA DR. U.

ரும் இயற்கை உழகில் ஈடுபட்டு கழிபேருவகையுடன் வீற்றிருந்தனர். பாட்டையிலுள்ள மரங்கள், பறந்தோடும் பறவைகள் வெருண்டோடும் மிருகங்கள்—முதலான எல்லாம் அவர்களுக்கு ஆனந்த மூட்டியது.

இவ்வாறாக சாந்தன் என்ற ஊரைக் குறுகினார்கள். எல்லோர் முகத்திலும் சேர்வின் அறிகுறிகள் காணப்பட்டன. அது கண்ட சாது அவ் வூரிலேயே எல்லோரையும் தங்கி இளைப்பாறும்படி உத்தரவிட்டான். தலைவர்களுக்கென சமைக்கப்பட்ட சிறு கூடாரத்திலே காதலர்கள் இருவரும் தங்கியிருந்தனர்.

அப்போது தூரத்தில் குதிரை ஒன்று வேகமாய் வரும் ஓசை கேட்டது. சாது உற்றுக் கவனித்தான். அந்த அசுவமும் இரைக்க இரைக்க ஓடிவந்து கூடாரத்தண்டை நின்றது. அதனின்று ஒரு வீரன் இறங்கினான். சாதுவுக்கு சலாம் செய்து ஒரு கடிதத்தைப் பணிவுடன் அவனிடம் கொடுத்தான். அது இருங்கோவல் அனுப்பிய கடிதமாகும்.

அவதிப்பட்ட மூந்தூர் இளவரசனை இருங்கோவல் பூகல் நகரத்திற்குச் செல்லும் பாட்டையில் ஒரு சேனையுடன் தங்கியிருந்தான். அவனது தோள்கள் யுத்தத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. ஆனால் சாதுவினிடம் 750 போர் வீரர்களே இருக்கின்றனர் என அறிந்ததே அவ்வளவு சிறிய சேனையுடன் போர் புரிவது தன்னைப் போன்ற ஒரு இராஜபுத்திர வீரனுக்கு அழகல்ல என்று எண்ணினான். ஆதலால் இருதாப்பிலிருந்தும் வீரர்கள் நேருக்கு நேராகத் தனித்தனியே சண்டை செய்தால் போதுமானது என்று சாதுவுக்குச் சொல்லியனுப்பினான்.

சாதுவின் சைன்யமும் யுத்தகளத்திற்கு அருகில் வந்து நின்றது. அவனுக்கு உறவினனான ஜயதுங்கன் என்ற வீரன் ஒருவன் மல்யுத்தம் செய்ய ஆயத்தமாய் நின்றான். அதுகண்ட இருங்கோவல் தன் வீரர்களில் மிகப் பலாட்டியனான ஒருவனை அனுப்பினான். ஆனால் ஜயதுங்கன் ஒரே நிமிஷத்தில் எதிரியைக் கீழே சாய்த்து விட்டான். அத்துடன் இருங்கோவலின் சேனைக்குட் புகுந்து தனக்குச் சமமான வீரர்களைத் தன்னுடன் யுத்தம் செய்ய மார்தட்டி யழைத்தான்.

இவ் வண்ணமாக யுத்தம் தொடங்கியது. போர் வீரர்கள் பலர் தனித்தனியே எதிர் எதிராக நின்று வீராவேசத்தோடு ஒருவரை யொருவர் தாக்கினர். முதலில் சாதுவும் இருங்கோவலும் கைகலக்கும் நேரம் வந்தது.

குமாரதேவி ரதத்தில் தன் நாயகனுடன் அமர்ந்திருந்தாள். சாது அவளது முகத்தை நோக்கினான். அவ் வீரப்பெண்மணி யுத்தரங்கத்தையே கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய வதனத்தைத் தன்பால் திருப்பினான் சாது. உடனே அவள் அவனது கருத்தை யுணர்ந்தாள். சட்டென்று அவனுடன் ரதத்திலிருந்து கீழே குதித்தாள். முழந்தாள் மண்டியிட்டுத் தன் கணவனை வணங்கினாள். உடனே சாது அவளை அன்போடு தழுவி அவளிடம் விடை பெற்றான். குமாரதேவியும் சிறிதும் துயரமின்றி ஜெயத்துடன் திரும்ப வேண்டும் என்று சொல்லி அவனுக்கு விடை கொடுத்தனுப்பினாள்.

சாது தன் எதிரியின் சேனைக்குட் புகுந்தான். அபாயத்தின் ஓரமாகத் தான் அவன் சென்றான். என்றாலும் அவனைக் கண்டு எதிரிகள் கதிகலங்கி நின்றனர். இருமுறை வெற்றியுடன் மீண்டான். அவன் காதலி அவனை ஆர்வமுடன் ஆலிங்கனம் செய்து கொண்டாள். பகைவனது படையில் அறுநூறு வீரர்கள் சாய்ந்து போயினர். அவனுடைய படையில் சரிபாதியே மீதி.

மூன்று முறையாக சாது யுத்தத்திற்குப் புறப்பட்டான். கடைசியாகத் தன் மனைவியிடம் விடை பெற்றுக் கொண்டான். சிறிதும் தளரா உளப் பான்மையுடைய அவன் மனைவி, "அரசே! ஒரு ஆண் சிங்கத்தைப் போல் கொஞ்சமும் சோர்வுறாது யுத்தம் செய்யுங்கள்!" என்று கூறியனுப்பினாள்.

சாதுவும் இருங்கோவனும் சந்தித்தனர். சில விநாடிகளில் இருவரும் மும்மரமாக யுத்தம் செய்யலாயினர். இருவரும் வீராவேசங் கொண்டனர். சாது வீர வெறி பிடித்தவனாய் எதிரியின் கழுத்தில் தன் வாளைச் செலுத்தி விட்டான். அதோடு இருவரும் நிலத்திற் சாய்ந்தனர். அச் சமயம் ஒரு துஷ்டன் சாதுவின் பின்னிருந்து அவனது சிரத்தைத் துண்டித்து விட்டான்.

தலைவர்களிருவரும் தலை சாய்ந்ததே போரும் நின்றது. இந்த யுத்தத்திற்கே காரணமாயிருந்த குமாரதேவி—கன்னிகையாகவும், மணப் பெண்ணாகவும் இருந்த அவள் இப்போது கைம் பெண்ணாகவும் ஆனாள். உடனே தன் கணவனது ஆவியைத் தேடியடையக் கருதினாள்.

கூரிய வாளைக் கையில் ஏந்தினாள். முதலில் தன் வலக்காதைச் சேதித்தாள். தன் மாமனான பூகல் மன்னனுக்கு அதை யனுப்பினாள். பின் இடது காதைத் துண்டிக்கச் செய்து அதைத் தன் திருமண சீர்களுடன் தன் பிதாவாகிய மோகில் மன்னனுக்கு அனுப்புவித்தாள்.

சந்தியாகாலம் மறைய மெல்ல இருள் வந்து கொண்டிருந்தது. தூரத்துத் தொடுவானம் இரத்தம் தோய்ந்த யுத்தகளத்தைப் பிரதிபிம்பித்துக் கொண்டிருந்தது. சந்தனக்கட்டை குவியலின் மத்தியில் சாதுவின் உடம்பு கிடத்தப்பட்டது. குமாரதேவியும் அவன் மீது வைக்கப்பட்டாள். முகத்தோடு முகம் பொருந்தியது போல் அவர்கள் காணப்பட்டார்கள். பின் தீ யிடப்பட்டது. கட்டைகள் யாவும் உயரமாகக் கொழுந்து விட்டு எரியலாயின.

ஆக்ட் புத்தகங்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
இந்தியன் பினல்			பரம்பரை கிராமஉத்தி					
கோட் சட்டம்	3	0	யோகஸ்தர்கள் சட்டம்	1	0	கர்ணம் டெக்ஸ்ட்	1	4
கிரிமினல் லா	3	0	இன்கம் டாக்ஸ் சட்டம்	1	0	ஸ்டாம்பு ஆக்ட்	0	12
சிவில் லா	3	0	லோகல்போர்ட் ஆக்ட்	2	0	ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
விவகார சிந்தாமணி	2	8	பஞ்சாயத்துச் சட்டம்	1	4	டிரஸ்டிகள் சட்டம்	0	12
பெரிய ஹிந்து லா	2	0	இந்துதேச சாட்சிஆக்ட்	1	0	கால நிர்ணயச் சட்டம்	0	8
மூகம்மதியன் லா	2	0	தேவஸ்தான சட்டம்	1	0	நில ஆக்கிரமிப்பு என்கு		
கிராம முன்சீப் சட்டம்	1	8	எஸ்டேட் லாண்டு ஆக்ட்	1	4	ரோச்மெண்ட் சட்டம்	0	4
						கிராமச் சுகாதாரம்	0	2

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ.

பத்மாவின் போக்கு

("சாங்கா.")

"என்னடீது என்ன? என்னமோ சொல்லுவாளே. 'இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமோ?' என்று; அப்படிப்போல இருந்துண்டு நன்னா ஆழச் சாதிக்கிறாயே."

"இல்லை, அக்கா! நிஜமாகவே எனக்குத் தெரியாது. தெரிஞ்சால் என்ன, உங்க கிட்ட சொல்லப்படாதா என்ன?"

"இந்தாடீ! இந்தமாதிரியெல்லாம் என்கிட்ட 'கதை கதைக்காதே, கத்தரிக்காய் வதக்காதே' அப்படியே ஒண்ணுமே தெரியாதவள் போல 'பூலோகமோ? கைலாசமோ?' என்று பேசுகிறாயே."

"நான் சொன்னால் நம்புங்கோ, அக்கா. உங்க கிட்ட அப்படியெல்லாம் ஒண்ணும் பேத்துமாத்துப் பண்ணிவிட மாட்டேன்."

"ஏண்டி, சொல்லா விட்டால் போயேன், என்னமோ 'பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகமே அஸ்தமிச்சுப் போய்விடுமா என்ன?'"

"அக்கா! மறுபடியும் மறுபடியும் நான் ஏதோ தெரிஞ்சுகொண்டு உங்களுக்குச் சொல்லப்படாது என்று வெச்சிண்டிருக்காப்போல நினைச்சிண்டு பேசுறீர்களே."

"இந்தாடி, அம்மா! நான் சொன்னது தப்பு; தப்பு; தப்பு. போருமா? நூறு தரம் தப்பு. உனக்கு ஒண்ணுமே தெரியாது. 'வாயிலே விரல் வெச்சால்கூடக் கடிக்கத் தெரியாது' உம்.......வேணும்டி; இந்த மொட்டைக்கு வேணும், நன்னா வேணும் இதுமாத்திரமா? இன்னமும் வேணும். ஹ-ப்-பா! எல்லாத்துக்கும் பகவான் இருக்கான். அவனுக்குக் கண் அவிஞ்சு போகவில்லை. இருக்கட்டும் 'போறைத்தோண்டி நெருப்பு வெச்சாலும் புகை வாராதா என்ன?' 'மூடி மூடி வெச்சாலும் மொட்டை மொட்டைதானே.' நீ மறைச்சதினாலே தெரியாமல் இருந்துவிடாது. பணம் என் பணமாக இருந்தா தன்னாலே என்கிட்ட வந்துவிடும். பார்த்துக் கொள்ளுறேன்." என்று சொல்லிவிட்டு ஒரே உறும்லுடன் சட்டெனத் திரும்பிக் கூடத்துப் பக்கம் போய்விட்டாள் பத்மாவதி.

இதெல்லாம் ஜானகிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. தனக்கு விஷயமே சரியாக விளங்காமல் தவிக்கும்போது தன் மீது அபாண்டமான பழி சுமத்துவதென்றால் அவளால் பொறுக்க முடியவில்லை. கடுங்கோபத்தில் தாறுமாறாக ஏதேதோ பதட்டமாகக் கூறிவிட்டாளே யென்று ரோஷம் மேலிட்டது. என்ன இருந்தாலும் வீட்டிற்குப் புதிய மாற்றுப் பெண் அல்லவா? தடதடவென்று வர்ஷித்த வசை மாறியினால் அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டு எழுந்தது. முகத்தைக் கையால் தாங்கிக் கொண்டு சமையல் அறையிலேயே கீழ் நோக்கிய பார்வையுடன் உட்கார்ந்து விட்டாள். அவளறியாமலேயே அவளுடைய கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகிற்று. கதைகளில் நாத்திமார் கொடுமைகளைப்பற்றி அவள் படித்திருந்ததெல்லாம் அப்போது அவள் நினைவுக்கு வந்தது.

பெருந்துக்கத்தில் ஆழ்ந்து தன்னையே மறந்துவிட்டாள். இக்கிலையில் கூடத்திலிருந்து அவள் கணவன் இரண்டு, மூன்று தடவைகள் கூப்பிட்டது கூட அவளுக்குத் தெரியாது.

சற்று நேரத்தில் சுந்தரமே அவளிருக்கும் இடத்துக்கு வந்துவிட்டான். பார்த்தான் ஒரு நீர்க்கோலமிட்ட முகத்துடன் ஜானகி உட்கார்ந்திருந்ததை! புதிதாய்க் கலியாணம் செய்து கொண்டவன் அல்லவா? அதுவும், இரண்டாம் தாரம் என்றால் சாமானியமா? அவன் நெஞ்சம் துடித்தது.

"ஜானு! இது என்ன? என்ன கோலம் இது?"

சற்றுநேரம் வரை பதில் ஒன்றுமில்லை. பின்பு திடுக்கிட்டவள்போல் பரபரப்போடு எழுந்து நின்றுகொண்டாள். தலைமட்டும் கீழே குனிந்த வண்ணம்தான் இருந்தது.

ஒன்று, இரண்டு,;.........., ஐந்து நிமிஷங்கள் கழிந்தன. 'களுக்'கென்று சிரித்தாள். உடனே முகத்தைத் திருப்பி சிரிப்பை அடக்கிக் கொண்டாள். வெட்கத்தாலும் அச்சத்தாலும் அவள் கன்னங்கள் சிவந்தன.

"ஜானு! இது என்ன கோலம்?" என சுந்தரம் மீண்டும் வினவினான்.

"ஒண்ணுமில்லை, உங்க................"

"என்ன உங்கள்?"

"உங்க அக்கா ஏதோ பணம் வெச்சுருந்தாராம்; அதைக் காணுமாம். நான் எடுத்துவிட்டேனென்று நினைச்சுண்டிருக்கார் போலிருக்கு. படபடன்னு இத்தனை காழி என்மேலே கோவிச்சுக் கொண்டார். பல தினுஸாகவும் சோதிச்சுப் பார்த்துவிட்டார்"

"நீயா எடுத்துவிட்டதாகச் சொல்லுகிறாள்?"

"இல்லை; நேரே அதைச் சொல்லாமல் என்னென்னமோ தினுஸாகக் கேட்டுப் பார்த்தார். யார் எடுத்தார் என்று கேட்டார். எனக்குத் தெரிஞ்சால்தானே நான் சொல்லலாம்?"

"இதற்காகவா இவ்வளவு அழுகிறாய்! அசடு; அசடு; கண்ணைத் துடைத்துக் கொள். என்னிடம் ஒரு வார்த்தை சொன்னால் போகிறது. இதற்கு அழுகைஎன்ன? கண்ணீர் என்ன? அது அவள் ஜன்மத்தோடு பிறந்தது. ஏதாவது யார் மேலாவது ஒரு பழியைப் போட்டுக்கொண்டே இருப்பாள். சரி, இப்போது அவள் எங்கே? சொல்லு, சரியான வழி செய்கிறேன்."

"கேட்டுக் கேட்டுப் பார்த்துவிட்டு ஆத்திரத்தோடே, 'சரி, பணம் என் பணமாயிருந்தால் தன்னாலே என்கிட்ட வந்துவிடும், பார்த்துக் கொள்ளுறேன். 'போரைத் தோண்டி நெருப்பு வெச்சாலும் புகை வாராதா என்ன?' என்னு சொல்லிக்கொண்டே எங்கேயோ போய்விட்டார். இதுக்கு என்ன அர்த்தம்? நான் ஏதோ எடுத்துவிட்டாப் போலேயும், அவருக்குத் தெரியாமல் அதை மறைச்சுவைக்கிறாப் போலேயும், என்னதான் மறைச்சு வெச்சாலும் அது அவருக்குத் தெரிஞ்சு போய்விடும் என்னுதானே சொல்லியிருக்கார்?................................"

"ஜானு! இதென்ன மறுபடியும் அதை நினைத்துக்கொண்டு உபத்திரவப் படுகிறாயே. போனது போகட்டும், சரியானவழி செய்கிறேன் என்று ஒருதரம் சொன்னால் அந்தப் பேச்சை விட்டுவிட வேண்டும்....சரி, இதற்குச் சிரிப்பு என்ன?"

"அதை ஏன் கேட்கிறீர்கள்? என் துக்கத்தோடேகூடக் கொஞ்சம் சிரிப்பும் வாது. உங்க அக்கா எங்கேதான் வாசிச்சாரோ என்னமோ; பேசுற ஒரோரு வார்த்தைக்கும் ஒரோரு பழமொழி போட்டுத்தான் பேசுறார். அதை நினைச்சால் தான் சிரிப்பு வாது."

"நான்தான் உனக்குச் சொல்லியிருக்கிறேனே; அது அவளுடைய 'ஸ்பெஷல் ஸ்டைல்' வேறு எவராலும் அந்த

மாதிரி பேசவே முடியாது........போகட்டும், மானேஜர் வீட்டுக் கிழவி வந்தாராமே, நமது அம்பிக்கு ஏதாவது கொடுத்தாரா?"

"அதென்னவோ, எனக்குத் தெரியாது. அவர் வந்து கொஞ்சநாழி கழிச்சுத்தான் நான் ரேழிக்குப் போனேன். அவரோடேகூட யாரோ ஒரு பையனும் வந்து உட்கார்ந்திருந்தான். உடனே நான் அங்கே நிற்பதற்கில்லை. உள்ளே வந்துவிட்டேன். அக்கா மாத்திரம் அம்பியை மடியிலே வெச்சுக்கொண்டு உக்கார்ந்திருந்தார்."

"அப்படியானல் கிழவி உன்னிடம் ஒன்றும் பேசவில்லையா?"

"வீட்டுக்கும் போகிறபோது கூடத்துக்கு வந்து ஏதோ ரெண்டு வார்த்தை பேசினர்; உடனே போய்விட்டார். அவ்வளவுதான்; ஏதாவது கொடுத்தாரோ, என்னவோ, எனக்குத் தெரியாது. கொடுத்திருந்தால் அக்கா சொல்ல மாட்டாரா?"

"அக்காதான் சொல்லுவாளே. அப்படியெல்லாம் சொல்லி விடுபவளானல் நியாயமாக இவ்வளவு பணம் சம்பாதித்து விடுவாளா என்ன? அட பகவானே! இவளுக்கு எங்கிருந்து இந்த ஐம்பத்தாறு ரூபாயும் எப்படி வந்தது? கஷ்டப்பட்டு சம்பாதித் தாளோ? எல்லாம் சூண்டல் வேலை தானே; என்னிடமிருந்து சுரண்டிய பணம் என்னிடமே வந்துவிட்டது. நியாயம்தானே..............................!"

"அப்படியானல் நீங்களா அந்தப் பணத்தை வெச்சிண்டிருக்கிறீர்கள்?"

சுந்தரம் ஒரு புன் முறுவலுடன் தலையை அசைத்தான்.

ஜானகிக்கு ஒன்றுமே பேச முடியவில்லை. ஒருவிதமான கோணல் சிரிப்புடன் தன் எதிரில்நின்ற சுந்தரத்தை உற்று நோக்கினள். அவள் கண்களிலிருந்து ஒரு புதிய ஒளி வீசிற்று.

கால்மணி நேரமாயிற்று. சுந்தரம் சாப்பாடு முடித்துக்கொண்டு ஆபீஸுக்குப் புறப்பட்டான்.

அன்று முதல் பத்மாவதி, ஜானகியுடனே, சுந்தரத்துடனே நன்முக வாய் விட்டுப் பேசுவதுகூட இல்லை. அம்பி தாயில்லாக் குழந்தையாயிற்றே என்ற எண்ணமும் அவளுக்குப் பெரிதாக இல்லை. அவள் போக்கே ஒரு தினுசாகத்தான் இருந்தது.

நான்கு நாட்கள் ஓடி மறைந்தன. மறுநாள் காலை, பத்மாவதி வாயிலில் உட்கார்ந்துகொண்டு யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். மணி சுமார் 8–30. தபாற்காரனும் வந்து சேர்ந்தான்.

"உன்னைத்தானடா, அப்பா, பார்த்துக் கொண்டிருக்கேன். ரசீது வந்துவிட்டதோ?" என்றுள் பத்மாவதி மிக்க ஆவலுடன்.

'அக்னலெட்ஜ் மெண்ட்' ரசீது ஒன்றையும் கொடுத்துவிட்டுச் சென்றுன் தபாற்காரன்.

மாயவரம்,
4–6–36.

"க்ஷேமம்.

பத்மநாபன் பெரியம்மாவுக்குத் தெண்டன் ஸமர்ப்பிவித்த விக்ஞாபனம். ....நீ அனுப்பியிருந்த கடுக்கன் ஜதை வந்துசேர்ந்தது. ரசீதிலும் கையெழுத்துப் போட்டு அனுப்பியிருக்கிறேன்.....................உன் பணம் காணுமற்போனது மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கிறது. எங்கள் தரித்திரம் பிடித்த பெயரை ஏன் சொன்னுய்? அதனல்தான் அதற்கு ஆபத்து வந்துவிட்டது போலும். போகட்டும், அந்த மூதேவிகளுடன் ஒன்றும் வார்த்தை வைத்துக்கொள்ள வேண்டாமென்று அம்மா எழுதச் சொன்னுள்.... .... வேணும்
பத்மநாபன்."

இந்தக் கடிதத்தைப் படிக்கும்போதே வீட்டிற்குள் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டாள். கடிதம் அவளுக்கு ஒரு ஆறுதலா யிருந்தது.

ஒருவாரத்துக்குப் பின்பு :

"சாமி! இப்படியெல்லாம் மோசடியாவாரம் என்னு தெரிஞ்சால் நான் குடுத்திருக்கமாட்டேன். ஏதோ அஞ்சு ரூவா குடுத்துவிட்டாங்களே; இன்னம் ரெண்டு ரூவாதானே குடுத்து விடுவாங்க என்கிற நம்பிக்கை மேலேதானே குடுத்தேன்."

"மொத்தம் அப்படியானால் ஏழு ரூபாய்க்கா விற்றாய்? எந்த மாதிரிக் கடுக்கன்?"

"நல்ல சிகப்புங்க; ஏதாவது வெளியிலே போய் வித்தால் பத்து ரூவாயுக்குக் கொறையாமல் வித்து விடுவேனுங்க. தெரிஞ்சவங்களாச்சே என்னு ஏள் ரூவாயுக்கே குடுத்தேன். அதுவும் மொதல் நாளே கடனுக் கேட்டாங்க; நான் தட்டக்களிச்சு விட்டுவிட்டேன். மக்கா நாளு யாரோ தெரிஞ்சவங்க வந்து அஞ்சு ரூவா குடுத்துவிட்டுப் போனாங்க என்னு வந்து அதை வெச்சுக்குட்டுக் கேட்டாங்க. சரிதான் என்னு குடுத்துவிட்டேன்."

கடுக்கன் வியாபாரியிடம் ஏதோ பதில் சொல்லி அனுப்பிவிட்டு சுந்தரம் உள்ளே சென்றான்.

"ஜானு குட்டு வெளியாய்விட்டது, பார்த்தாயா?"

"என்ன?"

"மானேஜர் வீட்டுக்கிழவி வந்து ஐந்து ரூபாய் கொடுத்திருக்கிறார் போலிருக்கிறது. அதையும் கொடுத்து, மேலே இரண்டு ரூபாய் கடனும் சொல்லிக் கடுக்கன் ஜதையொன்று வாங்கினாளாம். யாருக்கோ, என்னவோ? கடுக்கன் வியாபாரி வந்து சண்டை பிடித்துவிட்டுப் போகிறான்."

"நிஜமாகவா?" என்று ஜானகி ஆச்சரியப்பட்டு அப்படியே வாய் பேசாமல் நின்றாள்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டே வந்த பத்மாவுக்கு மிகுந்த கோபம்வந்தது.

"அப்பா! அடேய்! 'ஒரோரு வீட்டுக்கும் ஒரோரு வாசப்படி உண்டு.' ரொம்பரொம்பக் குதிக்காதே, கிடந்துண்டு தலைகால் தெரியாமல் பாவிபோனா உம்-உம்—உம்—உம்—உம் அவள் கொ—ழுந்—தையும் உம்—உம்—உம் பாதவிக்க விட்டுட்டு உம்—உம்? இவள் நன்னாவந்து பிடிச்சுண்டாள் உன்னை ஆட்டிவைக்க" என்று ஆரம்பித்தாள்.

சுந்தரத்துக்கு எரியும் நெருப்பில் நெய்யையும் கொட்டினாற் போலாயிற்று. கடுஞ் சீற்றத்துடன், "சீச்சீ! கழுதை! வாய் என்ன பலமாகத்தான் இருக்கிறதோ? கிளம்பு என் வீட்டைவிட்டு. இங்கே உனக்கு வேலை கிடையாது" என்றான்.

என்ன செய்வது? வாய் திறக்காமல் உடனே புறப்பட்டாள் பத்மாவதி, தன் மூட்டை முடிச்சுகளுடன்.



கோணங்கி வேலை

(ஏ. முத்துசிவன், பி. ஏ. ஆனர்ஸ்.)

ரெங்கூன், கொளும்பு முதலிய இடங்களிலும் இங்கு தமிழ் நாட்டிலுள்ள முனிஸிபாலிட்டிகள், இன்னும் இதர இடங்களிலும் தாழ்மையாக எழுதி விசாரித்ததில் 37643 தடவைகள் வள்ளிக்குத் திருமணம் நடந்து வந்ததாகத் தெரியவந்தேன். ஸ்ரீமான் பொதுஜனம் உடனே வள்ளிக்கு எத்தனை தடவை விவாகாத்து ஏற்பட்டிருக்கிறதென்று கேட்டுவிடக் கூடாது. தற்காலம் ஆகாயவிமானம் பறக்கிறபொழுது கல்யாணம், கீழே இறங்கி வந்ததும் விவகாரத்து அதெல்லாம் நாகரீகம். இது அப்படியன்று. அபிமானத்தைப் பொறுத்து பக்த கோடிகளின் நடிப்பு.

அடுத்தாற்போல 37644-ந் தடவை நடந்த வள்ளி திருமணத்துக்குப் போயிருந்தேன். தாம்பூலமெல்லாம் காசு கொடுத்துத்தான் வாங்கவேண்டியதாகிவிட்டது. அங்கு ஓர் விஸ்தாரமான காட்சி. பிரத்தியட்சமாகக் காட்ட முடியாத காட்சிகளை திரைகளின் உதவிகொண்டு காட்டுவது நாடக இயல்பு. ஆனால் அதில் பொருத்தமென்ற பிரச்னை மிகவும் கவனிக்கத்தக்கது. அன்றெனில் பாரதியார் கூறினாற்போல "கூளம், கூளம், கூளம்"தான்.

வள்ளிக்கும் நாரதருக்கும் தினைக் கதிர்களும், பரணும் விளங்கக்கூடிய ஓர் காட்டில் சம்பாஷணை நடக்கிறது. ஆனால் இங்கு இடம் அசல் டவுனிலுள்ள நாடக மேடை. அந்தக் காட்சியை திரையின் மூலம்தான் காட்டமுடியும். அரேபியா தேசத்துக் கட்டிடங்களை ஓர்பால், வெஸ்ட்மினிஸ்டர் அபி இமிடேஷன் ஓர்பால், நூல் வைத்து அளந்தாற்போன்ற வீதி ஒழுங்கு. இடையிடையே எலக்டிரிக் விளக்குகளும் ஸ்தம்பங்களும் நாரதருக்கும் வள்ளிக்கும் பின்னிருந்தால் எப்படி இருக்கும். அந்த வயிற்றெரிச்சலை இன்னும் சொல்லவேண்டாம்.

அதுபோல எல்லோரும் வாசித்து அறிந்து கொள்ளக் கூடியதே என்று எண்ணி என்னுடைய பாட்டியின் இயற்கைக்கு முற்றிலும் விரோதமான ஓர் திரையில் எங்கள் பாட்டியைத் தீட்டிக் காட்டினால் விகடமாமா சும்மா விடுவாங்களா? நம்மை அம்மானை ஆடிவிட மாட்டாங்க?

தயவுசெய்து மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். வெளியே தெரிவித்துவிடக்கூடாது. நமக்குப் பெண் இன் கிடைக்கிறது கெட்டுப்போகும்.

எச்சில் கையால் காக்கை விரட்டாத பேர்வழி. ஆனைத் தொட்டுவிட்டு வைக்கோற் படைப்பைத் தொட்டால் அக்னி மயந்தான். பிச்சைக்காரன் ஒருவனிடமிருந்தாவது வாழ்த்துச் சொல் வாங்கி அறியார். சர்வாதிகாரத்தில் முசலோனியோ ஹிட்லரோ உரை போடக்காணார். உலகம் அனைத்தும் ஓர் தட்டு, தான் ஓர் தட்டு, எப்ப்டியும் யானைக்கும் அடி பிசகாதா?

"குடு குடு குடு குடு, குடு குடு குடு குடு
நல்லகாலம் வருகுது நல்லகாலம் வருகுது

கோணங்கி வாக்கு குணமுள்ள வாக்குங்க
நாத்திகந் தொலையுது ஆத்திகம் வளருது
வறுமை தொலையுது வாலறிவு பொங்குது
பெருமை வளருது பேறு பெருகுது
சொல்லடி, சொல்லடி சூரி மாகாளி
எ, மலையாள பகவதீ..........”

அப்போதுதான் காப்பி சாப்பிட்டுவிட்டு சோபாவில் சாய்ந்தேன். கோணங்கி இப்படிப் பாடினதும், “ஏது, ஏது, இவன் புதுமைக் கோணங்கிபோலும், நல்லா பாடுகிறனே” என்று எண்ணினேன்.

சாதாரணமாக ராஜரெத்னத்தின் தோடிக் கச்சேரி கேட்டுவிட்டுத் தெரு வழியே வந்தால் சில அபிமானிகளுக்கு ஜோர் கிளம்பிவிடும். உடனே அவர்களும் தோடிபாட ஆரம்பித்து விடுவார்கள். முதல் எடுப்பும், பிடிப்பும் பார்த்தால் ராஜரெத்னமே தோல்வியடைய நேரிட்டு விடுவதுபோலிருக்கும். இரண்டு நிமிஷங்கள் கழிகிறதிற் குள்ளேயே சங்கராதியாகிவிடும். இது சங்கீத அபிமானிக ளிடையே காணும் அநியாயம்.

இவ்வளவு முறுக்காகக் கோணங்கி பாடினதும் பாட்டி உள்ளேயிருந்து வந்தாள். எல்லாம் ஆரம்ப சூரத்தனந்தான் போலும்.

“ஏண்டா நோக்கு வேற எதாச்சும் வேலை கிடையாத வெறுமனே என்னமோ அள்ளிக் கொட்றய” என்றுள் பாட்டி.

இந்த நேரத்தில் கோணங்கி சாமாசி பாட்டுக்களை அள்ளி விடுவா னென்று நினைத்தேன். பெரிய ஏமாற்றம். கொடுந் தமிழில் ஆரம்பித்து விட்டான்.

“ஆச்சி, நம்ப பேர்போன கோணங்கிங்க நல்ல குறி சொல்லுங்க.”

இந்த நேரத்தில் என் தங்கை சற்று ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். கோணங்கிகளுக்குக் கழுகுக் கண் என்றே நினைக்கிறேன். ஒரு பார்வையிலேயே அவளுடைய உடல் மெலிவைக் கண்டு விட்டான் போலும். உடனே பாட்டியிடம் கதையளக்க ஆரம்பித்து விட்டான்.

“கவல கவல கடுங்கவல பாட்டியம்மா
பெண்ணொன்றைப்பற்றி பெருங்கவலை
[கொண்டிருக்கேன்
தோட்டத்தக்குள்ளே தென்ன மரத்தருகே
பாட்டி அப்பெண்தான் பயந்து மிருக்காளே
உணவுஞ் செல்லாது உறக்கமுங் கொள்ளாது
நடையுந் தளர்ந்துவிடும் நாட்டமுங்
[குறைந்து விடும்

கோணங்கி வாக்கு குணமுள்ள வாக்குங்க
கோளில்லாக் குறி சொன்னேன் கொள்
[ளுங்க பாட்டியம்மா''

என்று பாடினன்.

எனக்கு அவன் பிழைப்பைக் கெடுக்க இஷ்டமில்லை. மேலும் பாட்டி இந்த சந்தர்ப்பத்தை எவ்வாறு சமாளிக்கிருள் என்பதைப் பார்க்கவும் எனக்கு ஆசை அதிகம். ஏதோ பற்றற்ற அயலான் போல் பார்த்துக்கொண்டே இருந்தேன்.

குருவியும் ஏற்று; பனம்பழமும் விழுந்தது என்ற மாதிரி·பேத்திப் பெண்ணுக்குள்ள உடல் நலக்குறைவும் கோணங்கி சொன்னதும் பாட்டியின் அஞ்சா நெஞ்சத்தைக் கலக்கிவிட்டன. கோணங்கி வாக்கில் மெள்ள மெள்ள நம்பிக்கை ஊற

ஆரம்பித்துவிட்டது.

''சனியன், கருக்கல்ல, அந்தி சந்தியப்போ கொல்லப்புறம் போகாதேன்ன கேட்டுத் தொலைக்கிறதா. கழுதையாட்டம் ஓடுறது. அதுக்கு என்னடா சேயறது'' என்ருள்.

''ஆச்சி, நம்பகிட்ட குறளி இருக்குதுங்க' என்று சொல்லி சுருட்டுப் பெட்டி மாதிரி ஒன்றை எடுத்து அதில் ஏதோ கறுப்பான ஓர் உருவத்தைக் காட்டினன். இரண்டு எலும்புத்துண்டு, பாசிமாலை எல்லாவற்றையும் பாட்டி பார்த்தாள்.

கோணங்கிகளெல்லாம் பலே தந்துவ நிபுணர்கள்.

''இதனுட சக்தி ரொம்பங்க. காத்து, கருப்பு, பேய், பிசாசு அல்லாம் சூரியனைக் கண்ட பனிதாங்க''

''சரிடா இப்போ என்ன பண்ணணும்.''

''குடு குடு குடு குடு குடு குடு குடு குடு
கோணங்கி வாக்கு குணமான வாக்
[குங்க
சொல்லடி மாகாளி மலையாள பகவதி
அந்தரி, சுந்தரி, அகிலாண்ட ஈஸ்வரி''

''ஆச்சி, ரொம்ப இல்லீங்க. ஒரு நாழி அரிசி, கொஞ்சம் உப்புப் புளி மொளவத்த ஒரு பெட்டியில் வச்சுக் கொண்டாருங்க; ரெண்டணவுங் காணிக்கை வையுங்க. நமக்கல்ல. அல்லாம் மலையாள பகவதிக்கு. அரிசிய மந்திரிச்சுத் தாரேன். அத்த குதில்ல போட்டு தினம் பொங்குறப்போ ஒருபிடி அரிசி எடுத்துப்போடுங்க. அரமண்டலம் சாப்பிடணும். அல்லாம் பகவதி கிருபையால் பறந்திடும்'' என்ருன்.

பாட்டி என்ன எண்ணிளோ எல்லாம் கொண்டுவந்து விட்டாள்.

''ஆச்சி அத்தமங்க தலைசுத்திக் கொண்டாருங்க. மூணுதாஞ் சுத்துங்க''

நெறிதவறுது செய்து எல்லாவற்றையும் கோணங்கி முன்னர் சமர்ப்பித்தாள்.

“குடு குடு குடு குடு குடு குடு குடு குடு
அந்தரி சுந்தரி அகிலாண்ட ஈஸ்வரி
மந்தர நாயகி, மலையாள பகவதி
மங்கய மருட்டும் மாயப் பேயை
தங்கவிடாது தாக்கி விரட்டுவாய்
சுந்தரமுஞ் செல்வமும் சொகுசான [வாழ்க்கையும்
பொங்கவே நீயும் போற்றி அருளுவாய்
குடு குடு குடு குடு குடு குடு குடு குடு.”

என்று சொல்லித் தன்னிடமுள்ள கரிய உருவத்தை எடுத்து அரிசியை மூன்று தரஞ் சுற்றி, “எங்கே உன் ஆதிக்கம், ஓடிப்போ நில்லாதே” என்று சொல்லி அரிசியின்மேல் ‘தூ, தூ, தூ’ என்று மூன்று தடவை துப்பினான். அவ்வளவுதான் ஆட்டங் குளோஸ். வந்ததற்குப் பலன் கிட்டிவிட்டது. பாட்டிக்கு அடங்காத கோபம். வயிற்றெரிச்சலுங்கூட “அட கட்டையில போறதே, அல்பாயுசு வாரிண்டு பூட...................” என்று வாழ்த்தினார்.

எனக்கு ஒரு தங்கமெடல் பண்ணிப் போட ஆசை. தங்க விலை இறங்கட்டும்; பார்த்துக் கொள்வோம்.

மங்கையர் கூந்தல் அலங்காரம்

"இன்னமும் ஒரே ஒரு நிமிஷம்"

—(0)—

(ஸீ. ஆர். ஜி. ராகவன்.)

"ஓரியண்டலில்" இன்று பாமா விஜயமாமே! நாம் சென்று பார்த்து வருவோமா? என்றாள் என் உயிர் துணைவி பத்மாவதி. இனி என் செய்வது? "ஆஹா! அவசியம் போவோம்," என்று பதில் கொடுத்தேன் நான். நாங்களிருவரும் வாழ்க்கை யினிதே நடப்பதற்காகப் பல முறைகளை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். அவைகளில் பத்மாவதி தீர்மானிப்பதை யெல்லாம் காரிய ரூபத்தில் நடத்துவது என் கடமையாகும். மாலை 7-45 மணிக்கு காட்சி. அதற்கு முன்பே மத்தியானம் 12-மணிக்கு ஒரு சிறு தூக்கம் தூங்கினேன். பிறகு மாலை 4-மணிக்கு எழுந்து முகத்தை நன்கு சுத்தி செய்துகொண்டு சிற்றுண்டியையும் காபியையும் அருந்தினேன். பிறகு எனது அலாரம் டயம்பீஸ் 5-30 மணி என்று தெரிவித்தது.

"பத்மா! பத்மா!! மணி 5-30 ஆகிவிட்டது. சீக்கிரம் புறப்படு". இதோ! நான் டிரஸ் செய்துகொள்ள வேண்டியது தான் என்று நாற்காலியில் சாய்ந்து கொண்டு தினசரியை 6 மணி யடிக்கும் வரை புரட்டிக்கொண்டிருந்தேன்.

பத்மா :— "நாழிகையாயிற்று"

புருஷன்:— "இப்போ இரண்டே நிமிஷங்களில் வந்துவிட்டேன்" என்று மெதுவாக அவள் ரூம் வாசலில் நின்று பார்த்தேன். கண்ணாடி முன் அவள் நின்றுகொண்டிருந்தாள். மற்றும் மூஞ்சிக்குப் பவுடர் போட்டு சிவப்பு புடவையைக் கட்டிக்கொண்டு அழகு பார்த்துக்கொண்டு இருப்பதைப் பார்த்து எனக்கு மிகுந்த சிரிப்பு வந்துவிட்டது.

புருஷன்:— "பத்மா நாழியாய்விட்டதே."

பத்மா:— "இதோ ஒரே நிமிஷம்."

பத்மா இவ்விதம் சொன்னபிறகு 15 நிமிடங்கள் காத்திருந்தேன்; வந்தபாடில்லை. அதனால் நான் அவளைக் கூப்பிடவுமில்லை.

அப்படியே நான் வெளிக்கதவை மெதுவாக சாத்திக்கொண்டு சென்றுவிட்டேன். கால்மணி நேரத்துக்குள் "ஓரியண்டலை" யடைந்தேன். அப்பொழுதுதான் 'காக்ஷி' ஆரம்பமாகி யிருந்தது. உள்ளே சென்று காட்சியைக் கண்களினால் கவனித்துக் கொண்டிருந்தேன்.

நடுவில் காக்ஷியின் உன்னத நடிப்பையும், சங்கீதத்தையும் கண்டு ஆனந்தித்தேன். காட்சி 9 மணிக்கு முடிவடைந்தது. வீட்டை நோக்கிப் புறப்பட்டேன். போகும் பொழுது ஒரு பெரிய யோசனை வந்துவிட்டது. அதாவது பத்மா என்னை எவ்விதம் வரவேற்பாள், மற்றும் அவளைத் தனியே விட்டு நான் மாத்திரம் சென்றதை அறிந்துகொண்டால் கோபங் கொள்வாளே என்று யோசனை செய்துகொண்டு விட்டு வாசலை யடைந்தேன். அங்கு கதவு நான் எவ்விதம் மூடியிருந்தேனோ அவ்விதமே மூடியிருந்தது. மெதுவாகத் திறந்துகொண்டு உள்ளே சென்று கூடத்தில் 'பத்மா' இல்லாமைகண்டு பயந்தேன்!

"பத்மா! பத்மா!! பத்மா!!!" என்று மூன்று தரம் கூப்பிட்டும் பதிலில்லை.

என் மனம் பயந்தது. மற்றும் திடுக், திடுக் என்று அடித்துக்கொண்டது. மற்றும் பல எண்ணங்களை எண்ணி கடைசியில் 'அவள் தோட்டக் கிணற்றில் வீழ்ந்துவிட்டாளோ?' என்று கிணற்றை யடைந்தேன். அங்கும் ஒன்றும் புலப்படவில்லை.

பிறகு மனம் தெளிந்து ஒவ்வோரறையைத் தேடிக்கொண்டு வந்தேன். பிறகு அவளறைக்கு வந்து பார்த்தவுடன் கொஞ்சம் திறந்திருக்கக் கண்டேன். தலையை நீட்டி உள்ளே பார்த்தேன். அங்கே 'பத்மாவதி' தன்னை லாவண்ணியமாய் அலங்கரித்துக்கொண்டிருந்தாள். மற்றும் அவளணிந்திருந்த நீலவர்ணப் பட்டு சேலையும் ரோஜா நிற ஜாக்கட்டும், மற்றும் விலையுயர்ந்த நகைகளும் அவளை ஒரு தெய்வமாதென நினைக்கும்படி செய்தது. ஆனாலும் நான் சிரிப்படக்க முடியாமல் சிரித்துவிட்டேன். என் சிரிப்பின் சத்தத்தைக் கேட்டு அவள் திரும்பினாள்.

"கண்மணி! பத்து!! என்ன இன்னும் செய்துகொண்டிருக்கிறாய்?"

அப்பொழுதுதான் அவள் என்னை நோக்கி "நாழிகையாய்விட்டதா?" இதோ இன்னும் ".ஒரே நிமிஷம்தான்" என்று புன்முறுவலுடன் கூறினாள்.

அப்பொழுது பத்மாவுக்காக மறுபடியும் ஓரியண்டலுக்கு செல்வதா என்று எண்ணம் எழுந்தது.

மருமகள் துயரம்.

("ராதா")

"ஐயோ! என் மனம் பதறுகிறது. ஆவியோ சோர்கிறது. கைகால்கள் வலிக்கின்றன. எத்தனையோ பாக்யவதிகளின் உயிரை வருந்தாது திடீரென்று கவர்ந்து செல்லும் காலன் என்னுயிரை ஏன் கொண்டுபோகவில்லை. அதுவும் என் பாபமா!" என்று இங்ஙனம் என் விதியை நொந்துகொண்டே கண்ணீருகுத்தேன் யான்.

அதற்குள் "என்னடீ சாலா! பாவம். இரண்டாயிரம் பேருக்கு சமையல் செய்து பரிமாறி ரொம்ப சிரமம். கொஞ்சநேரம் சிரம பரிகாரத்திற்கு வேண்டுமானால் விசிறட்டுமா" என்ற குரல் கேட்டதும் திடுக்கிட்டுக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வெளிவந்தேன்.

உடனே என் மாமியும் என் கன்னத்தில் இடித்துக்கொண்டு, "நீதானேடி வெண் கலப்பானை தேய்த்தாய். அதில் கரி கொஞ்சமாவது போயிருக்கிறதா? கடனுக்கல்லவோ காரியம் செய்கிறாய். புடவை மட்டும் ஒரு டஜன் வாங்கிவரும்படி ஆம்படையானுக்கு உரையெற்றத் தெரிகிறதே. பத்து சரிவரத் தேய்க்க மாத்திரம் தப்பு இல்லையோ" என்று சீறினாள். அதற்கு நான் சாந்தமாகவே, "அம்மா. ஏதோ அவசரத்தில் தேய்த்துவிட்டேன். மன்னியுங்கள்" என்று கெஞ்சினேன்.



அதற்கும் மனமிளகாமல், "நாயே, இந்த பசப்பு வார்த்தையெல்லாம் எதற்கு? நீ பொரு பெண்ணு! வந்து இன்னும் ஒரு வருஷமாகவில்லை அதற்குள் புடவையாம், இரவிக்கையாம், சோப்பாம். என் குடும்ப ஸ்திதியும், கௌரவமும் என்ன? நீ

போடும் மந்திர மென்னடி'' என்று என்னை எட்டி யுதைத்தாள்.

என் மாமி உதைத்த உதையில் நான் குட்டிக்காணம் போட்டுக்கொண்டு கீழே விழுந்தேன். என் தலை பக்கத்தி லிருந்த கதவில் மோதுண்டு இரத்தமும் கசிய ஆரம்பித்தது. நான் என்னையும் அறியாது ஒரு நிமிடம் அழுதேன். மறுவிநாடி மறு உதை விழாமல் இருக்கவேண்டுமே என்று விழுந்த உதையையும் பொருட்படுத்தாது எழுந்து நின்றேன். உடனே என் மாமி "குளத்திற்குத் தொலைந்துபோய் தண்ணீர் கொண்டுவா. மணியோ பத்தாகிவிட்டது. இனிமேல் நீ வந்து சமைத்து என்னிழ வெடுக்கப் போகிறாய். பிண்டம் மூன்று மணிக்குத்தான்'' என்று அன்பொழுக மொழிந்தாள்.

இதைக் கேட்டதும் எனக்குத் துக்கம் தானவில்லை. காலையில் எழுந்ததும் அடுப்பு சாம்பல் வாரி, வாசலுக்குச் சாணி தெளித்து, மெழுகி பெருக்கி, பத்து பாத்திரம் தேய்த்து, கிணற்றுத் தண்ணீர் 25 நடை கொண்டுவந்து, என் மாமி முதலியவர்களுக்குக் காப்பி போட்டுக் கொடுத்துப்பின் மாட்டுக் கொட்டில் போல் அங்கு மலைபோல் குவிந்திருக்கும் சாணத்தையும், குட்டைபோல் தேங்கியிருக்கும் மூத்திரத்தையும் அள்ளிப் பெருக்கி இவைபோன்ற மற்ற எல்லாக் காரியத்தையும் நானே செய்யவேண்டும். ஏன் எனக்கு ஒத்தாசையாக யாராவது காரியம் செய்தால் வேலைகள் சீக்கிரம் முடியாதா? என் நாத்திமார்கள் மாத்திரம் காலை ஏழுமணிக்குப் படுக்கையை விட்டெழுந்து கொட்டாவி விட்டுக்கொண்டு இடிச்ச புளிமாதிரி படுக்கையிலேயே உட்கார்ந்துகொண்டு வம்பு பேசவேண்டும். ஒரு துரும்பையும் எடுத்து அப்புறம் போடக்கூடாது. அப்படித்தான், தாங்கள் உட்காருமிடத்தில் இருக்கும் பாத்திரத்தை நான் தேய்க்க முற்றத்தில் தப்பித்தவறி எடுத்துப் போட்டாலும் என் மாமி, "நீ, ஏண்டி சிரமப்படுகிறாய். அவளிடம் சொன்னால் எடுத்துப் போடுகிறாள். நீ உட்கார்'' என்று சொல்லவேண்டும். என்ன நான் மாத்திரம் ஒரு தாய்க்குப் பிறக்கவில்லையா? இவர்களுக்கு ஒரு துரும்பை எடுத்துப் போட்டால்கூட தேகம் வலிக்கும்போது எல்லா வேலைகளையும் தனியாகவே செய்யும் எனக்கு உடம்புவலி எப்படி யிருக்கும். என் உடம்பு மாத்திரம் என்ன இரும்பா? எவ்வளவு தடவை என் நாத்திமார்கள் தங்கள் புக்ககத்துக் கஷ்டங்களைச் சொல்லும்போது என் மாமி அவர்களுக்காக கண்ணீர் சொரிந்திருக்கிறாள். அந்தக் கண்ணீர் இப்பொழுது எங்கே போச்சு. தன் மக்கள் ஒருமாதிரி; பிறமக்கள் ஒரு மாதிரியா? அதுதான் போகட்டும். எல்லாக் காரியங்களையும் முணுமுணுக்காது நானே செய்தாலும் அதற்கும் ஒரு "லொடுக்கா'', என்னே புக்ககத்து வாழ்வு!

நானும் குளத்திற்குச் சென்று ஸ்நானம் செய்து வந்தேன். என் மாமியும் தன் அருமை மக்களை நோக்கி "என்னடீ, உங்களுக்கு வெந்நீர் போடச் சொல்லட்டுமா? கிணற்றுத் தண்ணீர் போடலாமல்லவா'' என்றாள்.

அதற்கு அவ் வுத்தமிகளும் "என்ன அம்மா, அப்படிக் கேட்கிறாய். கிணற்றுத் தண்ணீரில் ஸ்நானம் செய்தால் எங்கள் தலை சிக்குப் பிடிக்காதா'' என்றார்கள்.

அடுத்த நிமிடம் குளத்துத் தண்ணீர் பத்துகுடம் கொண்டுவரும்படி எனக்கு உத்திரவு பிறந்தது. நானும் சிவசிவா என்று கிராமத்திற் கப்பால் கால்மைல் தூரத்திலிருக்கும் குளத்திலிருந்து தண்ணீரும் கொண்டுவந்து கொண்டிருந்தேன்.

குளத்திலிருந்து கடைசி நடை கொண்டுவரும்போது வீட்டில் பெரிய இரைச்சலும் சண்டையுமாக இருந்தது. என் மாமி "உன் மனைவிக்கு மாத்திரம் புடவை வாங்கி வர உனக்கு எங்கிருந்தா வது பணம் வரும். எங்களுக்கு என்றால் இருக்கிற பணமும் எங்காவது ஓடி ஒளிந்து கொள்ளும். இப்படி சந்தியில் நிற்கத்தானே உன்னை நான் பிள்ளையாய்ப் பெற்றது. நீ என்ன செய்வாய்! எல்லாம் அவள் போட்ட சொக்குப் பொடிடா'' என மூக்கை சிந்திப் போட்டுக்கொண்டு ஓல

உள்ளிருந்து வந்தவர்தான் கொண்டு வந்த சிகப்பு விளக்கைக் காட்ட கொள்ளிவாய் பிசாசு சடக்கென்று நின்றது. அதன் கண்ணின் பிரகாசமும் சிறிது மங்கிற்று.

இப்படியாக ஒரு நிமிடநேரம் பொட்டிப்பாம்புபோல் சிகப்பு விளக்குக்குப் பயந்து நின்றது அப்பிசாசு. என்னே அச் சிகப்பு விளக்கின் மகிமை! காம்பவுண்டில் காத்திருந்த ஜனங்கள் கொள்ளிவாய் பிசாசின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு கும்மாளம் அடிக்கத் தொடங்கினர். மறுபடியும் உள்ளிருந்து வந்தவர் சிகப்பு விளக்கை பச்சை விளக்காக்கினர். அதை கொள்ளிவாய் பிசாசின் முகத்தில் இருமுறை ஆட்டினர். இதுகாறும் கொள்ளிவாய் பிசாசா யிருந்த 'செங்கோட்டை பாஸஞ்சர்' மறுபடியும் பிரகாசத்துடன் கூடிய 'சர்ச்' லைட்டுடன் சோழ வந்தான் புகைவண்டிச்சாலையைத் தாண்டி பெருங் குரலுடன் அகன்றது.

நூதன தமிழ் நாவல்கள்.

வடுவூர்-கே. துரைசாமி ஐயங்கார், B. A. எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
திகம்பர சாமியார்			துரைக்கண்ணம்மாள்	2	4	மிஸ்டர் பூச்சாண்டி		
பால்ய லீலை	5	0	லக்ஷ்மீகாந்தம்	2	0	எம்மே!	1	2
மிஸிஸ் லீலா மோகினி	3	0	திரிபுரசுந்தரி	2	0	சோமசுந்தரம்	1	2
மன்மதபுரியின் மூடு மந்திரம்	2	12	இராஜேந்திர மோகனா	2	0	டாக்டர் சோணாசலம்	1	2
கனகாம்புஜம்	2	12	வசந்தகோகிலம்	1	4	பச்சைக்காளி	1	2
தில்லைநாயகி	2	4	முத்துலக்ஷ்மி	1	4	சமயசஞ்சீவி	1	2
ஸதானந்த போதக சாமியார்	2	4	நீலலோசனி	1	2	சொக்கன் செட்டி	1	2
			கலியாண சுந்தரம்	1	2	பூஞ்சோலையம்மாள்	1	2
பன்னியூர் படாடோப சர்மா	2	4	நங்கை மடவன்னம்	1	2	சிவராமகிருஷ்ணன்	1	2
			சிங்கார சூர்யோதயம்	1	2	மாயசுந்தரி	0	12

செய்யூர்-எஸ். சாரநாயகி அம்மாள் எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.
சிவபாக்யம்	1	8	நித்யகல்யாணி	0	12
அபராஞ்சி	0	12	சண்முகவடிவு	0	5
ஞானக்கொழுந்து	0	12	மன்மத விஜயம்	0	4
சம்பத்குமார்	0	12			
ரமாமணி	ரூ. 2	0 0			

எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியவை.

	ரூ.	அ.
கனகமணி	2	4
பத்மாட்சி	2	0
வசந்தா	1	8
வீரகேசரி	1	8
சுந்தரி மனோகரன்	ரூ. 1	4 0

கருணாநிதி டிபோ, 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

கான்ஸ்டேபிளின் ஏமாற்றம்

வங்காளத்தில் பிரசித்திபெற்ற நடிகை ஸ்ரீமதி. வீணாதேவி.

ஆனால், நமது பட முதலாளிகளோ தாங்கள் எவ்வளவு ஆபாசமாக படங்களைத் தயாரித்தாலும் பிறர் குற்றங் கூறக் கூடாது என்று விரும்புகிறார்கள். கலாரஸிகர்கள் சினிமா உலகில் தமிழ்ப் படங்களும் உன்னத நிலையடைய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு தாங்கள் காணும் படங்களில் இருக்கும் குற்றங்களை எடுத்துக்காட்டி, அடுத்த படத்தில் அவ்வித குற்றங்கள் ஏற்படாதபடி சீர் திருத்திக் கொள்வார்களென்று எடுத்துக் கூறினால், தமிழ்ப்பட முதலாளிகள் சீறி விழுகிறார்கள். உதாரணமாக, நம் சென்னையில் ஒரு தியேட்டரில் தற்போது காட்டப்பட்டு வரும் ஒரு படத்தைப்பற்றி நான் விமரிசனம் எழுதியிருந்தேன். அப்படம் சென்னை நகரிலேயே உள்ள ஒரு ஸ்டூடியோவில் எடுத்திருந்தாலும் திறமையாக எடுக்கப் பட்டிருந்ததால், அப்படத்திலுள்ள நல்ல அம்சங்களை யெல்லாம் வெகுவாகப் பாராட்டிவிட்டு, ஒரு சிறு குற்றங்களை-அதிலும் பெண்ணுலகை அவமதிப்பதாகவுள்ள ஒரு பாகத்தைக் குறிப்பிட்டு, அவை இல்லாதிருந்தால் நன்றா யிருக்கும் எனக் கூறினேன். உடனே அப்படத்தைத் தயாரித்தவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. நான் அப்படத்தைப் பெரும்பாலும் பாராட்டி யிருந்ததெல்லாம் அவர்கள் கண்களில் படவில்லை; நான் எடுத்துக் காட்டி யிருந்த குற்றம்தான் அவர்கள் கண்களை உறுத்தியது. இப்பேர்ப்பட்ட மனப்பான்மை படமுதலாளிகளுக்கு இருக்கும் வரை தமிழ்ப்படங்கள் எவ்விதம் உன்னத நிலையடையும்? மற்ற பாஷை படங்களோடு எக்காலத்தில் தமிழ்ப்படம் சமத்துவம் வகிக்கமுடியும்? சர்வதேச சினிமாப் படக்காட்சி விழாவில் பூனா பிரபாத் ஸ்டூடியோவுக்குக் கிடைத்திருக்கும் உன்னத ஸ்தானம், நமது தமிழ் ஸ்டூடியோக்களுக்கு எந்த யுகத்தில் கிடைக்கும்? "அமரஜோதி" போன்ற ஒரு படத்தைத் தயாரித்து சர்வதேச சினிமாப் படக்காட்சி விழாவுக்குத் தமிழ்ப்பட முதலாளிகள் எக்காலத்தில் அனுப்புவார்கள்? என்று தாழ்மையாகக் கேட்கிறேன்.

ஸ்ரீமதி. பத்மா. "கருப்புத் திருடன்" என்னும் படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார்.



"சம்சார நௌகா" என்னும் கன்னடம் பேசும் படத்தில் ஒரு காட்சி.

தமிழ் போட்டிப் பரிசு.

ரொக்கப் பரிசு ரூபா 1500!

முதல் பரிசு ரூ. 1000. 2-வது பரிசு ரூ. 500.

1.	— க்கு	ஓர் அவயவம்
2.	— சூரி	ஓர் நோய்
3.	— ங்காய்	ஓர் காய்
4.	— மன்	கர்லன்
5.	— னம்	காடு

முடிவு தேதி 31—7—36

கோடிட்ட இடத்தைப் பூர்த்திசெய்து தனி காகிதத்தில் விடை எழுதி பிரவேசக் கட்டணம் ஒவ்வொரு விடைக்கும் நாலணு வீதம் M. O. செய்து M. O. ரசீதையும் சேர்த்து 31-7-36-க்குள் வந்து சேரும்படி அனுப்பவேணும். எல்லா விஷயங்களுக்கும் ஆசிரியர் தீர்மானமே முடிவானது. இப் போட்டிப் பரிசின் முடிவு பின் அவரவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

S. நாராயணசாமி, தெற்கு பனையூர்,
வலிவலம் போஸ்டு, (தஞ்சாவூர் Dt.)

ளில் சிந்திப்பதுண்டு. நம் படங்களில் எந்த விசேஷத்தைக் கொண்டு—சிறந்த கதைப் போக்கா! நடிப்புத் திறமையா! நடிகர்களின் அழகிய தோற்றமா! இனிய பாடலா! அல்லது சிறந்த டைரக்ஷனா!—எந்த விசேஷ அம்சத்தைக் கொண்டு பிற மாகாணத்தார் பார்க்க விரும்பி வரவழைப்பார்கள்? என்று என்னுள் எழுந்த வினாவுக்கு இதுவரை விடையளிக்கவே முடியவில்லை.

"நாம் சினிமா கலைக்கே புதியவர்கள்தானே! நமது தமிழ்ப் படங்கள் பாலப் பருவத்திலிருக்கின்றன. இன்னும் சில நாட்கள் சென்றால், தமிழ்ப் படங்களும் மற்றப் படங்களைப்போல் உயர் நிலைக்கு வந்து விடுகின்றன" எனப் படமுதலாளிகளில் சிலர் சமாதானங் கூறலாம், அதை

யானும் அறிவேன். பம்பாய், கல்கத
வாசிகளுக்கும் இச் சினிமாக்கலை சொ
மன்று. அது மேனாட்டாரால் க
பிடித்து அளிக்கப்பட்டதே என்பது ய
ருக்கும் தெரியும். ஒரு காலத்தில் பம்ப
கல்கத்தா படங்களும் பால பருவத்
தான் இருந்தன. ஆனால் அந் நாடு
ளுள்ள கலைவாணர்களும், போறிஞர்க
அக்கலையில் எவ்வளவு சீக்கிரம் தேர்
பெற்று பெயரடைய வேண்டுமோ
வளவும் விடா முயற்சியோடு செ
வெற்றி பெற்றார்கள். பெரும் பொ
செலவிட்டு படந் தயாரிப்பவர்களும்,
கள் தயாரிக்கும் படங்களில் காணப்ப
குற்றங் குறைகளைக் கலை வாணர்கள் எ
துக் காட்டினால் அவைகளை வரவேற்
திருத்திக் கொண்டனர்.

"பாமா பரிணயம்" என்னும் தமிழ்ப் பேசும் படத்தில் ஒரு காட்சி.
இது மதுரை ராயல் டாக்கி டிஸ்டிரிபியூட்டர்ஸ் கம்பெனியார் தயாரித்தது.

தயாராகிவிட்டது! கீழ்க்கண்ட ஊர்களில் வரும் நன்னாளை எதிர்பாருங்கள்!!

மதராஸ், மதுரை, திருச்சி, கோவை, கும்பகோணம், திருவாரூர், ஊர்கம், புதுக்கோட்டை வேலூர், திருப்பூர், காரைக்குடி, காரைக்கால், பொள்ளாச்சி, சேலம், திருநெல்வேலி, புதுச்சேரி.

ஓரியண்டல்ஸ்

நளாயினி

(மகத்தான புராண புண்ணிய சரிதை)

வித்வான்-சி. எஸ். செல்வரத்னம், மிஸ்டர் பி. எஸ். கோவிந்தராஜ், மிஸ்டர் ஏ. கே. வரதராஜன், விதூஷகன் - ஓ. கருப்பையா, நடிகரத்னம்-மிஸ் சி. என். நீலாவதி, மிஸ் பி. எஸ். கிருஷ்ணமணி, மிஸ் டி. பி. லக்ஷ்மிகாந்தம் முதலியோர் நடித்தது.

வசந்தராவ், ஏ. பெயின்டர் டைரக்ட் செய்தது.

கோலாப்பூர் தயாரிப்பு.

விவரங்களுக்கு :—

ஓரியண்டல் சௌன்ட் பிக்சர்ஸ், லிமிடெட், திருப்பூர்.

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

பாரத புத்திரி

அல்லது

அனாதைகள் சேவை.

(அதியுன்னத சமூக சீர்திருத்த தமிழ்பேசும் படம்)

கோலாப்பூர் பிரதிபா ஸ்டூடியோவில்

* * தயாராகின்றது. * *

தயாரிப்பவர்கள் :—Super Pictures Syndicate, Devakottah.

"சம்சார நௌகா" என்னும் கன்னட படத்தில் டிக்கிபூமியாக நடிக்கும் ஸ்ரீ. மாதவராவ்.

கிரௌன் டாக்கீஸில் மகத்தான ஆரம்பம்

ஜுலை 11௳ சனிக்கிழமை முதல் தினசரி 3 காக்ஷிகள்.

நீங்கள் இதுவரை கண்டிராத காக்ஷி! திடுக்கிடும் சண்டைகள்!
காதுக்கினிய சங்கீதம்! உயர்தர நடிப்பு! எல்லாம்பொருந்திய

ராஜா தேசிங்கு (உன்னத தமிழ்ப் பேசும் படம்)

இத்துடன் உலகப் பிரசித்திபெற்ற

ஸ்ரீ ருக்மணி தேவியின் (அடையாறு) பரத நாட்டியமும்

தியாஸபிகல் சங்கத் தலைவர்

டாக்டர் ஜி. எஸ். அருண்டேலின் பிரசங்கமும்

காண்பிக்கப்படும்.

ஒவ்வொரு குடும்பத்துடன்
கண்டானந்திக்க வேண்டிய காக்ஷி!

ஹாஸ்யங் கலந்த புண்ணிய புராணத் தமிழ்ப்பேசும் படம்

ஸ்ரீமதி பரிணயம் (ஸ்ரீராம ஜென்ம காரணம்)

உயர்தர நடிப்பு! உன்னத ஜோடிப்பு!! இனிய பாடல்கள்!!! இங்கிதப் பேச்சுக்கள்!!!!

சிறந்த அமெச்சூர் நடிகர்கள், சங்கீத வித்வான்கள்:—மாதிரிமங்கலம்-நடேசய்யர் (*of Hutchins Gramophone fame*), நல்லூர்-விஸ்வநாத ஐயர், மிஸ். பத்மா, கமலா, குஞ்சு பாகவதர், மிஸ். ஸ்ரீமதி, துளசி.

ஆர்கெஸ்ட்ரா:—திருவிடமருதூர்-மிஸ்டர் ஸ்ரீநிவாசராவ்-கோட்டுவாத்தியம்.
,, ஹரி ராவ் —பிடில்

கதை, வசனம், பாட்டு டைரெக்ஷன்:—
ஸ்ரீ. டி. பி. கல்யாணராம சாஸ்திரிகள், பி. ஏ., பி. எல்.

கீழ்க்கண்ட இடங்களில் வெளிவரும் தேதியை எதிர்பாருங்கள்:-

திருநெல்வேலி, திருச்சி, திவாரூர், திருப்பூர், கும்பகோணம்,
கோவை, புதுக்கோட்டை, ஊர்காம், காரைக்கால்.

For Booking Apply to:—SRI RAM TALKIES, KUMBAKONAM.

சினிமாவுலகில் தமிழ்ப் படங்களின் நிலை

—:(0):—

("இரஸிகன்.")

மேனாட்டில் சினிமாக் கலை எவ்வளவு உச்ச நிலையிலிருக்கிற தென்பதற்கு சமீபத்தில் வேனீஸ் என்னுமிடத்தில் சர்வதேச சினிமாப் படக்காட்சி விழா (International Film Exhibition) வொன்று நடக்கப் போகிறதாகப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கும் செய்தியே போதிய சான்றாகும். அச் சர்வதேச சினிமாப்படக் காட்சியின் நான்காவது விழா வருகிற ஆகஸ்டுமாதம் 10-ந் தேதியிலிருந்து 31-ந் தேதிவரை நடக்கப் போகிறதாகத் தெரிகிறது. அவ்விழாவில் உலகத்தின் பல பாகங்களிலு முள்ள சினிமா கலைவாணர்கள் கலந்து கொள்வார்கள். இவ்வருஷம் அவ்விழாவின் நிர்வாகிகள் நம் இந்தியாவுக்கும் அழைப்பு அனுப்பி யிருக்கின்றனர். எனவே, இந்திய சினிமாப்பட சங்கத்தார், அச்சங்க சார்பில் வெளியிடும் பத்திரிகையில் இவ்விழாவில் கலந்து கொள்ளும்படி இந்திய சினிமாப்பட முதலாளிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அத்துடனில்லாது, மேற்படி சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி யங்கத்தினர்கள், பம்பாயிலும், கல்கத்தாவிலு முள்ள ஸ்டுடியோக்களில் தயாரிக்கப்பட்ட பல படங்களையும் பார்வையிட்டு, வேனீஸ் விழாவுக்கு எப்படம் அனுப்பத் தகுந்தது எனப் பரிசீலனை செய்ததாகவுந் தெரிகிறது. கடைசியாக, இரண்டு வாரத்துக்கு முன், பூனா பிரபாத் ஸ்டுடியோ கம்பெனியார் தயாரித்திருக்கும் "அமர ஜோதி" என்னும் ஹிந்திப் படத்தைப் பார்வையிட்டனர். முடிவில், அக்கமிட்டியார், சகல அம்சங்களிலும் இப்படமே சிறந்ததாயிருக்கிறதெனக் கண்டு மகிழ்ச்சியடைந்து, அப்படத்தையே வேனீஸ் விழாவுக்கு அனுப்ப வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானித் திருக்கின்றனர். ஆகவே, அப்படம் அவ்விழாவில் பல தேசத்தார் முன்னிலையிலும் காட்டினால் யாவரும் பாராட்டிப் புகழ்வதற் கேற்ற வகையில், (அநாவசியமான பாகங்களை கத்தரித்தெடுக்கப் பட்டு) சீர்திருத்தியனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பூனா பிரபாத் ஸ்டுடியோ சொந்தக்காரர்கள் சிறந்த படங்களைத் தயாரிப்பதில் இந்தியாவிலேயே மிகவும் பிரசித்தி பெற்றவர்கள். ஆகவே, அவர்களால் தயாரிக்கப்பட்ட "அமர ஜோதி" என்னும் இப்படம் சர்வதேச மக்களாலும் போற்றிப் புகழப்படு மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. மேலும், இப்படத்தில், பெரும் புகழ் பெற்ற நடிகைகளான ஸ்ரீமதி,

ந்தா ஆப்தேயும், ஸ்ரீமதி நளினி தார்
ட்டும் நடித்திருப்பதாகத் தெரிவதால்,
பர்கள் தங்களது இனிய பாடலாலும்
மையான நடிப்பாலும் சர்வதேச மக்
ாயும் குதூகலிக்கச் செய்வார்களென்
இண்ணம். எனவே, பிரபாத் ஸ்டு
ா தயாரித்த "அமர ஜோதி" படம்
பத் தாய்க்குப் புகழ்மாலை கொண்டு
து சூட்டும் என்பதைக் கூறவும் வேண்
மா!

துருவித் துருவிப் பார்த்தாலும், நம் தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்ட படங்களில் முதல்தரமானவை யெனக் கூறப்படும் ஒரு சில படங்கள்கூட அவ்வித யோக்கியதை பெறக்கூடியதாக இல்லையே! தப்பித்தவறி ஏதேனும் அடுத்த மாகாணத்துக்குப் போனாலும், கேலி பண்ணக்கூடிய நிலையிலேயே நமது தமிழ்ப் படங்கள் இருக்கின்றன. இதுவரை நமது தமிழ்ப் படங்களில் எந்த படமேனும் ஆந்திர

ஸ்ரீமதி. ருக்மணிதேவியின் அற்புத நடனக் காட்சி.

இவ்விழா விஷயத்தில் தமிழ்ப்பட
லாளிகள் நிலை யென்ன? அவர்
க்கு சர்வதேச சினிமாப் படக்காட்சி
நிர்வாகிகளிட மிருந்து ஒரு அழை
வந்திருந்ததென்று வைத்துக் கொள்
ம். அவர்கள் என்ன செய்வார்கள்?
ர்கள் இதுவரை தயாரித்த படங்களில்
வது ஒரு படம் வேனீஸ் விழாவுக்கு
ப்பக் கூடியதாக இருக்கிறதா? நாம்

தேசத்தில் ஒரு சில இடங்களைத் தவிர மற்ற மாகாணங்களுக்குப் போயிருக்கிறதா? கல்கத்தாவிலும், பம்பாயிலும் தயாரிக்கப்பட்டு வரும் ஹிந்திப் படங்களும், உருதுப் படங்களும் நம் தமிழ் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுக் காட்டப்படுகின்றனவே! நமது தமிழ்ப் படங்கள் ஏன் அங்கெல்லாம் கொண்டுபோகப் படுவதில்லை? இதைப்பற்றி நான் பல சமயங்க

அப்படியே பொரியரிசி சேவலின் அருகே போயிற்று. தன் கிட்ட வந்தவுடன், சேவல் "இதுதான் நம் கல்யா



ணம்!" என்று சொல்லி தன் மூக்கினுல் பொரியரிசியைக் கொத்தி விழுங்கிவிட்டது. அந்தக் கர்வம் பிடித்த மூடப் பொரியரிசி சாகுமுன் எப்படிப் புலம்பி அழுதது தெரியுமா?

ஆனைமடங்குச் செவி, என்றேனே!
[என்றேனே!!
குதிரை குந்தம் தள்ளி, என்றேனே!
[என்றேனே!!
ஒட்டகம் ஒரு கோணலோ, என்றேனே!
[என்றேனே!!
கழுதைகால் எறிவாய், என்றேனே!
[என்றேனே!!
காக்கை கருங்காக்கை, என்றேனே!
[என்றேனே!!
குருவி சிட்டுக்குருவி, என்றேனே!
[என்றேனே!!
கோழிக்கு வாழ்க்கைப்பட்டு, உயிரைக்!
[கொடுத்தேனே!!—

என்று அழுது உயிர் விட்டது.

"முதலியார்வாள், நம்ம பையனுக்கு ஏதாவது ஒரு வேலே உங்காபீசிலே போட்டுத்தாப்படாதோ?"

"நாயுடுவாள், என்ன அவனுக்குச் செய்யத் தெரியும்?"

"அட எழவே, செய்யத் தெரிஞ்சா என் ஆபீசிலேயே வைத்துக்கொள்ளமாட்டேனு?"



கொள்ளிவாய்ப் பிசாசு

(ஸ்ரீ. நாராயணன்.)

இரவு 11-15 மணி நேரமிருக்கலாம். வானத்திற் கருமேகங்கள் அடர்ந்து ஒன்றாய்த் திரண்டிருந்தன. எங்கும் கருங்கும்பலாய் ஒருவர் முகத்தை ஒருவர் காண முடியாவண்ணம் மூடிக்கொண்டது இருள். செவிகள் செவிடு படும்படி இடிகள் இடித்தன. அப்போதைக்கப்போது பளீர் பளீரென மின்னல்கள் தோன்றிக் கண்களைப் பறித்தன. அச் சமயத்தில் சோழவந்தான் வடக்கு எல்லையில் அமைக்கப்பட்டிருந்த ஓட்டுக் கட்டடத்தின் முன்பு எண்ணிக்கையற்ற ஜனங்கள் திரள் திரளாக வந்து கூடினர். எதற்கு இப்படி அக் கட்டடத்தின் முன்பு-அதுவும் இரவில்—சத்தியாக்கிரகம் செய்கிறார்கள் என்பது விளங்கவில்லை. ஜனத்திரளில் பெண்டிரும் சிலரிருந்தனர். அந்தக் கட்டிடத்தின் காம்பவுண்டில் மினு மினுப் பூச்சிபோல் இரண்டு மூன்று விளக்குகளே எரிந்து கொண்டிருந்தன. கட்டிடத்தினுள் ஒரு விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது. அதன் முன்பு ஒருவர் உட்கார்ந்து கொண்டு ஒரு சிறு பீரோவிலிருந்து எதையோ அவசர அவசரமாய் எடுத்துத் தனக்கு எதிரிலிருந்து சிறு ஜன்னல் வழியாய் வெளியில் கடத்திக் கொண்டிருந்தார். வெளியில் ஜனங்களின் ஆரவாரம் அண்டத்தை அளாவி நின்றது.

மணி 11-30 அடித்தது. ஜனத்திரளின் இடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது, "அதோ வந்துவிட்டது கொள்ளிவாய் பிசாசு," என்று சில கூவினர். மறு நிமிஷம் அக் கட்டடத்தின் காம்பவுண்டு பூராவும் பட்டப்பகல்போல் கொள்ளிவாய் பிசாசின் கண்ணின் ஒளியால் காணப்பட்டது. அங்கு நின்ற ஜனங்கள் நான் முந்தி நீ முந்தி என்று அடித்துக்கொண்டு அது வரும் திசையை நோக்கிச் சென்றனர். கட்டிடத்தினுள் இருந்தவரும் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு வெளியில் ஓடி வந்தார்.

கொள்ளிவாய் பிசாசு பக்கத்தில் வந்ததும் அப்பொழுது நான் முந்தி நீ முந்தி என்று அடித்துக்கொண்டு ஓடினவர் இப்பொழுது ஆறடி விலகி நின்றனர்.



கர்வம்கொண்ட பொரியரிசி!

—:(0):—

(எஸ். செல்லப்பா.)

பொரியரிசி என்றால் தெரியுமா? நெல்லைச் சட்டியில் போட்டு வறுத்துப் பொரிக்கப் பட்டதற்குப் பொரியரிசி என்று பெயர். சாதாரண நெல்லை விட அது ஊதிப் பெருத்திருக்கும். அப்படி நன்றாகப் பொரிந்து ஊதி வெடித்த ஒரு பொரியரிசி: தன் புது அழகைக் கண்டு கர்வம் கொண்டு, தனக்கு எற்ற மாப்பிள்ளையைத் தேடத் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளத் தொடங்கியது.

எப்படித் தெரியுமா? வாரிச் சிவி மயிரை வகிர்ந்து, வாணிச்சி எண்ணெயும் தொட்டு மினுக்கி, சுளகுபோலப் பொட்டும் இட்டு, கடலுக்குப் பெரிய புடவை உடுத்தி, மலைக்கும் பெரிய கொட்டைப் பாக்கு வாயில் ஒதுக்கி" நல்ல ஆமுடையான் தேடி—சின்ன ஆமுடையான் தேடி வாழ்க்கைப்படப் புறப்பட்டது.

பொரியரிசி தெருவழியே போகும் பொழுது, அந்த ஊர் ராஜாவினுடைய பட்டத்து யானை, ஆற்றிலே குளித்து விட்டு அலங்காரமாக எதிரே வந்தது.

"பொரியரிசி! பொரியரிசி!! எங்கே போகிறாய்?" என்று யானை கேட்டது. "நானா? வாழ்க்கைப் படப் போகிறேன்" என்று பொரியரிசி பதில் சொல்லிற்று. "என்னைக் கலியாணம் செய்து கொள்" என்று யானை வேண்டிக் கொண்டது.

"உன்னையா? நீ யானை, மடங்குச் செவியன்!" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு சொல்லிவிட்டுப் பொரியரிசி போய் விட்டது.



கொஞ்ச தூரம் போனபின், ராஜாவின் பட்டத்து குதிரை எதிரே வந்தது. "பொரியரிசி! எங்கே வேகமாய்ப் போகிறாய்?" என்று குதிரை கேட்டது.

"நானா! கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன்" என்று பொரியரிசி சொல்லிற்று. "எனக்கு வாழ்க்கைப்படு" என்று குதிரை கெஞ்சிக் கேட்டது. "உனக்கா? நல்லது" குதிரை குந்தம் தள்ளி!" என்று எசிக்கொண்டே பொரியரிசி போய் விட்டது.

"பின்பு அரசனுடைய ஒட்டகம் வீதி வழியே வந்தது. பொரியரிசியைப்

பார்த்து, "எங்கே அவசரமாய் போகிறாய்?" என்று கேட்டது. "நானா! வரன் தேடிப் போகிறேன்" என்று பொரியரிசி பதில் சொல்லிக் கொண்டு மேல் நடந்தது. "பொரியரிசி! பொரியரிசி! எனக்குப் பொண்டாட்டியாக இரு" என ஒட்டகம் பிரார்த்தித்தது.

"உனக்கா? பேஷ்! பேஷ்!! ஒட்டகம் ஒரு கோணலோ!" என்று கூறி ஒரு நெளிப்பு நெளித்துக் கொண்டு, போய் விட்டது. சிறிது தூரத்திற்கப் பால் வண்ணான் கழுதை எதிரே வந்தது. "பொரியரிசி! எங்கே சவாரி?" என்று கழுதை கேட்டது. "புருஷனைத் தேடி சவாரி" என்று பொரியரிசி பதில் சொல்லிற்று. "நான் உனக்குப் புருஷனாக இருக்கிறேன்" என்று கழுதை சொல்லிற்று. "நீயா! கழுதை கால் எறிவாய்" என்று ஏசிக் கொண்டே, பொரியரிசி வேகமாய் நடந்தது.

அடுத்த வீட்டுப் பந்தல் மேலிருந்து இதைக் கேட்ட ஒரு காக்கை "நான் அப்படி ஒன்றுமில்லை; எனக்கு வாழ்க்கைப் படு" என்று கெஞ்சிற்று.



"உனக்கா? காக்கை கருங்காக்கை!" என்று சொல்லிப் பொரியரிசி சிரித்தது. எதிர் வீட்டு வாசலில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு குருவி, "ஆனால் நான் உனக்கு ஆமுடையானாக இருக்கிறேன்" என்று பக்ஷமுடன் கூறிற்று.

"நீயா? குருவி சிட்டுக்குருவி!" என்று சொல்லி, ஒரு வலிப்பு வலித்துக் கொண்டே பொரியரிசி மேல் சென்றது. இதற்குள் ராஜ வீதியை யெல்லாம் கடந்து பொரியரிசி, ஊர்ப்புறச் சேரியண்டை வந்துவிட்டது. அங்கே ஒரு பெரிய குப்பைக் கிடங்கின்மேல் நின்று "கொக்கா கோ கோ" என்று ஒரு சேவல் கூவிக் கொண்டிருந்தது. பொரியரிசியைக் கண்டதும், அது மனத்திற்குள் சந்தோஷம் கொண்டது. கோழி பொரியரிசியைப் பார்த்து, "பொரியரிசியாரே! பொரியரிசியாரே!! ஒப்பில் அழகும், ஒய்யாரக் கைவீச்சுமாக, இவ்வளவு ராங்கியுடன், எங்கே போகிறீர்?" என்று மரியாதையும் வாஞ்சையும் தோன்றக் கேட்டது.

"நானா? நல்ல ஆமுடையான் தேடி சின்ன ஆமுடையான் தேடி, வாழ்க்கைப் படப்போகிறேன்" என்று பொரியரிசி பதில் சொல்லிற்று.

"அப்படியா! ஆனால் என்னைக் கலியாணம் செய்து கொள்ளக்கூடாதா? செங்கீரைதண்டு பூப்போல என் சுட்டின் அழகையும், செம்பருத்தி பூப்போல என் தாடியையும் பாரும்! மயில் தோகைகளைப்போல் என் சிறகுகளைப் பாரும்! என் பாட்டைக் கேளும்! நான் கூவினால் தான் பொழுது விடியும்; சூரியனும் உதயமாகும். உம்மைப்போல் அழகான பெண்டாட்டி வேண்டுமென்றே, நான் இத்தனை நாளாகக் காத்திருந்தேன். என் பாக்கியம் இன்றுதான் உம்மைக் கண்டேன்" என்று சேவல் நயமாய்ப் புகழ்ந்து பேசிற்று. இதைக் கேட்டவுடன், பொரியரிசி, தலை கிறுக்கி, மதிமயங்கி, "ஆகட்டும்" என்று சம்மதித்தது.

"இங்கேவாரும், இந்த வேப்பமரத்து நிழல் சுகமாயிருக்கிறது; காற்று 'ஜில்' என்று வீசுகிறது; வேப்பம்பூ 'கம கம' என்று மணக்கிறது. இந்த மரத்தி னடியில் நம்முடைய கலியாணத்தை நடத்தலாம்" எனக் கோழி அழைத்தது.

குறிப்பிட்டு வழங்குமாறு இம் மகாநாடு தற்காலத் தமிழர்களெல்லோரையும் பெரிதும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறது.

(2) பசந்தயிரைக் காட்டிலும் மஹிஷத் தயிரில் உடல் வளர்ச்சிக்கேற்ற சத்துப்பொருள்களும் இனிப்பும் அதிகரித்திருப்பதால், மஹிஷத் தயிரின் சிறப்பை உணர்ந்து அதையே எல்லோரும் உபயோகிக்குமாறும்; அத் தயிருக்குக் காரணமான பாலை உதவும் மஹிஷ குலத்தினருக்கு, முழு வயிற்றுக்குப் போதுமான சத்து நிறைந்த நல்ல உணவுப் பொருள்களைப் போதுமான வரையில் தினந்தோறும் தாராளமான மனதுடன் வழங்குமாறும் இம் மகாநாடு தற்காலத் தமிழர்களைப் பெரிதும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறது.

(3) மஹிஷ குலத்தினரின் சிறந்த பொறுமை—சகிப்புத் தன்மை—வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் மேற்கொண்ட வேலையிலேயே முழுக் கவனத்தையும் செலுத்திச் சிறிதும் சலிப்பின்றி உழைக்கும் மனஉறுதி முதலிய சீரிய குணங்களை எல்லோரும் நன்கு சிந்தித்து உணர்ந்துகொண்டு, அவற்றைப் பின்பற்றி நடக்குமாறு இம் மகாநாடு எல்லோரையும் வேண்டிக்கொள்கிறது.

(4) நீதி—முறைக்கு மாறாகவும் அக்கிரமமாகவும் மஹிஷ குலத்தினரைத் துன்புறுத்துவோரை எதிர்த்து நின்று தகுந்த படிப்பினை கற்பிக்க வேண்டுமென்று இம்மகா நாட்டில் தீர்மானிக்கப்பட்டு விட்டதால், இனிமேல் எவரும் மஹிஷ குலத்தினரை மூர்க்க—வெறி கொண்டு தாக்கக் கூடாதென்று இம்மகாநாடு எல்லோருக்கும் எச்சரிக்கிறது.

* * *

ஏதோ ஒரு சப்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டுவிட்ட நான், படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்தேன். "நன்னாத் தூங்கினீங்க போங்க! பொழுது விடிஞ்சி எவ்வளவு நாழியாயிடுத்து! நம்ம எருமை மாடு ராத்திரி எங்கேயோ ஓடிப் போயிடுத்து; அதைத் தேடிப் பிடிச்சுக்கொண்டாங்க போங்க!" —என்றாள் என் எதிரில் வந்து நின்ற என் மனைவி. என்ன செய்வது? எங்கள் வீட்டு எருமை மாடு கூட, செங்கற்பட்டில் கூடிய 'மஹிஷங்களின் மகாநாட்'டுக்குப் போய்விட்டதோ என்னவோ?

ராயல் டாக்கீஸ் டிஸ்டிரிபியூட்டர்ஸாரின்
மகத்தான வெளியீடு.

T. P. ராஜலக்ஷ்மி
செருகளத்தூர்-சாமா

வித்வான்-சீனிவாசன்
M. G. தண்டபாணி

நடித்த

பாமா பரிணயம்

(மஹாபாரதத்திலிருந்து எடுக்கப்பட்ட ஓர் உயரிய கதை)

விதூஷகன் R. நடேச ஐயர்
M. R. துரைராஜ்
K. S. ஹரிஹரன்
T. R. நடராஜன்

Miss. S. D. லக்ஷ்மி
S. H. ராஜாமணி
K. ரங்கநாயகி
M. A. ராஜாமணி

முதலியவர்களும் நடிக்கின்றனர்.

எமது அடுத்த மகத்தான படத்தை எதிர்பாருங்கள்!

K. அஸ்வத்தம்மா
செருகளத்தூர்-சாமா

வித்வான்-சீனிவாசன்
முதலியோர் நடித்த

பில்வமங்கல் அல்லது சிந்தாமணி

தயாராயிருக்கும் படங்கள் :—

கோவலன் -	- T. P. ராஜலக்ஷ்மி, V. A. செல்லப்பா நடித்தது.
லலிதாங்கி -	- ,, ,, ,,
தூக்கு தூக்கி-	- K. T. ருக்மணி, C. V. V. பந்துலு நடித்தது.
கிருஷ்ண-அர்ஜுன	பாப்பா, T. A. நாகசாமி பாகவதர்.

விலாசம் :—

ராயல் டாக்கீஸ் டிஸ்டிரிபியூட்டர்ஸ், மதுரை.

"கனைத்து இளங் கற்றெருமை கன்றுக்கு இரங்கி—நினைத்து முலைவழியே நின்று பால் சோர—நனைத்து இல்லம் சேறுக்கும் நற்செல்வன்" — என்று திருப்பாவை பாடிய செல்வியாகிய ஆண்டாளும், "மேட்டிள மேதிகள் தளை விடும் ஆயர்கள் வேய்ங் குழலோசையும் விடை மணிக் குரலும்—ஈட்டிய இசை திசை பரந்தன" —என்று திருப்பள்ளி யெழுச்சி பாடிய தொண்டரடிப் பொடியாழ்வாரும் நம்மைக் குறித்து எவ்வளவு அழகாகப் பாடி யிருக்கிறார்க ளென்பதை, நன்ருக ஆழ்ந்து கூர்ந்து சிந்தித்துப் பாருங்கள். அக்காலத்தில் அவ்வாறு சிறப்பாக மதிக்கப்பட்டிருந்த நாம், இக்காலத்தில் இவ்வளவு கேவல நிலையை அடைய நேர்ந்ததற்குக் காரணம் என்ன?

நமது தற்காலக் கேவல நிலைமைக்குப் பல காரணங்களை இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். எதிலும் மந்தமாக நடந்து கொள்ளும் இயல்பும் வரம்பு கடந்த பொறுமையுமே நாம் தற்காலம் தாழ்வடைய நேர்ந்ததற்கான காரணங்களுள் முக்கியமானவையாகும். ஆதலின், நமது குலம் முன்னேற வேண்டுமானல்— பழந் தமிழ்நாட்டில் நாம் பெற்றிருந்த பெருமதிப்பையும் சிறப்பையும் மீண்டும் பெறவேண்டுமானல்— நமக்கும் மான உணர்ச்சி இல்லாமற் போய்விடவில்லையென்பதை நாம் மற்றவர்களுக்கு உணர்த்த வேண்டுமானல் - நாமெல்லோரும் மந்த குணத்தையும் அளவுக் கதிகமான பொறுமையையும் இன்று முதல் முற்றிலும் ஒழித்துவிட வேண்டியது அத்தியாவசிய மாகும். இனி, காட்டுப் புறத்தில் வாழ்பவர்களைக் காட்டிலும் பலத்திலும் தோற்றத்திலும் மிகப் பெரிதும் சிறந்து விளங்குபவர்களான காட்டுக் குலத்தினரில் ஒருவராக இங்கு விஜயம் செய்துள்ள திருவாளர்—காலதாசர் அவர்களை இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து நடத்துமாறு உங்களெல் லோருடைய சார்பாகவும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

—இவ்வாறு அவ்வெருமை பேசி அமர்ந்தவுடன், பெரியதொரு காட்டெருமை எழுந்து நின்று பின்வருமாறு பேசத் தொடங்கியது:—

"சகோதரிகளே! சகோதரர்களே!! நாட்டில் வசிக்கும் நம்மவரும் காட்டில் வசிக்கும் நம்மவரும் இன்று இங்கு ஒருங்கு கூடியிருப்பதைப் பார்க்குந்தோறும் என் மனம் மிகுந்த ஆனந்த மடைகிறது. வரவேற்புக் கூட்டத் தலைவரவர்கள் தெரிவித்தபடி, தற்காலத் தமிழ்நாட்டிலே நாம் மிகமிகத் தாழ்த்தப் பட்டவர்களாக வாழ்ந்து வருகிறோம். 'எருமை' என்ற சொல்லே, தற்காலத் தமிழ்நாட்டில் ஈனச் சொல்லாகவும் பரிகாசச் சொல்லாகவும் வசைச் சொல்லாகவும் வழங்கப்பட்டு வருகிறது. நாம் நமது அசிரத்தையினல் இழந்துபோன பழம் பெருமையை மீண்டும் அடையத் தீவிரமாக முயற்சிக்க வேண்டும்.

பசுக்கள் கொடுக்கும் பால், நாம் கொடுக்கும் பாலைப்போல் குழம்பாக இருக்கிறதா? பசுமாட்டுத் தயிர், நமது பாலிலிருந்து தயாரிக்கப்படும் தயிரைப் போல் கெட்டியாகவும் இனிப்பாகவும் தூய வெண்மையாகவும் இருக்கிறதா? நமது தயிரிலுள்ள 'வைடமின்' முதலிய போஷணைக்கு உரிய சிறந்த சத்துகள்; பசுந்தயிரில் ஏது? முற்காலத்திலே, போஜராஜனது சபையை அடைந்த இரண்டு பிராமணச் சிறுவர்கள், மன்னனை நோக்கி என்ன வேண்டிக் கொண்டார்கள் தெரியுமோ?

"போஜநம் தேஹி ராஜேந்த்ர!
க்ருதஸூப ஸமந்விதம்
மாஹிஷஞ்ச சரச்சந்த்ர
சந்த்ரிகா தவளம் ததிம்!!"

—("மன்னர் பிரானே! பருப்போடும் நெய்யோடும் கூடியதும் சரற் காலத்திய சந்திரனைப்போல் மிகுந்த வெண்மையானதும் இனிமையானதுமான எருமைத் தயிரோடு கூடிய திவ்ய போஜநத்தை அளித்தருள்!")—என்றன்றே அச் சிறுவர்கள்

போஜராஜனை வேண்டிக்கொண்டனர்! தற்காலத்தில் கூட, அநுபவசாலிகளான பிராமணர்களில் பற்பலர், பசுந்தயிரைக் காட்டிலும் நமது தயிரையன்றோ போரவலோடு விரும்பிச் சாப்பிடுகிறார்கள்! உண்மையான பலத்தைப் பெற விரும்புபவர்களுக்கு, நமது தயிர் கடவுளால் கொடுக்கப்பட்டதொரு அரிய வரப் பிரஸாதத்தைப் போன்றதல்லவா? இந்நாட்டிலுள்ள எல்லோரும் நமது தயிரை சாப்பிடுவதென்ற உறுதியை மேற்கொண்டு விடுவார்களானால், இந்நாட்டுக்குக் கூடிய விரைவில் சுயராஜ்யங்கூட கிடைத்து விடுமென்பதில் என்ன சந்தேகம்?

சேற்றில் விழுந்து புரள்வது-வெயிலையும் மழையையும் சிறிதும் லட்சியம் செய்யாமல் நடந்து கொள்வது—மந்தமான நடை முதலிய நமது குணங்களைக்கண்டு மனிதர்கள் நம்மைப் பரிகசிக்கிறார்கள், உள்ளம் மட்டும் கள்ளமில்லாமல் தூய்மையுடையதாக இருந்துவிட்டால், கேவலம் மாமிச உடம்பு எப்படி இருந்தால் என்ன? மட்சேற்றில் விழுந்து புரளும் நம்மைப் பரிகசிக்கும் மனிதர்கள், மட்சேற்றைக் காட்டிலும் பலமடங்கு இழிவான ஆசைச் சேற்றிலும் விழுந்து புரண்டு கொண்டிருக்க வில்லையா? வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் சகித்துக் கொண்டிருக்கக்கூடிய மிகுந்த உறுதியான தோல் நமக்கு ஆண்டவனால் அளிக்கப்பட்டிருப்பதைக் கண்டு, மிக எளிதில் பல வகைப் பிணிகளும் தோன்றக்கூடிய மெல்லிய தோலைப் பெற்றுள்ள அதிர்ஷ்டஹீனர்களாகிய மனிதர்கள் ஏன் பொறாமைப்பட வேண்டும்? இயற்கையிலேயே நம்மவரிடம் அமைந்துள்ள சாந்தமான நடையைப் பெற, மனிதர்கள் எவ்வளவு தான் முயற்சித்தாலும் முடியுமோ?

ஏரில் பூட்டியும் பாரவண்டியில் பூட்டியும் நம்மை ஓட்டுபவர்கள், நம்மை உயிரற்ற அசேதநப் பொருள்களைப்போல் எண்ணிக்கொண்டு மனம் போனபடி கை சலிக்கும் வரையில் மிகமிகக் கொடுமையாக அடித்து வருவதை நினைக்கும்போது, என் மனம் மிக மிகக் குமுறுகிறது. கால்வயிற்றுத் தீனியைப் பெற்று உடலிலிருந்து பிரிந்து விடாதவாறு உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, நாம் எவ்வளவு கொடுமையான துன்பங்களை அநுபவிக்க நேரிடுகிறது! நாம் மட்டும் கோபத்தை வா வழைத்துக்கொண்டு நம்மைக் கொடுமையாக நடத்துபவர்களைப் பழிக்குப் பழி வாங்கும் நோக்கத்துடன் எதிர்த்து நிற்கத் துணிந்து விடுவோமானால், நம்மைத் துன்புறுத்துவோர் கதி என்னாகும்? பாழும் நன்றி யறிவுணர்ச்சி மிகுதியினாலும் அளவு கடந்த பொறுமையினாலுமல்லவா, நாம் அநியாயமாக சொல்ல முடியாத கொடுந் துன்பங்களுக்கு உட்படவேண்டி யிருக்கிறது! இது வரையில் நாம் மேற்கொண்டிருந்த பொறுமை, போதும்! போதும்!! இனிமேல், மூர்க்க வெறி மிகுந்து நம்மை அக்கிரமமாகத் துன்புறுத்துபவர்களிடம், நாமும் நமது மிருக சக்தியை—வலிமை மிகுந்த கொம்புகளை-உபயோகப்படுத்தியே தீரவேண்டும்.

சகோதரிகளே! சகோதரர்களே!! நம்மைத் துன்புறுத்துபவர்களுக்கும் அவமதித்துப் பரிகசிப்பவர்களுக்கும், இனியும் தகுந்த புத்தி கற்பிக்காமல் நாம் தன் மதிப்பற்ற வெறுங் கோழைகளாக வாழக் கூடாது. அத்தகையோரை எதிர்த்து நிற்க நம்மில் ஒவ்வொருவரும் தீவிரமான மன உறுதியை மேற் கொள்ள வேண்டும். அத்தகைய மன உறுதியையும் வீரத் துணிவையும் நம்மெல்லோருக்கும் கருணை கூர்ந்து வழங்கியருளுமாறு, நமது குலத்தினரின் தனிப் பெருந் தலைவராகிய யமதர்ம—ராசனை நாமெல்லோரும் உண்மையன்புடன் பிரார்த்திக்கக் கடவோம்".

பின்னர், அம் மகாநாட்டில் பின் வரும் தீர்மானங்கள், ஏகோபித்து நிறைவேற்றப்பட்டன:—

(1) 'எருமைகள்'—என்ற சொல், தற்காலத் தமிழ் நாட்டில் மிக மிகக் கேவலமாக வழங்கப்பட்டு வருவதால், இனி மேல் நமது குலத்தினரை 'மஹிஷங்கள்' அல்லது 'மேதிகள்' என்ற சொல்லால்

அட சகுனமே!

(அமிர்தம்.)

"ஏண்டி சமையல் ஆச்சோ இல்லையோ? மணி 10-40 ஆகப்போகிறதே. தொரை 11 மணிக்கி வரச்சொல்லி இருக்காரே" என்று சொல்லிக்கொண்டே அவசர அவசரமாக ஷர்ட்டைப் போட்டுக்கொண்டு மேலே கோட்டையும் போட்டுக்வொண்டு சமையல் அறைக்குள் சென்றேன்.

"நன்னாருக்கு; என்னமோ புகைலையும் நெருப்புலையும் கஷ்டப்பட்டுண்டு விடியற்காலம் 6 மணி முதல் இருக்கிறேன். கொஞ்சம் கூட ஈவு இரக்கம் இல்லாமை வந்து தாட்பூடங்கறேளே. அப்படியெல்லாம் அவசரப்பட்டா இங்கே முடியாது. என்னை என்ன உங்களுகக்கு அடிமைன்னு நெனைச்சேளோ. என்னமோ பணமில்லாமெ கஷ்டப் படறேளே. இப்போ எப்படி சமையற்காரனைப் போடறது ஏதாவது நம்ம கையாலானதைச் செய்வோம்னுட்டு செஞ்சாக்க என்னமோ தடபுடல் பண்றேளே. அதெல்லாம் இங்கே நடக்காது. நானும் மனுஷி என்பது ஞாபகமிருககட்டும்" என்று ஹோம் கவர்ன்மெண்டிலிருந்து உத்தரவு பிறந்தது.

என்ன செய்வது! மணியோ நெருங்குறது. ஆகையால் "அடேயப்பா, என்ன இன்னிக்கி உனக்கு இவ்வளவு கோபம் வந்துடுத்து. நான் என்னத்துக்குச் சொன்னேன்னு தெரியல்லேயே. எனக்கு டயமாயிடுத்து. துரை சொன்ன டயப்படிக்கிப் போனாத்தானே தேவலை. இன்னிக்கே இப்படி போனாக்க அப்புறம் அவர் 'பேர்வழி பெரிய சோம்பேறி; ஆகையால் இவனுக்கு வேலை கொடுக்கப்படாது' என்று நினைத்து விடுவார். அதற்காகச் சொன்னேன்" என்று நயந்தேன்.

"என்ன இருந்தாலும் நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது' என்று மிஞ்சினான்.

"என்ன சொன்னேன்" என்றேன்.

பதில் இல்லை.

"சரி; இலை எடுத்து ஆளுக்கொண்ணு போடுங்கோ. பஞ்சபாத்திரத்தில் தீர்தம் எடுத்து வையுங்கோ. நான் சாதம் போடரேன்" என்று பாகம் பண்ணினாள்.

அவளென்ன செய்வாள் பாவம். நாமும் அவரும் சமம்தானே. ஆகையால் நாம் மாத்திரம் ஏன் வேலை செய்யவேண்டும். அவரும் கொஞ்சம் செய்யட்டுமே என்று நினைத்தாள் போலும்!

நேரம் கழித்துச் சென்று வேலை கிடைக்காவிட்டால்?............

'தெய்வமே' என்று சொன்ன காரியத்தை மறுபதில் இல்லாமல் செய்தேன்.

அவளும் பரிமாறினாள்.

அட ராமாயணா! அன்னிக்கி எந்தப் புண்யவான் முகத்தை தெரிசனம் பண்ணினேனோ தெரியவில்லை. கரிகாய் குழம்பு எல்லாம் என்னமோ ஒரு வேகம் அடித்தது. ஆகையால் மடப்பயல்! இனிமேல் இவன் கிட்ட கரிகாயே வாங்கக் கூடாது. வாட்டும் சொல்றேன்" என்று என்னுடைய கோபத்தை அவன்மேல் திருப்பினேன்.

"எனக்குத் தெரியுமே. அதனால் தான் நான் எல்லாவற்றையும் சோப்புப் போட்டு கழுவினேன்." என்றாள் நவநாகரீக நாரிமணி.

"சரிதான். இப்போ சாப்பிடுவதற்கு நேரமில்லே. ரொம்ப நாழியாச்சு" என்று சொல்லிக்கொண்டே எழுந்து கையலம்பி விட்டு "நான் போயிட்டு வர்ரேன். ஆத்தைப் பத்திரமாப் பாத்துக்கோ" என்று சொல்லிக்கொண்டே வெளியில் சென்றேன்.

ஒரு ஹோட்டலுக்குச் சென்று திருப்தியாக சாப்பிட்டுவிட்டு ஆபீஸுக்குப் புறப்பட்டேன். எதிரே ஒரு விதவை வந்தாள். இன்னும் இரண்டு நிமிடங்களே இருக்கின்றன. அதற்குள் போய்ச் சேர வேண்டும். ஆகையால் எது வந்தாலும் வரட்டும் என்று இவ்வளவு வைபவத்துடன் ஓட்டமும் நடையுமாகப் புறப்பட்டேன்.

ஆபீஸிற்குள் நுழைந்து துரை உட்கார்ந்து இருக்கும் இடத்திற்குச் சென்றேன். அவர் தன் வாயிலுள்ள சுருட்டைத் தன் வலதுகையால் பிடித்துக் கொண்டு சேரில் உல்லாசமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்.

சென்றதும் மேஜைமேலுள்ள ஓர் காகிதத்தைத் தன் இடதுகையால் எடுத்துக் கொடுத்தார். நான் அதை வாங்கிப் படித்தேன்.

ஆஹா! என் சொல்வேன்! அவ்விடம் எனக்குப் பூலோகமோ கைலாசமோ என்றிருந்தது. எனக்கு வந்த சந்தோஷத்தில் அப்படியே துரையைத் தோளில் வைத்துக்கொண்டு கூத்தாடலாம் என்று கூட நினைத்துவிட்டேன். ஆனால் துரதிருஷ்டவசமாக அவர் 'வெள்ளை யானைக்'குக் குறுக்கே பிறந்திருந்தார். ஆகையால் அந்த யோசனையை விட்டுவிட்டேன்.

இதற்குள் துரை "You must take your charge from to-morrow" (நீ நாளையிலிருந்து வேலையை ஒப்புக் கொள்ள வேண்டும்) என்று உத்தரவு இட்டார். நானும் "Thank you very much, Sir" என்று அளவிலா வந்தனங்களளித்துவிட்டு வெளியில் வந்தேன். நான் ஏதாவது Some Thing கொடுக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்ததின் பேரில் உள்ளே விட்ட 'பியூ'னையுங் காணோம். இருந்தாலும் அவனிடம் கடன் சொல்

சிவிட்டு வாவேண்டியது தான். நல்ல அதிர்ஷ்டம் போங்கள்! எல்லாம் அந்தக் கைம்பெண் எதிரே வந்ததினு லல்லவா!

ஆகையால் இந்தப் பழைய சாத்திரங்களை நம்பக்கூடாது. அவ்வளவும் பொய். எல்லாவற்றையும் பொசுக்கிவிடவேண்டும் என்று நினைத்துக் கொண்டே வீடுவந்து சேர்ந்தேன்.

சேர்ந்ததும் எங்கள் வீட்டிலுள்ள எல்லா ஏட்டுச் சுவடிகளையும் ஒரே கட்டாகக் கட்டி எரிப்பதற்கு வெளியில் கொண்டுவந்தேன்.

அப்பொழுது "காஞ்சிபுரத்தில் பிறந்து மன்னர் குடியில் வாக்கப்பட்டு..........உம். நான் பெண்ணுய்ப் பிறந்து மண்ணுய்ப் போகலியா" என்று சொல்லிக் கொண்டே நான் ஆபீஸுக்குப் புறப்படும் பொழுது என் எதிரே வந்த கைம்பெண் வீட்டு வாசற்படி ஏறி, "சாமி இன்னிக்கித்தான் கடைசி வேசங்க;

நாளைக்குப் புறப்படப்போறோம்' என்றாள்.

"முன்னை என்னை அடிச்சவன் கூட"

"ஆஸ்பத்திரியிலே.............."

"என்ன சொன்னே"

"உம்; அங்கே வேலையிலிருக்கிறான்னு சொன்னேன்!"

ஹரிஜன் ஸ்கூல் இன்ஸ்பெக்ஷன்

(முத்தரசநல்லூர்-விஸ்வநாதன்.)

இன்ஸ்பெக்டர் சுந்திரமய்யர்:— (உபாத்தியாயரை பார்த்து) உங்கள் ஸ்கூல் ஸ்ட்ராங்த் எவ்வளவு?

உபாத்தியாயர் மாயாண்டி கவுண்டர்:—இருபத்தொன்னுங்க.

இன்ஸ்:— ஏன் இன்னைக்கு எட்டு பையன்கள்தான் ப்ரஸண்ட். 13-பேர் ஆப்ஸண்ட்க்கு காரணம் என்ன?

உபா:—கீழச்சேரியில் இன்னைக்கு ஸாமிகும்படராங்க; மேலப் பாளயத்தில் அருப்பு மொம்மரம்—அதனால்தான், இல்லாட்டி........

இன்ஸ்:—ஸரி போதும் (பையனைப் பார்த்து) ஏ இருளப்பா, இந்தப் படத்தில் தெரிகிறது என்ன பழம் சொல்.

இருளப்பன்:- 'வாளப் பளங்க'

இன்ஸ்:—(வேறு பையனை பார்த்து) ஏ வையாபுரி, அவன் சொல்வது ஸரியல்ல, நீ ஸரியாய் சொல்.

வையாபுரி:—'வாளக்காங்க.'

இன்ஸ்:—அல்ல, அது பழம்தான்-வாழைப்பழம் என்று ஸரியாய் உச்சரித்து சொல்.

பையன்கள்:-(எல்லோரும் சேர்ந்து பலத்த குரலாய்) "வாளப்பளம்."

இன்ஸ்:-(உபாத்தியாயர் மாயாண்டி கவுண்டரைப் பார்த்து) என்ன ஐயா, பையன்களுக்கு இதுகூட சொல்லத் தெரியவில்லை; வாழைப்பழம் என்று ஸரியாய் உச்சரிக்கும்படி சொல்லிக்கொடும்; பார்க்கலாம்.

உபா:—(பையன்களை பார்த்து) எல்லோரும் இன்ஸ்பெக்டர் ஐயா சொல்லுகிறுங்களே அப்படி சொல்லுங்கள். கேட்கட்டும்.

இன்ஸ்:—(தனக்குள் சிரித்துக் கொண்டு) உபாத்தியாயரைப் பார்த்து அது எவ்வாறு, என்பதை நீர்தான் சொல்லுமே.

உபா:—அடுத்த பக்கம் "மீன் பாடம்" பையன்களுக்கு நன்ருய் தெரியும். அதில் கேள்வி கேட்கலாங்க.

இன்ஸ்:—ஸரி, திருச்சிக்கு வண்டி எப்போது வருகிறது?

உபா:—இன்னும் அரைமணி இருக்கிறது. $3\frac{1}{2}$ மணிக்கு வரும்.

இன்ஸ்:—ஸரி, நான் முன்பாக போகிறேன். ஒரு 25 தேங்காயும் 10 இளநீரும் ஸ்டேஷனுக்கு சீக்கிரம் அனுப்பி விடும்.

பரிசாரகன் வீட்டுக்குடையவரைப் பார்த்து:—நீங்கள் சிறு பிள்ளைகளுக்குக் கூடவா அழைப்புக் கடிதங்களை அனுப்பியிருந்தீர்கள் ?

சொந்தக்காரர்:—இல்லை. அழைப்புக் கடிதங்களில் பிள்ளைகளுக்கு அனுமதியில்லை என்று அச்சடிக்க மறந்துவிட்டேன்.

* * *

ஒரு வீட்டில் ஒண்டு குடியாக இருந்த ஒருவர்மேல் அவர் மனைவி சந்தேகம் கொண்டாள். அதைப் பரிக்ஷை பார்க்க அவள் ஒரு தந்திரம் செய்தாள். சில நாள் அவள் வேறு அறையில் தனியாகப் படுத்திருந்து ஒருநாள் பாதி இரவில் எழுந்து வந்து கணவன் கைகளைப் பிடித்தாள்.

கணவன்:—அது யார் ?

மனைவி:—உமது மனைவி தூங்குகிருள். நான் சரஸ்வதி.



மஹிஷங்களின் மகா நாடு

—:(o):—

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

செங்கற்பட்டிலுள்ள பிரசித்தி பெற்ற பெரிய ஏரியின் கரையிலுள்ள விசாலமான புல் வெளியிலே, ஏராளமான மஹிஷங்கள் (எருமைகள்) ஒருங்கு கூடியிருந்தன. காட்டெருமைகள் முதல் நாட்டெருமைகள் வரையில் பலவகைப்பட்ட எருமைகளும் அங்கு காணப்பட்டன. அவை யெல்லாம் அவ்வாறு ஒருங்கு கூடியிருந்ததைக் கண்டவுடன், ஏதோ ஒரு முக்கியமான காரணத்தை முன்னிட்டே அவ்வாறு கூடியிருக்கின்றன என்பதை நான் எளிதில் அறிந்து கொண்டேன். நான் அக் காட்சியைப் பார்த்து வியந்து கொண்டிருந்த போதே, காட்டெருமை ஒன்று எழுந்து நின்று பின்வருமாறு மனிதர்களைப்போல் பிரசங்கம் செய்யத் தொடங்கியது:—

"சகோதரிகளே! சகோதரர்களே!! நமக்கு மிகவும் பிரியமான இப் பெரிய ஏரியின் கரையிலே, நீங்க ளெல்லோரும் ஒருங்கு கூடி யிருப்பதைப் பார்க்கப் பார்க்க என் மனம் பெரிதும் பரவசமடைகிறது. மனித ஜாதியிலுள்ள பலவகைக் குலத்தினரும் மகாநாடு கூடித் தத்தம் குல முன்னேற்றத்திற்கான தீர்மானங்களைச் செய்துவரும் இக் காலத்திலே, நாம் மட்டும் நமது குல முன்னேற்றத்தைக் கவனியாதிருந்து வருவது நலமோ? பழந்தமிழ் நாட்டிலே, நாம் எவ்வளவோ சிறப்புடன் வாழ்ந்திருந்தோம். செந்தமிழ்ப் புலவர்களும் ஆண்டவனது அருள் பெற்ற மெய்யடியார்களும், தமது பாடல்களில் நம்மைப் பற்றிப் பலவாறு வருணித்துப் பாடியிருக்கின்றனர்.

தற்காலத் தமிழ் நாட்டிலோ, நமக்குப் பங்காளிகளைப் போலிருந்து வரும் பசுக்களுக் கிருக்கும் மதிப்பும் சிறப்பும் நமது குலத்தினருக்கு இல்லை. யாரோ புலவர்கள் சிலர் பசுக்களின் உடலில் எண்பத்து நான்கு தேவதைகள் நித்திய வாசம் செய்வதாக எழுதி வைத்து விட்டுப் போய் விட்டனர். அதைப் பார்த்து விட்டு, பற்பல மனிதர்கள் பசுக்களைக் கை கூப்பி நமஸ்கரிக்கின்றனர். நம்மைப் பார்த்தாலோ, அவர்கள் மிகுந்த வெறுப்புடன் விலகிச் சென்று விடுகின்றனர். மனிதர்களின் மரண வேளையிலே, அவர்களுக்குத் தமது தலைவராகிய யமதர்மருடன் காட்சியளிப்பவர் நமது குலத்தனிப் பெருந் தலைவராகிய மஹிஷதேவர் என்பதைப் புராணிகர்கள் சொல்லக் கேட்டிருந்தும், நம்மை அவமதிக்கத் துணிந்து நிற்கும் மனிதர்களின் மனக் கொழுப்பை என்னென்பது?

திருவாய்ப் பாடியிலே, சர்வலோக நாயகனாகிய திருமால் கண்ணபிரானாக அவதரித்திருந்த காலத்திலே, ஆயர்களும் ஆய்ச்சியர்களும் நம்மையும் பசுக்களையும் சமமாகவே மதித்து நடத்தி யிருக்கிறார்கள். "கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறு வீடு—மேய்வான் பரந்தனகாண்"

விட்டாள். ஐயோ! இதென்ன அனியாயம்! தான் ஓடியாடிச் சம்பாதிக்கும் பணத்தை மிச்சப்படுத்தியும் வைக்காமல் குடும்பத்திற்காகச் சில வழிக்கும் என் காதனையுமா இப்படித் திட்டுவது?

"அம்மா, அவளுக்குப் புடவை கிழிந்து விட்டதே என்று வாங்கி வந்தேன். உங்களுக்கு அடுத்த மாதம் வாங்கி விடுகிறேன். இதற்காக எல்லோருடைய மனதும் புண்ணாகும்படி ஏன்பேசுகிறாய்!" என்றார் என் காதலன்.

"ஆமப்பா, உனக்கு எங்கள் மனம் புண்ணானால் ஒன்றுமில்லை. நேற்றைக்கு வந்தவளை ஏதாவது கொஞ்சம் சொல்லி விட்டால் உன் உயிரே போய்விடும். இது என்ன கலிகால மகிமை."

"அம்மா, தயவு செய்து இனிமேல் இதுமாதிரி வார்த்தைகள் பேசாதே. என் மனது புண்ணாகிறது. இப்படியெல்லாம் பேச உனக்கு நான் என்ன கெடுதல் செய்துவிட்டேன்."

"ஆமாம். நான் பேசினால் உனக்குப் பிடிக்குமா? உன் ஆம்படையாள் பேசினால் ஈ என்று பல்லைக்காட்டிக் கொணடு இருப்பாய்" என்று மேன் மேலும் என் மாமி பேசிக்கொண்டே போக அங்கே அதற்குமேல் நிற்கப் பிடியாமல் என் நாதனும் வேறு வார்த்தை பேசாது தன் வேலையைப் பார்க்கச் சென்று விட்டார்.

ஆகா என்ன உலகம்! சிறு வயதில் எத்தனையோ வாஞ்சையாகக் குழந்தைகள் என்ன திட்டினாலும் அதை மங்கள வாழ்த்தாகக்கொண்டு அவைகளை உச்சி முகர்ந்து முத்தமிடும் தாயார், பின்னர் அம் மக்களுக்கே கலியாணமாகி நாட்டுப் பெண் வீடு வந்ததும் அதே மக்கள் ஒரு பேச்சு பேசினால் அதில் இல்லாத அர்த்தங்களையெல்லாம் உண்டு பண்ணிக்கொண்டு ஏன் தன் அருமருந்தென்ன பிள்ளையை வெறுக்க ஆரம்பிக்கிறாள். வெறுக்காவிட்டாலும் பழைய அன்பு ஏன் மாறி மாறி அவனிடம் அவநம்பிக்கையும், அவன் வார்த்தையில் வெறுப்பும் கொள்கிறாள். நாட்டுப்பெண் வீடு வந்தால் பிள்ளை மனம் சிதறுவது திண்ணம் என்ற மூட எண்ணத்தினாலோ!

அன்றையதினம் வீட்டுவேலை எல்லாவற்றையும் முடித்த பின்னர் நான் படுக்கை யறைக்குச் சென்றேன். என் நாதர் ஏதோ கணக்கு வழக்கு பார்த்துக் கொண்டிருந்தார். நானும் இருவர் படுக்கையும் விரித்துவிட்டுப் படுத்தேன். படுத்த மறுநிமிடம் காரியம் செய்த களைப்பால் என்னையு மறியாது கண்ணயர்ந்தேன். சிறிதுநேரம் கழித்து "என்ன சாஸா! அதற்குள் தூங்கி விட்டாய்" என்று என் நாதன் குரல் கேட்டதும் விழித்துக்கொண்டு "இல்லை. நாதா! நிரம்ப அலுப்பாயிருந்ததால் என்னையு மறியாது தூக்கம் வந்து விட்டது" என்று எழுந்தேன்.

"காரிய அலுப்பினால்தான் தூங்கி விட்டாயோ அல்லது இவனிடம் தான் என்ன பேச்சு வேண்டியிருக்கிறது என்று உறங்கி விட்டாயோ" என்று கேட்டார் என் காதலர். என் மனம் அப்பொழுது எப்படி இருக்கும்? மாமியாருக்குத்தான் நான் நீலி என்றால் நாதனும் என்னை அப்படியா நினைத்திருக்கிறார்?

ஆனால் மறுநிமிடமே நாதர் தன்

வார்த்தைக்கு வருந்தி என் நெற்றியில் இருந்த காயம் அவர் கண்ணுக்குத் தென்படவே, "கண்ணே, அஃதென்ன காயம்" என்றார்.

"நாதா, ஒன்றுமில்லை. தப்பித்தவறி தங்கள் தாயார் கால் என்மேல் பட நான் இடறி விழுந்ததால் இவ்வற்பகாயம் ஏற்பட்டது" என்று நானும் பதில் சொன்னேன்.

காலை 4 மணி யாகிவிட்டது. வழக்கம்போல் எனக்குத் தூக்கம் போனதும் போகாததுமாய் இருக்கும்போதே 'ஏண்டி. எத்தனை நாழி இன்னும்' என்று ஒரு தொனி கேட்கவே பார்த்து எழுந்தேன். எழுந்து என் படுக்கை யறையைவிட்டு வெளியேறினது தான் தாமதம். "ஏ. நாயே. என்னடி கோள் சொன்னாய். நான் உன்னை உதைத்தேனா? இப்படியெல்லாம் நீ நடந்தால் இங்கிருந்து வாழ்ந்தமாதிரித்தான்" என்ற உபசார வார்த்தைகளுடன் என் மாமி என் எதிரே தாண்டவ மாடினாள்.

அதற்குள் என் நாத்திமார்களும் "இது கிடக்கிறது அம்மா. ஆம்படையானைக் கண்டதும் காணாததுமாய், நாங்கள் பார்த்ததும், பார்க்காததுமாய் தனுக்கிக் குலுக்கிப் பேசுவதை யல்லவா நீ பார்க்கவேண்டும். தேவடியாள் கெட்டாள் போ. சிவனே என்று அந்த தொழிலை ஏற்றுக்கொண்டாலும் பணமாவது வரும்" என்று கூசாது மொழிந்தனர். தன் கணவனோடு பேசுவது ஒரு இழிந்த செயலாமே! என்னே விந்தை! தங்களுக்குக் கீழ்ப்பட்டவள் என்றால் என்ன வேண்டுமானாலும் சொல்வது இவ்வுலக இயற்கையா? அல்லது தான் பர்த்தாவோடு சுகமாய் இருக்க முடியாமல் கஷ்டப்படுவதால் பிறர் சுகமா யிருப்பதைப் பார்க்கப்பெறாத காரணமா?

என்ன நாட்டுப்பெண் வீடுவந்து விட்டால்தான் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்துகொண்டு அவர்களை அடிமைகள் போல வேலை யேவி, எல்லா வேலையையும் பொறுமையோடு சரிவரச் செய்தாலும் அவர்களிடம் கடிந்து கொள்வதுதானா மாமியார், நாத்திமார்களுக்கு அழகு? அவர்களுக்குக் கொண்டாட்டமா யிருப்பது மருமகளுக்குத் திண்டாட்டமாக வல்லவோ முடிகிறது. இக் கஷ்டம் என்னை விட்டு எப்பொழுது நீங்குமோ! ஏழை அழுத கண்ணீர் வீணாகுமா? அது கூரிய வாளை யல்லவா ஒக்கும்.

சகோதரிகளே! என் மனோவேதனை தாங்காமல் உங்களிடம் சொல்லியாவது கொஞ்சம் தணித்துக் கொள்ளலாமென்று உங்களிடம் கூறி விட்டேன். நீங்கள் எப்படியோ என்ன! என் மாமியாரிடம் சொல்லி அவளை நல்வழிக்குக் கொண்டு வரப் போகிறீர்களா!

என்னைக் கிணற்றில் தள்ளிக்கொன்று விட்டுப் பின்னர் என் மாமியிடம் இதைப் பற்றிச் சொல்லுங்கள். ஈச்வரா! இதற்காகவா உங்களிடம் சொன்னேன்.

ராஜா தேசிங்கு

—:(0):—

("இரஸிகன்.")

அப்பாடா! கடைசியாக, சரித்திரப் படமொன்றும் தமிழ்ப்பேசும் படக்காட்சி யுலகில் தோன்றிவிட்டது. 'தமிழ்ப் பட முதலாளிகள் புளித்துப்போன புராண இதிகாசக் கதைகளையே திருப்பித்திருப்பிப் படமெடுத்துக் கொண்டிருக்கிறார்களே! சமூகக் கதைகளையும், சரித்திரக் கதைகளையும் படங்களாகத் தயாரிக்கக் கூடாதா!' எனக் கலாரஸிகர்கள் அடிக்கடி முறையிட்டு வந்ததன் பயனாக இரண்டொரு சமூகப்படங்கள் வெளி வந்தன. இப்போது, சரித்திரப் படமொன்றும் வெள்ளித்திரைக்கு வந்துவிட்டது. இச் சரித்திரப்படத்தை முதன் முதலாகத் துணிந்து தயாரித்த ஈரோடு ராஜேஸ்வரி டாக்கீஸாரைத் தமிழ்மக்கள் பாராட்டியே தீரவேண்டும்.

ராஜா தேசிங்கு சரிதை தமிழ் நாட்டு வீரமன்னனொருவனின் வீரபராக்கிரமத்தையும், தியாக வுணர்ச்சியையும் விளக்கிக் காட்டுவதொன்றாகும். பழந்தமிழரசர்களின் ஒப்பற்ற வீரத்தைப் படம் பிடித்துக் காட்டுவதற்கு ராஜா தேசிங்கின் வீர சரிதையொன்றே அமையும். சுமார் 260 வருஷங்களுக்கு முன் செஞ்சிக் கோட்டையில் சிறந்து விளங்கிய ராஜா தேசிங்கின் சரிதையை யறியாதார் தமிழ் நாட்டில் மிகச் சிலரே யிருப்பர். குக்கிராமங்களில் வசிக்கும் மக்கள் ஓய்வு நேரங்களில் வீராதி வீரனான ராஜா தேசிங்கின் சரிதையைப் படிப்பதையும், அவனது வீரச் செயல்களைப்பற்றிப் பிரமாதமாகப் பேசிப் புகழ்ந்து கொண்டிருப்பதையும் இன்றைக்கும் காணலாம்.

இவ்வீரர் திலகத்தின் சரிதையைப் படிக்கும் பாக்கியம் எட்டாவது வயதிலேயே எனக்கு வாய்த்தது. சிறந்த தமிழ்க் கவிஞரான புகழேந்திப் புலவர் பாடியதாகக் கூறப்படும் "ராஜா தேசிங்கு கதை" என்ற நாட்டுப் பாட்டை, சகோதரிகளுக்காக அர்த்தம் தெரியாது தட்டுத் தடுமாறி—ஆனால் உணர்ச்சியோடு—படித்த காலம் அது. கலாசாலை படிப்பு மூளையிலேறிய பிறகு, போறிஞரும், நாடகாசிரியருமான சதாவதானம்—தெ. கிருஷ்ணசாமி பாவலர் சரித்திரச் சான்றுகளோடு எழுதிய தேசிங்கு ராஜன் சரித்திரத்தை நாலைந்து வருடங்களுக்கு முன் ஆர்வத்தோடு படித்து பெருமித முற்றேன்.

ஒரு குதிரையின் பொருட்டாக தன் தந்தை தரணிசிங் மன்னன் டெல்லி பாதுஷாவான ஷா ஆலமால் சிறை வைக்கப்பட்டான் என்பதை, தாயின் மூலமாக அறிந்த தேசிங்கு ராஜன் உடனே டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்று பஞ்சகல்யாணி குதிரையை அடக்குவதும், பிறகு பாதுஷா

வால் பாராட்டப்பட்டு மந்திரி குமாரி பத்மினியை மணப்பதும், கடைசியில் ஆற்காட்டு நவாப், (ஷா ஆலம் பாதுஷாவால் வஜா செய்யப்பட்ட) கப்பத்தைக் கட்டும்படி கேட்டதனால், சீற்றங் கொண்ட தேசிங்கு ராஜன் உடனே நவாபின்மீது படையெடுத்துச் சென்று எதிரிகளை முறி

ராஜா தேசிங்கில் மகம்மத் கானாக நடிக்கும் வி. எஸ். மணி.

யடிப்பதும், தேசிங்கின் உயிர்த் தோழனான மகம்மதுகான் தேசிங்கு; நவாபின் மீது படையெடுத்துச் செல்கிறான் எனக் கேட்டதும் மணக் கோலத்தோடேயே சண்டைக்குப் புறப்பட்டுப்போய் எதிரி சேனைகளைப் பஞ்சாய்ப் பறக்கடிப்பதும், வெற்றியோடு திரும்புகையில் வஞ்சகனான தாவூத்கானால் பின்புறமாகத் தப்பாக்கியால் சுட்டுவீழ்த்தப்படுவதும், தனக்கு வெற்றிகிடைத்த தாயினும், தனது ஆருயிர்த் தோழன் மாண்டான் என்பதைக் கேட்டதும், உலகவாழ்க்கையை வெறுத்து போர்க்களத்திலேயே மார்பில் வாள் முனையைத் தாங்கி உயிர்விடுவதும், தன் கணவன் வீர சுவர்க்கம் புகுந்தான் எனக் கேட்ட பத்மினி உடன் கட்டையேறுவதும் ஆகிய வரலாற்றைப் படித்த மக்கள் வீராதிவீரன் தேசிங்கு ராஜனை எவ்வாறு மறக்க முடியும்? இத்தகைய வீரனது சரித்திரம் தமிழ்ப்படஉலகில் புத்துயிர் பெற்று காட்சி யளிப்பதைப் பார்க்க விரும்பாதார் யார்?

ஈரோடு ராஜேஸ்வரி டாக்கீஸார் தயாரித்திருக்கும் இந்த "ராஜா தேசிங்கு" படத்தில் ஸ்ரீ. டி. கே. சுந்தரப்பா, ஸ்ரீமதி கே. ஆர். சாரதாம்பாள், ஸ்ரீ வி. எஸ். மணி, ஸ்ரீ. மதுரை ஆச்சாரி முதலியோர் முக்கிய பாத்திரங்களேடுத்து நடிக்கின்றனர்.

ஸ்ரீ. சுந்தரப்பாவின் திடகாத்திர தேகமும், கம்பீரத் தோற்றமும் ராஜா தேசிங்காக அவர் வேடம் பூண்டு நடிப்பதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவரே என்பதை யெடுத்துக் காட்டின. தன் தந்தை சிறைப்பட்டிருக்கிறார் எனக்கேட்டதும் தேசிங்கு கனன்றெழு மிடமும், டெல்லி பாதுஷாவிடம் சென்று அவன் குதிரையை யடக்குவதாக வீரமொழி பகருங் கட்டமும், பவானி கோயிலில் பத்மினியைச் சந்திக்கையில் அவளது அழகால் கட்டுண்டு நின்று பிறகு காதல் பார்வை பார்த்துச் செல்லு மிடமும், கடைசியாக, தன் தோழன் மகம்மத்கான் கொலையுண்டான் என்பதைக் கேட்கு மிடத்தும், அவனது சமாதியின்மீது விழுந்து பிரலாபிக்கும் கட்டமும் ஸ்ரீ சுந்தரப்பாவின் சமயோசித நடிப்புக்குச் சிறந்த உதாரணங்களாகும். இன்னும் போதிய அவகாசமுங்கொடுத்து டைரக்டரால் நன்கு பயிற்சி செய்யப்பட்டிருப்பின், ஸ்ரீ சுந்தரப்பா, குதிரையை அடக்குமிடத்தும், நவாபோடு சண்டை செய்யுமிடத்தும் வீரவுணர்ச்சியை நன்கு

ஸம்சார நௌகா

தயாராகிவிட்டது!

ஒளியும் ஒலியும் சுத்தம்

நடிப்பும் ஜோடிப்பும் நயம்

ச
ம்
சா
ர
நௌ
கானம் கா நிறைந்தது

கன்னட பாஷை பேசும் படம்

உயரிய உன்னத நீதிகள்
ஆக்டர்கள்

ச
ம்
சா
நிறை ர ந்த
நௌ
கா

சீக்கிரம் வெளிவரும்.

படம் தயாரிப்பவர்:

தேவி பிலிம்ஸ்

லிமிடெட்,

45, தங்கசாலை விதி,

மதராஸ்.

வெளிப்படுத்தி நடித்திருப்பாரென்பது திண்ணம்.

ஸ்ரீ சுந்தராப்பா இனிய சாரீர சம்பத்துடையவராயிருப்பதால், அவர் பாடும் பாடல்கள் கேட்பதற்கு இனிமையாயிருக்கின்றன. அவர் பாடியவைகளில் "பாதபங்கயம் பணிந்தேன்," "பெண்மணியே வீரக் கண்மணியே," "அதிபால்ய வயதிலே உயிர்த் தோழனாய்" என்னுந் தலைப்புள்ள பாடல்கள் கேட்டு இன்புறத்தக்கவை. ஸ்ரீ. சுந்தராப்பா உணர்ச்சியோடு பேசி சம்பாஷணைக்கு ஜீவனளிக்கிறார். நாடக உலகில் எவ்வாறு வெகு விரைவில் பெயர் பெற்றாரோ, அவ்வாறே சினிமா உலகிலும் புகழ்பெற்று வரும் ஸ்ரீ. சுந்தராப்பாவை நான் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, ஸ்ரீமதி. சாரதாம்பாள், தேசிங்கின் தாய் ரமாபாயாக நடிக்கிறார். இது அவருக்கு ஏற்ற வேடமேயாகும். அவர் ஆபாசத்திற் கிடமின்றிச் சமயோசிதமாக நடித்தும், பாடியும் ஏற்கனவே சம்பாதித்துள்ள பேரை நிலைநாட்ட முயல்கிறார்.

பத்மினியாக நடித்த ஸ்ரீமதி லட்சுமியின் முகத்தைப் பார்க்க சகிக்கவில்லை, இளம் வயதினளான அப்பெண்மணிக்கு இனிய சாரீர சம்பத்திருக்கிறது. எனவே, அவள் பாடும் பாடல்கள் கர்ணாமிருதமாயிருக்கின்றன. ஆனால் அவள் நடுங்கிய குரலோடு பேசுவதுபோல் பேசுகிறாள். அதற்குக் காரணம் அவள் கோவா நாட்டு மங்கையாதலால், மலையாள பாஷையின் போக்கு கலந்திருப்பதேயாகும். காதல் மொழி பேசும்போதும், சோகபாவத்தை வெளிப்படுத்தும்போதும் அவள் முகத்தை ஒரேவிதமாய் வைத்திருப்பது பெருங்குறையாகும். என் செய்வது! படக்காட்சியுலகில் அடியெடுத்து வைத்தது இதுவே முதல் தடவை; அதிலும் போதிய பயிற்சியில்லை. அப்புறம் நடிப்புக்குக் கேட்கவா வேண்டும்!

ஸ்ரீ. வி. எஸ். மணி மகம்மதுகான் வேஷத்துக்கு தகுந்தவரே. அத்துடன் அவரிடம் வீர உணர்ச்சியும் துடிதுடிப்பும் இருக்கிறது. மகம்மத்கான் மணவறையில் இருக்கும்போது, தேசிங்கு சண்டைக்குப்புறப்படும் செய்தி வருகிறது. அந்த லிகிதத்தை வாங்கி படிக்கிறான் மகம்மத்கான். பூமாலைதான் முக முழுவதையும் மறைத்திருக்கிறதே! எவ்வாறு கடிதத்திலுள்ள விஷயத்தைப் படிக்க முடிந்தது. இது சமயோசித நடிப்புக்குப் பெருங் குற்றமல்லவா! முதலில் ஆத்திரத்தில் மகம்மத்கான் மலர்மாலை மூடிய முகத்தோடு பார்ப்பதாயிருந்தாலும், அடுத்த கணம் உணர்வு பெற்று மாலையை ஒரு புறந் தள்ளிவிட்டுப் பார்த்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்.

மகம்மத்கான் தாயாக வேடம்பூண்ட ஆந்திரதேச நங்கையான ஸ்ரீமதி லீலா இப்படத்தில் ஒரு சில நிமிடங்களே நடித்தாலும் நல்ல உணர்ச்சியோடு நடித்து நல்ல பெயர் வாங்கிவிட்டார். 'மார்பில் சந்தனத்தோடும் கையில் கங்கணத்தோடும் அரையில் மஞ்சள் ஆடையோடும் போர்க்களத்துக்குப் போகக்கூடாதப்பா!' என நியாயங்கூறி மகம்மத்கானைத் தடுக்குமிடத்து ஸ்ரீமதி லீலா காட்டிய நடிப்புத் திறமை யாவராலும் பாராட்டத்தக்கதாகும்.

மற்றப்படங்களைப் போலல்லாது இப்படத்தில் கதைக்குத் தொடர்பாகவே ஹாஸ்ய பாகம் இருப்பது மெச்சத்தக்கது. ஸ்ரீ மதுரை ஆச்சாரியும், ஸ்ரீமதி தனலட்சுமியும், குதிரைக்கார தம்பதிகளாக வந்து ஹாஸ்யமாக நடித்தும் பேசியும் பார்ப்பவர்களைக் குதூகலிக்கச் செய்கின்றனர். ஸ்ரீ மதுரை ஆச்சாரி ராஜா தேசிங்கு கதையிலிருக்கும் பாடல்களைப் பாடி மகிழச் செய்கிறார். இவரது ஹாஸ்ய நடிப்பு இப்படத்துக்கே ஜீவனையளிக்கிறது என்றால் மிகையாகாது.

ஷா ஆலம், தாணி சிங், தாவுத்கான், ஸைதல்லாகான் முதலியவர்களாக நடித்தவர்களுக்கு வேடப் பொருத்தம் நன்கு அமைந்திருக்கிறது.

இப்படத்தில் காட்டப்படும் யுத்தக் காட்சி பார்க்கத்தக்கதாகும். இதுவரை

வெளிவந்த சில படங்களில் வடநாட்டுப் படங்களில் வந்த யுத்தக் காட்சிகளை யெடுத்தாளுவது சகஜமாக இருந்தது. அவை சில சமயங்களில் சேர்க்கப்படும் படங்களுக்குச் சிறிதும் பொருத்தமில்லாமலே இருக்கும். ஆனால், இந்த யுத்தக் காட்சியோ இப்படத்துக்காகவே தயாரிக்கப்பட்டதாகத் தெரிவதால், இயற்கையாக இருக்கிறது. துப்பாக்கி, பீரங்கி வெடிகள் தத்ரூபமாகப் போர்க்களக் காட்சியை நிரூபிப்பதாக இருக்கின்றன.

''ராஜாதேசிங்' கில் கதாநாயகியாக நடிக்கும் ஸ்ரீமதி. எம். லட்சுமி.

இரண்டொரு நாள் நடந்ததாகக் கூறப்படும் தேசிங்குராஜன்—நவாப் சண்டையில் பஞ்சம் ஏற்பட்டுவிட்டதாகவும், குடிமக்கள் தரித்திரத்தால் வாடுவதாகவும், ராணி அவர்களுக்கெல்லாம் உதவி செய்வதாகவும் இப்படத்தில் காட்டுவது

தயாராய்விட்டது!

ஆரம்ப தேதியை ஆவலுடன் எதிர்பாருங்கள்!

நடிக மன்னர்-M. K. தியாகராஜ பாகவதர்

திரைக் குயில்-M. S. தேவசேனா

இவ்விணையற்ற நடிக நக்ஷத்திரங்கள் நடிக்கும் படமே

உணர்ச்சி தரும் அபார நடிப்பு!
அறிவைப் புகட்டும் அரிய நீதிகள் !!
உடல் மயிர் சிலிர்க்கும் கத்திச் சண்டைகள் !!!
அரிய நடிகர்களின் அபார சங்கீதம் !!!!
இவை யாவும் நிறைந்தது.

"சத்தியசீலன்"

அல்லது

(தந்தைசொல் மறவாத் தனயன்)

ஹாஸ்ய நடிகர்

M L. நாராயண ராவின் காமிக்

பார்க்கத்தக்கது—சிரிக்கத்தக்கது.

படம் வேண்டுவோர் உடனே எழுதுக:—

தியாகராஜ டாக்கீஸ்,

திருச்சினாப்பள்ளி.

பொருத்த மற்றதும், அசம்பாவிதமு மாகும். இப்பாகம் ஆர். ருக்மணி என்னும் குழந்தை நடிகைக்கு இடமேற்படுத்திக் கொடுக்கவே சிருஷ்டிக்கப்பட்டதோ என்றும் அநுமானிக்கக் கூடியதா யிருக்கிறது. எதைச் சேர்த்தாலும் பொருத்த மிருக்க வேண்டாமா !

செஞ்சிக்கோட்டை, கோலாப்பூர், பான்ஹாலா ஆகிய இடங்கள் தத்ரூபமாகப் படமெடுக்கப்பட்டிருப்பது பாராட்டத் தக்கது. கண்ணைக் கவரும் இயற்கைக் காட்சிகளும், சீன் ஜோடனைகளும் பார்க்கத்தக்கவை. போடோகிராபியும் ஸவுண்ட் ரிகார்டிங்கும் நன்ருகவே யிருக்கின்றன.

இக்கதைக்குச் சம்பாஷணை எழுதித் தந்தவர் "சினிமா உலகம்" ஆசிரியரும், தமிழ்ப் பண்டிதருமான பா. பக்கிரிசாமி செட்டியாராவர். நான் பலமுறை சம்பாஷணை அமைப்பதைப் பற்றிக் கூறி வந்திருக்கிறபடி அந்தந்த பாத்திரத்திற் கேற்ப சம்பாஷணையை இயற்கையாகவும், உணர்ச்சி ததும்பவும் எழுதியிருக்கும் பண்டித—பி. எஸ். செட்டியாரைப் பாராட்டாதிருக்க முடியாது.

பாட்டுகளை மதுரை—பாஸ்கர தாஸ் பாடியிருக்கிருர். சில இடங்களில் பொருள் புஷ்டியின்றி பொருத்த மின்றிப் பாடல்கள் கட்டப்பட் டிருந்தாலும், இனிய சந்தமமைந்து சாஹித்யத்துக்கு ஏற்றதா யிருப்பது குறிப்பிடத் தக்கது.

இப் படத்தை டைரக்ட் செய்த ஸ்ரீ ராஜா சந்திரசேகர் இன்னுஞ் சிறிது சிரத்தை யெடுத்திருப் பா ராஞல், நடிகர்களை மேலும் திறமையாக நடிக்கச் செய்திருக்கலாம். என்ன சொல்லியுங் கேளாது டெல்லி செல்லும் தன் மகன் தனது புருஷனைப்போல் எங்கு சிறைப்பட்டு விடுவானே என்று பயந்த ரமாபாய் மூர்ச்சையாகி விழுந்து, தேசிங்கு செஞ்சியிலிருந்து நாசிக் போகும்வரை யிருந்து அப்புறமே எழுந்திருப்பது, தாணி சிங் சிறையிலிருந்து பிரலாபிக்கும்போது கூட மேல் வேஷ்டியைத் தோளில் போட்டுக் கொண்டிருப்பது, மகம்மதுகான் முகத்தை மூடியிருக்கும் மண மாலையை நீக்காமலே விசிதத்தைப் படிப்பது, பத்மினி தன் கணவன் முகம் எவ்வளவு மலர்ச்சியாக இருக்கிறது என்று கூறிய பிறகே இறந்த தேசிங்கை புன்னகை கொள்ளச் செய்வது போன்ற சிறு பிழைகளையும் நிகழ வொட்டாது தடுத்திருக்கலாம்.

* * *

ராஜா தேசிங்கு படத்தோடு, ஸ்ரீமதி ருக்மணி தேவியின் பாத நாட்டியமும் காட்டப்படுகிறது. இது ஒரு சிறந்த அம்சமாகும். ஸ்ரீமதி ருக்மணி தேவி ஒரு பதமும், ஒரு ஜதிஸ்வரமும், ஒரு ஜாவளியும் பாடி அபிநயத்தோடு நாட்டியஞ் செய்திருக்கிருர். இவரது நடனங்கள் கலாரஸிகர்களுக்குச் சிறந்த விருந்தாக அமைந்திருக்கிறது. காம்போதி ராகத்தில், "பதறி வருகுது உருகு தென்னுவி பதைக்குதே வகை சொல்லடி—சற்று நில்லடி—மனங்கல்லோடி—அடி தனுக்கு குனுக்கு மினுக்கென்ன போடி" என்ற பதத்தைப் பாடி அபிநயஞ் செய்யும் போது ருக்மணி தேவி யாவர் மனதையும் ஒருங்கே கொள்ளை கொள்ளுகிருர். நடனத்துக்கேற்ப ஸ்ரீமதி சாராநாயகியின் பின்பாட்டு இனிமையா யிருந்தது. அச்சமயத்தில் நாமெல்லோரும் இந்திர லோகத்தில் இருப்பது போலவே கனவு காண்கிருேம். நாட்டியஞ் செய்வதற்கிசைய தேக அமைப்பு ருக்மணி தேவி பெற்றிருப்பது விசேஷமாகும். அவர் தரித்திருந்த உடையும் அலங்காரமும் மிகப் பொருத்தமாக அமைந்திருந்தது. பிரம்மஞான சபையில் முக்கிய ஸ்தானம் பெற்று "உலகமாதா" என்றழைக்கப்படுபவரும், மேற்படி சபைத் தலைவரான டாக்டர் அருண்டேலின் மனைவியுமான ஸ்ரீமதி ருக்மணி தேவி பரத நாட்டியக் கலையின் மறு மலர்ச்சியைக் காணப் பாடு பட்டு வருவது யாவராலும் போற்றத்தக்கது. இப் படத்தில் டாக்டர் அருண்டேலும் பாத நாட்டியக் கலையைப் பற்றிப் பிரசங்கஞ் செய்திருக்கிருர். இது கேட்கத்தக்கது.

சென்ற விடமெல்லாம் சிறப்பு!

மகத்தான 4-வது வாரம். 3 காக்ஷிகள் தினசரி.

கிரௌன் டாக்கீஸில் 1-8-36 சனிக்கிழமைமுதல்

ராஜா தேசிங்கு

அடையாறு ஸ்ரீ ருக்மணிதேவியின் பரத நாட்டியத்துடன்
திருச்சி பாரமௌண்ட் டாக்கீஸில் 2-வது வாரம்.

உங்கள் நகரத்திற்கு வருகிறார் வீரர்.

ராஜேஸ்வரி டாக்கீஸ், ஈரோடு.

மேல்நாட்டு சினிமா படங்களைப்போல் உண்மை நடிப்புடன்கூடிய உயர்தர தமிழ் படம் ஒன்று வருவது எக்காலம். ? —அதி விரைவில்!

நாவலரசர் J. R. ரங்கராஜு இயற்றிய

இணையற்ற தமிழ் நாவல்

"சந்திரகாந்தா"

தமிழ் நாட்டிற்கு தனிப்பெருமை யளிக்க வரும்
உன்னத பேசும் படமாக தயாராகிறது.

ஜுபிடர் பிக்சர்ஸ் லிமிடெட், திருப்பூர்.